# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

**கோவை- 21.**

# கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

# தமிழ்த்துறை

(2017-2018)

**பகுதி – I, தமிழ்ப் பாடத்திட்டம்**

**முதல் பருவம்:17LAU101**

(முதலாமாண்டு இளநிலை **கலையியல்**
பட்ட வகுப்புகளுக்குரியது)

# (For I-UG Arts Degree Classes)

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

## தமிழ்த்துறை

## பகுதி - I தமிழ்ப் பாடத்திட்டம் (2017 - 2018)

### (இளநிலை கலையியல் பட்ட வகுப்புகளுக்குரியது)

### (For I-UG Arts Degree Classes)

---

## பொது நோக்கம்

- கற்றல் வழி கருத்து வெளிப்பாட்டுத் திறனை அதிகரித்தலும், சிந்தித்தலை மேம்படுத்துதல்.
- இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வின் நுட்பமான பகுதிகளை உணர்த்துதல். மனித மனத்தினைப் பக்குவப்படுத்துதலில் இலக்கியம் தரும் பங்கினை உணர்த்துதல்.
- வளர்ந்து வரும் சமூகத்தில் அறஉணர்வு, பண்பாடு போன்றவை குறித்து அறிவூட்டல்.
- அரசுத் தேர்வுகளுக்கு மாணவர்களை ஆயத்தமாக்குதல்.

**தாள்கள் வரிசையும் தேர்வுச் செயல்திட்டமும்**

**பகுதி-I தமிழ்**

**இளநிலைப் பட்டவகுப்புகள்**

| பருவம் | தாள் | கற்பிக்கும் நேரம்/வாரம் | தேர்வு மணிகள் | மதிப்பெண் அக/எழுத்து | மொத்தம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| ஒன்று | I | 6 | 3 | 40 / 60 | 100 | 6 |

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

## தமிழ்த்துறை

## பகுதி - I தமிழ்ப் பாடத்திட்டம் (2017-2018)

**பகுதி – I, தமிழ்** **முதல் பருவம்**

**17LAU101 : தமிழ் முதல் தாள்** 6-H,6-C

**(இளநிலை கலையியல் பட்ட வகுப்புகளுக்குரியது)**

**(For I-UG Arts Degree Classes)**

---

**அலகு – I : இக்கால இலக்கியம்: (17 மணிநேரம்)**

**கல்வி :** மகாகவி பாரதியார் – சுயசரிதை - ஆங்கிலக் கல்வி.

**இன்றைய நிலை :** கவிமணி தேசிய விநாயகம் -ஒற்றுமையே உயிர்நிலை

: கவிஞர் அப்துல்ரகுமான் - கால வழு

**மனிதநேயம் :** கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியன் – மலையாளக் காற்று

கவிஞர் தாமரை – மழைக்குறிப்பு

**சூழலியல் :** கவிஞர் வைதீஸ்வரன் -விரல் மீட்டிய மழை

**பெண்ணியம் :** கவிஞர் சுகந்தி சுப்பிரமணியம் – புதையுண்ட வாழ்க்கை

கவிஞர் வைரமுத்து – அம்மா

**வாழ்க்கை :** கவிஞர் தருமுசிவராம் – வாழ்வுப் பாடல்

**இயற்கை :** பாவேந்தர் பாரதிதாசன் – அழகின் சிரிப்பு – வான்.

**அலகு – II : அற இலக்கியம்: (12 மணிநேரம்)**

கொன்றை வேந்தன்: 1 - 50 பாடல்கள்

திருக்குறள்: பண்புடைமை, வினைத்திட்பம் -20 குறள்கள்

பழமொழி நானூறு: 5 பாடல்கள்

வேதநாயகம்பிள்ளை நீதிநூல்: 74 -78 பாடல்கள்

பெருவாயின் முள்ளியார் ஆசாரக்கோவை: 5 பாடல்கள்

**அலகு - III : சிற்றிலக்கியம்: (11 மணிநேரம்)**

மூவருலா: 1-26 கண்ணிகள்

திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்: 2 பாடல்கள்

குற்றாலக்குறவஞ்சி: 5 பாடல்கள்

முக்கூடற்பள்ளு : 5 பாடல்கள்

கலிங்கத்துப் பரணி: போர்பாடியது- 9 பாடல்கள்

**அலகு – IV : கட்டுரை: (10 மணிநேரம்)**

1. உயர்தனிச் செம்மொழி - பரிதிமாற்கலைஞர்
2. கட்டிடக்கலை - அ.இராசமாணிக்கனார்
3. வாழ்க்கை -இளவழகனார்
4. ஆளுமைத்திறன் அறிவோம் - ஸ்ரீகண்ணன்
5. மணற்கேணி - நெ.து.சுந்தரவடிவேலு

**அலகு- V : மொழிப்பயிற்சி: (10 மணிநேரம்)**

1. பொருத்தமான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல்
2. செய்யுள் பொருளுணர் திறன்
3. மொழிபெயர்ப்புப் பயிற்சிகள்
4. கடிதங்கள் மற்றும் விண்ணப்பங்கள் எழுதுதல்

**பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

---

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

**கோவை- 21.**

## கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

## தமிழ்த்துறை

(2017-2018)

**பகுதி– I, தமிழ், தாள்: I 17LAU101**

**பாடத்திட்ட நிகழ்நிலை வரைவுத்திட்டம்**

முதலாமாண்டு, இளநிலை கலையியல்

பட்ட வகுப்புகளுக்குரியது

| | பாடப் பகுதி | மணிநேரம் |
|---|---|---|
| | பாடத்திட்டத்தின் இன்றியமையாமையும், பயன்பாட்டு நோக்கும் | 01 |
| | தமிழிலக்கிய வடிவ வகைமையும்,<br>இலக்கிய வரிசைத் தொகுப்புநிலையும் | 01 |
| | கவிதை: மகாகவி பாரதியார்: சுயசரிதை – ஆங்கிலக் கல்வி | 02 |
| | அற இலக்கியம்: கொன்றை வேந்தன் | 03 |
| | கட்டுரை: ஆளுமைத்திறன் அறிவோம் | 02 |
| | திருக்குறள்: பண்புடைமை | 02 |
| **ஜூலை 2017** | கவிதை: சிற்பி பாலசுப்ரமணியன்: மலையாளக் காற்று | 02 |
| | சிற்றிலக்கியம்: திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் | 02 |
| | கட்டுரை: உயர்தனிச் செம்மொழி | 02 |
| | மொழிப்பயிற்சி: வேலை வேண்டி விண்ணப்பம் எழுதுதல் | 01 |
| | கொச்சைச் சொற்களின் திருத்திய வடிவம் காணல் | 01 |
| | பிற மொழிச் சொற்களை நீக்கி, தமிழ்ச் சொற்களை எழுதுதல் | 01 |
| | திருப்புதல் | 04 |
| | **மொத்த மணிநேரம்** | **24** |
| | அற இலக்கியம்: திருக்குறள்: வினைத்திட்பம் | 02 |
| | கவிதை: பாவேந்தர் பாரதிதாசன்: அழகின் சிரிப்பு-வான் | 02 |
| | கட்டுரை: கட்டடக் கலை | 02 |
| | கவிதை: கவிஞர் வைரமுத்து: அம்மாவுக்கு | 01 |
| | அற இலக்கியம்: பழமொழி நானூறு | 02 |
| | சிற்றிலக்கியம்: மூவருலா | 02 |
| **ஆகஸ்டு 2017** | அற இலக்கியம்: ஆசாரக் கோவை | 02 |
| | கவிதை: கவிக்கோ அப்துல் ரகுமான்: காலவழு | 01 |
| | மொழிப்பயிற்சி: கருத்தரங்கப் பங்கேற்புக்கான அனுமதி வேண்டி விண்ணப்பம் எழுதுதல் | 01 |
| | தொடர்களில் அமைத்து எழுதுதல் | 01 |
| | செய்யுள் பொருளுணர் திறன் | 01 |
| | திருப்புதல் | 06 |
| | **மொத்த மணிநேரம்** | **23** |

| மாதம் | பாடப் பகுதி | மணிநேரம் |
| --- | --- | --- |
| **செப்டம்பர் 2017** | கவிதை: கவிமணி: ஒற்றுமையே உயிர்நிலை | **02** |
| | அற இலக்கியம்: திருக்குறள்: ஆள்வினையுடைமை | 02 |
| | கவிதை: கவிஞர் வைதீஸ்வரன்: விரல் மீட்டிய மழை | 02 |
| | கட்டுரை: மணற்கேணி | 02 |
| | சிற்றிலக்கியம்: கலிங்கத்துப் பரணி | 02 |
| | அற இலக்கியம்: ஆசாரக் கோவை | 02 |
| | கவிதை: கவிஞர் சுகந்தி சுப்ரமணியம்: புதையுண்ட வாழ்க்கை | 02 |
| | சிற்றிலக்கியம்: முக்கூடற்பள்ளு | 02 |
| | கவிதை: கவிஞர் தருமு சிவராம்: வாழ்வுப் பாடல் | 02 |
| | மொழிபெயர்ப்புப் பயிற்சிகள் | 01 |
| | மொழிப்பயிற்சி: நாளிதழின் பதிப்பாசிரியருக்குக் கடிதம் | 01 |
| | திருப்புதல் | 06 |
| | **மொத்த மணிநேரம்** | **26** |
| **அக்டோபர் 2017** | சிற்றிலக்கியம்: குற்றாலக் குறவஞ்சி | 02 |
| | மொழிப்பயிற்சி: நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் | 01 |
| | வினாத்தாள்கள் கலந்துரையாடல் | 04 |
| | கட்டுரை: வாழ்க்கை | 02 |
| | திருப்புதல் | 08 |
| | **மொத்த மணிநேரம்** | **17** |
| | **மொத்த மணிநேரங்கள்** | **90** |

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

**கோவை- 21.**

# கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

# தமிழ்த்துறை

(2017-2018)

**பகுதி – I, தமிழ் தாள் – I 17LAU101**

**பாடத்திட்டக் குறிப்புகள்**

முதலாமாண்டு இளநிலை கலையியல்

பட்ட வகுப்புகளுக்குரியது

2017

# அலகு – I

## கல்வி - பாரதியார் சுயசரிதை - ஆங்கிலப்பயிற்சி

பாரதியார் ஆங்கில மொழியை வெறுத்தவர் அல்லர். ஆங்கிலக்கவிஞன் பெயரால் தன்னைச் 'ஷெல்லி தாசன்' என்று அழைத்துக் கொண்டவர். பாரதியின் ஆங்கிலப் பயிற்சி(சுயசரிதை) என்னும் பகுதியில் நம்நாடு அடிமைப்பட்டுக்கிடந்த அன்றைய சூழ்நிலையில் பயிற்று மொழி ஆங்கிலமும், ஐரோப்பியப் பாடத்திட்டங்களும் தீமை தருபவை என்று எச்சரிக்கை செய்துள்ளனர். தன் ஆங்கிலப் பயிற்சி தனக்கு விருப்பமில்லாது அமைந்ததையும் அதனால் அவர் அனுபவித்த இன்னல்களையும் இக்கவிதையில் பின்வருமாறு மிக அழகாகவும் ஆழமாகவும் விளக்கியுள்ளார்.

**ஆங்கிலக்கல்வியைக் கற்கச் சொல்லுதல்**

திருநெல்வேலிக்குச் சென்று அவ்வூரில் வாழும் அந்தணர்கள் மற்றும் துரையர்கள் கற்கும் கல்வியினை கற்குமாறு என் தந்தை என்னைப் பணித்தார். புல்லை உண்ணுமாறு சிங்கத்தின் குட்டியினை அனுப்புதல் போலவும், இறைச்சியை வெட்டிவிற்பது நல்ல வருமானத்தைத் தருமென்று ஒரு பார்ப்பனப் பிள்ளையை அத்தொழிலை விருப்பப்பட்டுச் செய்யுமாறு அனுப்புவது போலவும், என்னுடைய தந்தை மிகவும் துன்பம் நிறைந்த, ஒரு பயனும் இல்லாத ஆங்கிலக்கல்வியை மேலும் என்னைப் போன்றார்க்கு அருவருப்பாகத் தோன்றிடும் கல்வியினை கற்கச் சொல்கிறார்.

**சூது நிறைந்தோர் கற்கும் கல்வி**

சூதுசெய்து வாழும் மக்கள், பணத்திற்காக ஒருவரைப்பற்றிய செய்தியினை மற்றொருவருக்குத் தெரிவித்துத் தம் வாழ்வில் நாயைப் போன்றார்க்கும், உணவிற்காகத் தம் உயிரைக் கூட விற்றிடுபவரும், தனக்கு ஏதாவது ஒரு வழியில் பயன்பட்டிடும் ஒருவரைச் சார்ந்து அவரைப் புகழ்ந்து பேசிடுவோரும், வீணாக எந்த வேலையும் செய்யாமல் இருக்கும் மக்களும் விலங்குகளுக்கு ஒப்பாவார்கள். அத்தகையோர் கற்றிடும் கல்வியை என்னைக் கற்குமாறு பணித்தார் என் தந்தை. மிகவும் அருமையான குணங்கள் படைத்த என் ஆசைத் தோழியாகிய மயிலைப் பிரிந்து சென்று அக்கல்வியினைப் பயிலுமாறு பணித்தால் என் மனம் அற்பமானவர்கள் கற்றிடும் அக்கல்வியில் ஈடுபடாது.

**கல்வியின் பயன் அறியாதிருத்தல்**

ஜோதிடக்கணிதம் என்னும் கல்வியினை பன்னிரண்டு ஆண்டுகள் பயிலுபவர், ஆனால் மேகத்தால் சூழப்பெற்ற வானில் நிறைந்திருக்கும் விண்மீனில் ஒன்றைப் பற்றியும் அறிந்திலர். தமிழுக்கு அணியாக விளங்கிடும் பல ஆயிரக்கணக்கான நூல்களைக் கற்றிடுவர். ஆனால் கவிதைகளில் ஆழ்ந்திருக்கும் நுண்ணிய பொருளை அறியாதிருப்பர். ஏட்டில் விளங்கும் செய்தொழில் பற்றியும், அதன்

பொருளையும் கூறிடும் அவர்களால் நம் நாட்டில் நிலவிடும் பொருளாதாரத் தட்டுப்பாட்டினைக் கூற இயலுவதில்லை. அர்த்தமற்ற பல்லாயிரம் நாமங்களைக் கூறிடுவர். ஆனால் அதனால் எள்ளளவும் பயன்பெற்றிலர்.

**புகழ் படைத்த பாரதப்பெருமை**

கம்பன் எனப்படும் ஒரு மானிடக்கவிஞன் வாழ்ந்ததும், காளிதாசன் 'சகுந்தலை ¢ என்னும் பெண்ணினை மையமாக வைத்துக் கவிதை நூலை இயற்றி அளித்ததும், தேவர் வாழ்கின்ற வானில் இருக்கும் செயற்கைக் கோள்களையும், விண்மீனையும் ஆராய்ந்து அறிந்து முதன்முதலில் தன் சாதனையால் பெருமை அடைந்த பாஸ்கரனின் புகழும், நம்புவதற்கே அறிதாகி கவிஞன் ஒருவன் உலகின் மீது இலக்கணம் படைத்ததும், உலகில் வாழும் மானிடரின் வாழ்வின் முக்கியத்துவமாகிய இறை உண்மையைக் கண்டுபிடித்து மக்களுக்கெல்லாம் உணர்த்திய ஆதிசங்கரர் புகழ் அடைந்ததும் இத்தாய்த்திருநாட்டில்தான். சேரமன்னன் செங்குட்டுவனின் தம்பி தன் அண்ணனுக்காகத் துறவறம் மேற்கொண்டு இளங்கோவடிகள் என்ற பெயர்பெற்று, கண்ணகியின் வாழ்க்கை வரலாறாகிய 'சிலப்பதிகாரம்' என்னும் நூலினை எழுதியதும், தெய்வப்புலவர் எனப்போற்றப்படும் திருவள்ளுவர், வானளவு உயரிய திருக்குறளை இயற்றி அளித்ததும், உலகில் நல்ல புகழ் படைத்த பாண்டிய, சோழர்கள் உலகைக் காத்ததும், தர்மம் வளர்த்ததும், பேரருட்சுடரோடு விளங்கக் கூடிய தமது வாள் கொண்டு அசோகனார், சிறிதும் பிழையின்றி இந்தப் புவித்தலத்தைக் காத்ததும், வீரர்க்ள அனைவரும் வாழ்த்த ஆங்கிலேயர்களின் தீய அரசாட்சியை வீழ்த்தி வெற்றி பெற்ற சிவாஜியின் வெற்றியும் மிக்க பெருமையுடையது நம் பாரத நாடு.

**ஆங்கிலக்கல்வி நமது பெருமையை மறைத்தல்**

மேற்கூறிய செய்திகளை அறியாமல் இருக்கிறார்கள் நம் பாரதத்து ஆங்கிலக்கல்வி பயிலும் மாணவர்கள். முன்னர் நமதுநாடு திகழ்ந்த பெருமையும்,மூண்டிருக்கும் இந்த நாளின் இகழ்ச்சியும், நாட்டின் உறுப்பினர்களாகிய மக்கள் உய்யும் வழியற்ற, தேவையற்ற கல்வியைக்கற்றுப் பித்தர்களாய் அலைவதையும் என்னவென்று கூறி நான் எவ்வாறு உணர்த்துவேன் என் உள்ளம் எரிவதை.

**தீது நிறைந்த ஆங்கிலக் கல்வி**

ஒரு சூழ்ச்சியும் உள்ளத்தில் இல்லாத என் தந்தை எனக்கு நன்மை செய்ய நினைத்து, ஆங்கிலேயர் தரும் கல்வி, படுகுழியும், ஏறி உய்யவே இயலாத கொடுங்குகையும் போன்ற, தீது நிறைந்த அக்கல்வியின் மேல் கொண்டிருக்கும் மயக்கத்தினால் மிகவும் சிரத்தையுடன், எல்லாச் செய்கைகளிலும் பொய்மை நிறைந்திருக்கும் விலங்கினம் வாழும் வெங்குகைக்கு என்னை அனுப்பினார்.

**ஆங்கிலக்கல்வியினால் ஏற்பட்ட இழப்பு**

ஐயருக்கும் , மிகவும் பணவசதி படைத்தவர்களுக்கு மட்டுமே ஆங்கிலக் கல்வி, மற்றவர்களுக்கு இக்கல்வியினைக்கற்கும் தகுதியில்லை என்று பொய்யைக் கூறிய ஆங்கிலேயருக்கு ஒன்று கூறுகிறேன். நாள் முழுவதும் உங்கள் பாடத்தினில் என் மனதையும், பொழுதினையும் போக்கி , விழிகள் குழியாகிட, உள்ளமானது வலுவிழந்து , மனதின் சஞ்சலங்கள் அதிகரித்து, எனது சுதந்திரம் நீங்கி அறிவு குன்றி துரும்பைப்போல் இளைத்துவிட்டேன்.

**தப்பிப் பிழைத்தல்**

இத்தேவையற்ற கல்வியினால் என் தந்தைக்குச் செலவு ஆயிரமானாலும் எனக்குத் தீமை பல்லாயிரக்கணக்கில் சேர்ந்தது. நலம் என்பது எள்ளளவும் இல்லாத கல்வி இது. இதனை நாற்பதாயிரம் கோயிலில் வேண்டுமானாலும் கூறுவேன். என் முன்னோர்கள் சிலர் செய்த நல்ல செயலினாலும், பாரத தேவியின் அருளினாலும் மீளவே முடியாத பேரிருளில் வீழ்ந்த நான் அதனில் அழியாமல் ஒருவாறு தப்பிப் பிழைத்தேன் என்று ஆங்கிலக்கல்வியின் தீமைதனை அன்றே சுட்டிக்காட்டினார் பாரதி.

# இயற்கை - வான் - பாரதிதாசன்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் வான் என்னும் கவிதை கற்பனை வளத்தையும், கவிஞரின் இயற்கை ஈடுபாட்டினையும் புலப்படுத்துகிறது.

**விண்மீன் நிறைந்த வான்**

புவியாகிய இம்மண்ணின் மேல் உழைத்திடும் தொழிலாளர்கள் அனைவரும் ஏழைகளாயிருக்கின்றனர். அவர்கள் கேட்டால் புண்மீது அம்பினைப் பாய்ச்சுவதுபோல புலையர்கள் பதில் கூறுவர். இதனைத்தன் கண்களால் தனது உரிமையைப்பற்றிக் பகலிலெல்லாம் கண்டு கண்டு கோபம் கொண்ட வானம் தன் உணர்வினை அந்திக்குப்பின் விண்மீனாய்க் கொப்பளிக்கும்.

**நிலாச்சேவல், விண்மீன் குஞ்சுகள், இருட்டுப்பூனை**

பாலில் ஏடு படிந்திருப்பதைப் போல, வானின் மீது காணப்படும் மேகத்தைச் சிராய்த்துக் கொண்டு தன் வெள்ளி ஒளியுடன் பளிச்சென்று நிலவுச் சேவல் நாலு திசைகளிலும் தனது ஒளியினைப் பரப்பும். பெட்டைக் கோழி எவ்வாறு தன் குஞ்சுகள் அனைத்தையும் தன் இறகுகளுக்குள் மூடிக்கொள்ளுமோ, அதைப்போல சின்னச் சின்னதாய் இருக்கும் விண்மீன்களைக்கூட விடாமல் தன் வெளிச்சத்தினைப்

பரப்பி அதனை மேற்பார்வையிட்டு, சூரியன் மறைந்ததால் சற்றே தோன்றும் பூனை இருட்டையும் விஞ்சி வெளிச்சத்தை அள்ளிப் பரப்பிடும்.

**பகல்வானில் முகிலோவியங்கள்**

வானில் பகல் நேரத்தில் சூரியனின் கதிர்வீச்சு எல்லாத் திசைகளிலும் விரிந்து பரந்தது. அதனைச் சற்றே மறைத்து மேகக் கூட்டங்கள் நிறைய வகைவகையான ஓவியங்களையும், யானைகள் கூட்டமாச் செல்வது போன்ற தோற்றத்தினையும், தகதக என மின்னும் மாணிக்க ஒளி அருவிகள் போலும் ஒரே சீராக வழியும் நீலச்சாரலைப்போலவும், பெரிய புகைக் கூட்டம் போலவும், வெடித்துச் சிதறும் எரிமலையினைப் போலவும், சீறிப்பாய்ந்திடும் பொன் வேங்கையினைப் போலவும், பல வண்ண மலர்கள் மணிமணியாய்ப் பூத்துக்குலுங்கும் பூஞ்சோலை போலவும் காட்சியளித்தன.

**இருண்ட வானும் ஏற்றிய விளக்கும்**

பெண்ணொருத்தி கிழக்குத் திசையிலிருந்து மேற்குத்திசையை நோக்கி வீசியெறிந்த கிளிச்சிறைத்தங்கம் போன்ற சூரியப்பந்து, நன்கு சிவந்து செழித்திருக்கும் மேற்றிசை செம்பருத்திப் பூங்காவைப் போல விளங்கும் அடிவானத்தில் சென்று விழுந்தது. அப்பரிதிப் பந்தினால் பரப்பப் பெற்ற ஒளி மறையவே இருள் சூழ்கிறது. எனவே விளக்கினை எடுத்து திரியினைத் தூண்டிய மங்மைமார்கள் இழந்த ஒளியினை மீட்டு இருளினை மாற்றுகிறார்கள். கிழக்குப்பெண் - உருவகம், கிழக்கு திசையைப் பெண்ணாக உருவகப்படுத்தியுள்ளார். செம்பருத்திப்பூங்கா - மேற்குத்திசையில் மறையவிருக்கும் சூரியன் பரப்பிய ஒளிக்கதிர்கள், செம்பருத்திப் பூக்கள் நிறைந்த பூங்காவினைப் போல் காட்சியளித்தது.

கிளிச்சிறை - தங்கத்தின் ஒரு வகை.

**காலைவானம்**

கோழி கூவியாகிற்று, தனது விரிந்த கதிர்களைக் கொண்ட சூரியன், தன்னுடைய கதிர்கள் எனும் தங்க ஏரினால் உலகத்தின் இருளை உழுகின்றான். பின்னர் கடலால் சூழப்பட்டுள்ள இவ்வுலகத்தின் காட்சி இருளிலிருந்து விடுபட்டு அமல்ல ஒரு மலர் போல முனை விரிந்து 'வாழிய உலகம்' என்று கூறி காலைவானம் மலர்ந்தது.

**வானவில்**

2017

காற்று அதிர்ந்து வீசியது. நிறையப் பூக்கள் மலர்ந்துள்ள ஒரு மரத்தின் கிளை ஒன்று அசைந்தாடியது. முதிர்ந்த கதிர்கள் சூரியக்கதிர்களைச் சேறுபோல மூடியது. அக்கரிய அமகம் என்னும் சேற்றுக்குள் புதைந்த சூரியக்கதிர்களில் புதுப்புது வண்ணங்கள்(நிறங்கள்) நிரம்பி வழிந்து வானவில்லாய்க் காட்சியளிக்கின்றன. என் தோழியே இதனைப்பார். எத்தனை அழகாக உள்ளது.

**மழைவான்**

போரில் படை வீரர்கள் படையெடுப்பதைப் போன்று கரிய மேகங்கள் பகல் வேளையில் வானத்தில் சூழ்கின்றன. நாணில் இருந்து விடுபட்ட அம்பினோடு புழுதிகளற்ற தூய்மையான வாளும், வேலும் மோதுவதுபோல வானத்தில் நிலவிய மேகங்கள் மோதியதால் , பெண்ணொருத்தி கலகலவென்று சிரித்ததுபோல மிகுந்த இடி ஒலி எழுந்தது. மின்னல் ஒளியையும், இடியோசையையும் உணர்த்த இயற்கைப்பெண்ணானவள் பூமழையினை மனதில் இன்பத்துடன் அள்ளி இறைத்தாள்.

**எரிகின்ற வானம்**

தேனைச்சொறிந்திடும் மலர்களும் தீயாக எரிந்துவிடும். நல்ல நீரும் செந்தணல் தீயால் காற்றாகி மறைந்துவிடும்.காடு, நிலம், ஊர், பூங்கா, ஆறு, கடல் ஆகிய அனைத்தும் வெப்பத்தினால் எரிவதோடு, தன்னுடைய செந்தழல் போன்ற கதிர்களால் தானும் எரிகின்றான் சூரியன். இவ்வாறு சூரியனால் வானில் ஏற்பட்ட வெப்பத்தைத் தாங்காது நம் அன்னைப்பூமியின் அடிப்பகுதிகூட வெந்து கருகிவிடும்.

**உச்சிப் பொழுதுக்கும் மாலைப்பொழுதுக்கும் இடைப்பட்ட நேரம்**

நடு உச்சி வானில் இருந்த சூரியன் ஒரு அடி அமற்குத்திசையை நோக்கி நகர்ந்தான். பகலோனின் கதிர் வீச்சின் திசை மாறியதால் நொச்சி மரத்தின் நிழல் கிழக்குத்திசையை நோக்கிச் சாய்ந்தது. நுரை போன்றும் நீர் போன்றும், பச்சை நிறமாகவும், பழுப்பு நிறமாகவும் சூரியக்கதிர்களால் காட்சியளித்த மேகங்கள் பல நிறமாக மாறி ஒன்றுகூடி, பொய்ச்சான்று சொல்வது போல் யானையின் இருப்பிடம்போலவும், பின் மலையின் உருவத்தையும்கொண்ட காட்சியைத் தரும்.

**வான் தந்த பாடம்**

வானம் என்பது மிகப்பெரிய ஒன்று. இதனில் உன்னை நீ எண்ணிப்பார்ப்பாயானால், இவ்வுலகம் ஒரு சிறிய கொய்யாப் பிஞ்சைப் போன்றது. இதில் நீ ஒரு சிறிய நுண்ணெறும்பே. இத்தனை சிறியதாய் நாம் இருக்கும்பொழுது, பைத்தியம் பிடித்தவர்கள் போல கல்வியிலோ, வயதிலோ, சாதியிலோ முதிர்ந்த

ஒருவரை மேன்மையானவர் என்றும், அத்தன்மை இல்லாதவர்களைக் கீழ்மக்கள் என்று வேறுபடுத்திப் பேசுவதில் ஒரு நன்மையும் சிறிதளவுகூட இல்லை.

# இன்றைய நிலை - ஒற்றுமையே உயிர்நிலை - கவிமணி

**முன்னுரை**

கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பூதவுடம்மை நீத்துப் புகழுடம்பு நிறுவியவர்.இவரது கவிதைகள் தமிழ் இலக்கிய உலகில் புதியவழியையும், விழிப்பையும் புத்துணர்ச்சியையும் ஊட்டின. இவரது மலரும் மாலையும் என்ற கவிதைத் தொகுதியில் இடம் பெற்ற ஒற்றுமையே உயிர்நிலை எனும் கவிதையின் கருத்தினை இக்கட்டுரையில் காண்போம்.

**ஒற்றுமையாக உழைத்திடுவோம்.**

இந்திய நாட்டில் வாழும் மககள் அனைவரும் இணைந்து நாட்டின் முன்னேற்றம் கருதி உழைக்க வேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்குத் துணையாக இருக்க வேண்டும். வீணாகக் கதைகள் பல பேசி பொழுதைப் போக்க வேண்டாம். மக்கள் ங்களுக்குள் கூடி விருந்துண்ணுவதோ தங்கள் குடும்பத்திற்குள் பெண்ணைத் திருமணம் செய்வித்து உறவு கொள்ளுவதோ ஒற்றுமையாகிவிடாது. அது தேவையுமில்லை. ஆனால் ஒவ்வொரு மனனும் மற்றவரோடு விரும்பி அன்பு கொண்டு நட்புடன் பழகவேண்டும். அந்நட்பின் பயனாய் இந்திய தேச நன்மைக்காய் உழைக்க வேண்டும். இதனால் எந்த நட்டமும் ஏற்படப் போவதில்லை. எனவே மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

**சாதி வேற்றுமை வேண்டாம்.**

நம்மிடையே சாதி வேற்றுமைகளை ஏற்படுத்திக் கொண்டு மேல்,கீழ் சாதி என்ற பிரிவினைகளை பாராட்டிச் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அனைவரும் பாரதத்தாயின் மக்கள் என்றும் பல்லவி பாடுகிறோம். நம்மிடையே சண்டைகள் இட்டுக் கொண்டே ஒரு தாயின் பிள்ளைகள் என்று சொவ்தால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை

**சாதி இரண்டு**

நம் பழங்கால அமைப்பின் படி வேதங்களின் தலைவனான பிரம்மனின் முகத்தில் இருந்து தோன்றிய வேதியர்கள் உயர்ந்த குலவத்தவர்கள் என்றும், அவனது பாதத்தில் தோன்றியவர்களான

சூத்திரர்கள் அடிமைகள் என்றும் கூறுகின்றவர்களைப் பார்த்துக் கவிஞர் பாம்பிற்குப் பல்லில் விஷம், தேளினுக்கு கெடுக்கில் விஷம் ஆனால் தாயை விடச் சிறந்தவனான நம்மைப் படைத்த பிரமனுக்கு காலில் விஷமுண்டோ சொல்லுங்கள் என்று கேட்டு, அவ்வாறு விடமுண்டு எனில் உச்சியில் நன்கு பழுத்த சுவையான கனியையும் வேர்ப்பகுதியில் நச்சுக் கனியையும் கொண்ட ஒரு பலாமரத்தை இந்த உலகில் காணமுடியுமா? எனவும் கேட்கிறார்.

ஔவைத்தாய் கூறிய இட்டார் பெரியார், இடாதா இழிகுலத்தார் எனும் கருத்தின் படி சாதி இரண்டுதான் இந்தச் சமுதாயம் அதனை மறந்து விட்டது இவர்கள் சொல்லும் சாதி அமைப்பினை முதலில் ஏற்படுத்தியவன் இறைவனா அல்லது மக்கள் தங்கள் கற்பனையால் ஏற்படுத்தினார்களா எனக் கவிஞர் கேட்கிறார்.

# இன்றையநிலை - கால வழு - அப்துல் ரகுமான்

வாழ்க்கை என்பது மக்கள் அனைவரும் எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் பயணத்தைப் போன்றது. ஆனால் அனைவரும் எதிர்காலத்தை நோக்கிச் செல்லாமல் கயிறு திரிப்பவன் எவ்வாறு பின்னோக்கிச் செல்வானோ அதைப்போலக் கடந்த காலத்தைப் பற்றியே பெருமை பேசிக் கொண்டிருக்கிறார்கள். தான் மேற்கொண்ட பயணத்தில் பாதியில் சிறிது நேரம் படுத்து மீண்டும் தன் பயணத்தைத் தொடர்பவனைக் கூட மன்னித்து விடலாம். ஆனால் பாதியில் பயணமே வேண்டாம் என நினைத்து வெறுத்து தன் வீட்டை நோக்கிச் செல்லும் பயணிகளைப் போல மனிதர்கள் தேவை இல்லாமல் இறந்த காலத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

> புதிய சூரியர்களுக்கான தொட்டில்கள்
> அதோ! எதிரில் ஆடிக்கொண்டிருக்கின்றன
> நீ ஏன்
> கல்லறைகளைத் தோண்டிக் கொண்டிருக்கிறாய்?

மரங்கள் கூட இலையுதிர் காலங்களில் தனது பழைய இலைகளை உதிர்த்து விடுகின்றன. ஆனால் மனிதர்கள் முடிந்து போன சருகுகள் போன்ற வாழ்க்கையை சுமந்து திரிகிறார்கள். முடிந்து போன

விடியலில் நேற்றை வாழ்க்கையை மனிதர்கள் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். காலம் கழிந்து போன கால அட்டவணையை பார்த்துக் கொண்டிருந்தால் , வாழ்க்கை எனும் தொடர் வண்டியை அனைவரும் எப்போது பிடிப்பது. உனது தாத்தா பயன்படுத்தியது என்பதற்காக அவர்களின் தேவையற்ற செயல்கள் பலவற்றை பின்பற்றி வருகிறாய். உன் பாட்டன் குடித்தது

என்பதற்காக
நஞ்சை குடிக்கிறாய்
எந்தப் பிணத்தையும்
எரிக்க மறுக்கிறாய்

ஏன் கடந்து போன நாட்களை உன் நினைவில் இருந்து மறக்காமல் எரிக்காமல் பெருமைப் பேசிக் கொள்கிறாய். உன் முன்னோர்களிடமிருந்து கிடைத்தது என்பதற்காக போர்வையையும் விசிறியையும் தேவையற்ற காலங்களில் அதாவது வெயில் காலத்தில் போர்வையையும் குளிர் காலத்தில் விசிறியையும் பயன்படுத்துவது போல தேவையற்ற செயல்களுக்கெல்லாம் உன் முன்னோர்களைப் பற்றி பெருமை பேசுகிறாய். உனக்கு என்று உன் முன்னோரின் பெருமை தவிர வேறு என்ன இருக்கிறது. உன் கையில் இப்போது இருப்பது வெறும் பிச்சைப் பாத்திரம்தான். அதனால் நீ எதித்காலத்தில் என்ன செய்யப் போகிறாய். முடிந்து போன முன்னோர்களை நினைப்பதை விட எதிர்கால ஆக்கப்பூர்வ சிந்தனைகளில் உன் கவனத்தை செலுத்து. பயனற்ற பழமைகளில் நம் கவனத்தைச் செலுத்துவது காலத்தின் குற்றமாக எதிர்காலத்தில் பேசப்படும் என்று கவிஞர் தம் கவிதையில் கூறுகிறார்.

## மனிதநேயம்-மலையாளக்காற்று-சிற்பி பாலசுப்பிரமணியம்

கவிஞர் சிற்பியின் மலையாளக்காற்று என்னும் கவிதை கேரளத்துச் செய்தி மடலாக நேசக்கரமாகத் திகழ்கிறது. காற்றே வருக, கேரள தேசத்தின் தாய்மொழியாகிய மலையாள மொழியின் இனிமையை உன்னோடு சேர்த்துக் கொண்டு வருக. சூரியன் உதயமாகிகிடும் புத்தம் புதிய காலை வேளையில் தான் வரும் தெருவையே வாச மலர்களின் மணத்தினால் கவர்ந்திடும் பூக்காரி போல வாசனையுடன் மெல்ல நடந்து வருக. உன் தாய்வீடாகிய பாலக்காட்டிற்கு வரும் செல்ல மகளாகிய உமது வருகைக்காக மூடப்படாத பெரிய கதவாக என்றும் திறந்தே இருந்திடும் பாலக்காட்டு கணவாய். அரபிக்கடலின் நீலநிறத் தண்ணீர் சுரங்கத்தில் இருந்து முத்து, பவளம் போன்ற கிடைத்தற்கரிய புதையல்களை அள்ளிக் கொண்டு, நெஞ்சை நிமிர்த்தி நின்றிடும் இரு கரைகளுக்கும் அதனைச் சுற்றி அமையப்பெற்ற அணைக்கும் சுகத்தைத் தருவது போல இன்பத்தோடு வந்து அதனில் மோதிடு. சங்கம்புழையின் கவிதைகள் போல, தேக்கு மரங்களின் நிறைவால் அடர்ந்து செறிந்திருக்கும் காடுகளின் தோளாகிய தேக்கு மரங்களின் கிளைகளில் உராய்ந்து வருக.

உன் தென்றல் காற்றினால் தென்னை மரங்களை கேரளத்துப் பாரம்பரிய நடனமான கதகளி போல ஆடவிட்டு மிளகுக் கொடிகளில் புகுந்து கண்ணாமூச்சி விளையாடி வருக. வித்தைகள் பல புரிந்து விளையாடும் மோகினியைப் போல பலா மரத்தின் இலைகள் பச்சைக்கிளிகள் போலச் சிறியதாய் அசைந்து ஆடிட, தாழம்பூக்கள் மஞ்சள் கிளிகளாய் சிறகடித்திட மாயம் புரிந்து வருக. கோடையில் குருவாயூர் சந்தனத்தின் குளிர்ச்சியைப் போல குளிர்வதும், கோடையில் காதலியின் அண்மைபோலச்

சுடுவதும் உன் வழக்கம். ஆடி மாதத்தில் தமிழகமே வெயிலால் அவதியுறும் போது உனது இதமான தென்றல் காற்று எம் வாசலின் வழியே மெல்ல வந்து இறங்கிடும்.

பாலக்காட்டு மணியின் மிருதங்க ஆவர்த்தனம் போலவும், கேரளத்தின் சிறப்பான நடனங்களில் ஒன்றான எரிமேலி பேட்டைத் துள்ளலாகவும், கலகலப்பாக வந்து பளிங்குபோல் தூய்மையுடன் விளங்கிடும் மழைத்துளியுடன் விளையாடிவரும் தென்றலே வெப்பத்தால் தகித்த எங்கள் மண்ணுக்கு கேரளத்தின் அம்பலப் புழை பால்பாயாசம் போல இனிமை தருகிறாய். இவ்வாறு எத்தனை நன்மைகளை எங்களுக்காக அள்ளிவந்தனை என்னருமைக் காற்றே. ரோமானியர்களின் வருகையினால் எங்களுக்கு வெள்ளியும், தங்கமும் அள்ளிவந்து எம் மண்ணில் விதைத்துப் போனாய். குலசேகரப் பெருமாளின் தேவகியின் புலம்பல் எனப்படும் அவலக் காவியத்தை அதன் சுவை குன்றாமல் எங்களுக்கு அள்ளித்தந்தாய். சேரமான் பெருமாள் நாயனாரின் ஆதிஉலா எனப்படும் ஞான உலாவினோடு நீயும் உலா வந்தாய். காட்டு யானையின் தந்தத்திற்கு ஒப்பான தத்துவக் கூர்மைக்கு எடுத்துக்காட்டான ஆதிசங்கரரை உன்னுடைய பிள்ளையாய் எடுத்து வந்தாய்.

தகழி சிவசங்கரம் பிள்ளையின் செம்மீனாய் மலையாளக் கரையோரக் கருத்தம்மாவாய் நீலக்கடலோரம் சோகத்தைச் சுமந்து திரிந்தாய். இலக்கியமாகி மட்டுமல்லாமல் கனராக கந்தருவனாக ஏசுதாஸின் இசையமுது நிறைந்த பாடலால் எம்மைக் கரைந்து கரைந்து காணாமற் போகச்செய்தாய். வைகை பெருகிவருவதற்குக் காரணமாகப் பெரியாற்றில் தேங்கி நின்றாய். கோவையின் களைப்பைத் தீர்க்க சிறுவாணி ஆறு கொண்டு விசிறினாய். பரம்பிக் குளத்தால் நெஞ்சில் பச்சை பிடிக்க வைத்தாய்.

இத்தனையும் மலையாளப்பூங்காற்றே எங்களுக்கு நீ செய்தாய். ஆனால் நாங்கள் என்ன கைம்மாறு செய்தோம்? நீ வருகின்ற கணவாய்ப் பாதையில் உன்னை வரவேற்பதற்காகப் பளிங்குக்கல் பதித்து அதன்மேல் பட்டுத்துணியை விரித்தது போல் ஓர் இளம் நதியை - ஆழியாற்றை அன்போடு அனுப்பி வைத்தோம். அதிசயம் பார். நல்லவர்களுக்குச் செய்யும் உபகாரம் பன்மடங்காகப் பெருகுமென்று சொல்லுவார்கள். அதைப்போல, உனக்காக விரித்த நடை பாவாடை அந்தச் சின்னஞ்சிறு நதியாகிய ஆழியாறு, கேரளத்தின் சரித்திரத்துச் சீதனமாய்க் கலைநதியாய்க் குலதனமாய்ப் பாரதப்புழையாகப் புகழோடு விளங்குகிறது. திருவள்ளுவர் சொன்னதைப்போல தினையளவு நன்றியைப் பனையளவு ஆக்கினாய். மலையாளக் காற்றே நீ வாழ்வாயாக!.

## சூழலியல் - கவிஞர்.எஸ்.வைத்தீஸ்வரன்- விரல்மீட்டியமழை

**முன்னுரை** : கவிஞனுக்கு, சுற்றுப்புறத்தின் இயல்பான காட்சிகளும், கவிதைக்குரிய கருவாகிவிடுகின்றன. அவ்வகையில், அமைதியான இரவுப்பொழுதில் தொடங்கி, காலைப்பொழுதின் பரபரப்பு வரையிலான இயல்பான காட்சிகளைக் கவிஞர், சொல்லோவியமாக, **படிம உத்தியில்** படைத்துள்ளார்.இரவுப்பொழுதின் இருளும், அமைதியும், விடியலை நோக்கிச்

சிறிது சிறிதாக நகர்கின்றன. இரவின் அமைதியான இயக்கங்களும், அதைத் தொடர்ந்த விடியலும், காலைப்பொழுதில் மனிதர்களின் பரபரப்பு இயக்கங்களும் கவிதையின் பாடுபொருளாக அமைந்துள்ளன.

**இரவில் இருள் சூழ்ந்த சுற்றுப்புறம்** : பறவை, முட்டைகளை அடைகாக்கும். அதுபோல, இரவுப்பொழுதும், ஒட்டுமொத்தச் சுற்றுப்புறத்தையும், இருள் என்னும் முட்டைக்குள் வைத்துப்பாதுகாக்கிறது.

**எங்கும் அமைதி** : இருள் சூழ்ந்த இரவில், சுற்றுப்புறம் எங்கிலும், அமைதி மட்டுமே நிறைந்திருந்தது.எங்கும், எவ்வித இயக்கமும் இல்லை. ஆதனால், அமைதி சிறிதும் தடைபடவே இல்லை. சூழலின் அமைதி கலையாத அழகினை எடுத்துரைப்பதற்காகக் கவிஞர், வானம் முகம் பார்க்கின்ற தெளிந்த குளத்தையும், அங்கு மென்மையாக வீசுகின்ற தென்றலையும் குறிப்பிட்டுள்ளார்.

**சுற்றுப்புறத்தில் அமைதியுடன் சிறு இயக்கம்** :சுற்றுப்புறத்தில், அனைத்து உயிர்களும் ஓய்வு கொண்டிருந்தன. மாடுகள் அமைதியாக அசைபோட்டு, இரவைக் கழித்தன. இத்தகைய சிறுஇயக்கமே சுற்றுப்புறத்தில் நிகழ்கிறது.

**மலர்கள் மலர்கின்ற நேரம்** : பொழுது மேலும் சென்ற நிலையில், மலர்கள் மலரத் தொடங்கின. வுண்டுகள், அவற்றிலிருந்து தேன் உண்ண வட்டமிடுகின்றன.

**மாடுகள் பால் சுரக்கின்ற நேரம்** : மாடொன்று, தனது மடிநிறைந்த பாலினைக் கன்றுக்கு ஊட்ட இயலாமல் தவித்தது. கன்றும், தனது, தாய்ப்பசுவைச் சென்றடைவதற்கு மிகவும் முயல்கிறது.

**இரவின் அமைதி கலைகிறது** : காலை வானில் சூரிய உதயம் தென்படுகிறது.பொழுதுவிடிகிறது. சுற்றுப்புறமும் சோம்பல் நீங்கி விழிக்கிறது. வீட்டின் சுவர்க்கடிகாரங்கள், அனைவரையும் தட்டி எழுப்புகின்றன. மனிதர்களின் இயக்கம் முதலான பல இயக்கங்களால், சுற்றுப்புறத்தின் அமைதியானது, சிறிது சிறிதாகக் கலைகிறது.

**மனிதர்களின் நம்பிக்கை நாள்** :மனிதர்கள், ஒவ்வொரு நாளையும் தமக்குரிய வெற்றி நாளாகக் கொண்டாட ஆசை கொள்கின்றனர். விடிந்த அன்றைய நாளிலாவது, அவ்ஆசை நிறைவேற வேண்டும் என்கின்ற ஏக்கத்துடன் எதிர்பார்க்கின்றனர். அதனால் ஒவ்வொரு நாளும் நாள்காட்டியில், பழைய தேதியைக் கிழ்த்துவிட்டு, புதிய நாளினை நம்பிக்கையுடன் வரவேற்கின்றனர்.

**செய்தித்தாள்கள் வழியே உலகின் நலன் விசாரித்தல்** : உலகின் நன்மையும், தீமையும், செய்தித்தாள்கள் வழியே, நம்மை வந்தடைகின்றன. உலகின் நன்மையும், தீமையும் நம்மை ஒருநொடிப்பொழுது, அன்றாடக் கடமைகளில் கவனம் செலுத்தத் தொடங்கிவிடுகிறோம்.

**பூமிப்பந்தின் பெருமூச்சு** : பகல்பொழுதின் தொடக்கமாகிய காலைப்பொழுதானது, மனிதர்களின் அசுர இயக்கத்தினால், மேலும், மேலும் பரபரப்படைகிறது. ஆவ்வேளைகளில், சுமக்க இயலாத பெருஞ்சுமையினைச் சுமப்பதைப்போல, பூமி பெருமூச்சுவிடுகிறது.

இவ்வாறு, அசுர வேகத்தில், நாளெல்லாம் சுற்றுப்பும் இயங்குவதும், இரவில், இனம் புரியாத அமைதியில் ஆழ்வதும் அன்றாட நிகழ்வுகளாக அமைவதை ஆசிரியர் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

## பெண்ணியம்- புதையுண்ட வாழ்க்கை -எஸ்.சுகந்தி சுப்பிரமணியம்

இல்லத்தரசியாகிய இக்கவிஞர் கோவையைச் சேர்ந்த நொய்யல் ஆறின் அருகினில் பிறந்து வளர்ந்தவர். இவரது இக்கவிதை இயற்கையான பெண்களின் நிலையை எளிமையாகவும், ஆழமாகவும் எடுத்தியம்புகிறது.

கவிஞருடைய ஊரில் பாய்ந்து செல்லும் நதி எங்கே போகிறது என்பது அவருக்குத் தெரியாது. ஆனால் சிறு வயதில் தை மாதத்தில் வரும் பூப்பறிப்பு நோன்புக்கு ஆற்றுக்கு போனது மட்டும் நினைவிருந்தது. முன்பெல்லாம் துணி துவைப்பதாக இருந்தாலும் கூட ஆற்றின் கரையிலிருக்கும் வண்ணான் துறைக்குச் செல்வது வழக்கம். அவரது பாட்டி கூட உடம்பு சரியில்லாமல் போகும் வரை ஆற்றில்தான் குளித்தார். சிறு வயதில் ஆற்றுக்கு போனதோடு சரி, ஆனால் அதனருகில் இருந்த தோப்பைக் கூட வேடிக்கைப் பார்த்தது இல்லை. வீட்டில் கேட்டால் கல்யாணத்திறக்கு பின் பார்க்கலாம் என்று கூறி விட்டார்கள்.

கல்யாணத்திற்குப் பின் ஆறு எது வரை போய்க் கொண்டிருந்தது என்பதைக் காட்டுமாறு கணவனிடம் கேட்டதற்கு ஐம்பது மைலுக்கு அப்பால் சென்று ஒரு அணையைக் காட்டி அதுவரைதான் தனக்கு தெரியும் என்று கூறி விட்டார். ஆனால் ஆறு இன்னும் போய்க்கொண்டுதான் இருந்தது. ஏனோ சிரித்துக் கொண்டார். இன்று வாங்கிய புத்தகங்களுடன் முன் தினம் வாங்கியவைகளும் வேலைப்பளுவினால் இன்னும் படிக்கப்படாமல் அவளது கையில் இருந்தது. அவளுக்குத தெரிந்தது எல்லாம் அருகிலிருந்த பேரூர் கோவில் சிற்பம் மட்டும்தான். இன்னும் தமிழகத்திற்குள்ளேயே மிகச்சிறப்பாகக் கருதப்படும் தஞ்சாவூரைக் கூடப் பார்த்தது இல்லை.

கணரின் வேலை மாற்றத்தினால் ஹைதராபாத் சென்றமையால் அந்த ஊரின் அனல்காற்றின் சூடு தெரியும். ஆனால் கோவைக்கு அருகில் இருக்கும் ஊட்டிப் பனிக்காற்றின் ஸ்பரிசத்தைக் கூட உணர்ந்தது இல்லை. அவருடைய ஊரில் ஓடிக்கொண்டிருந்த நொய்யல் நதியினை நன்கு அறிவேன். ஆனால் புனித நதியாகக் கருதப்படும் கங்கையைக் கூடத் தெரியாது. இவற்றையெல்லாம் நினைத்து நினைத்து பார்த்தே காலம் போனதில் முதல் சிலிண்டர் முடிந்து விட்டது. இரண்டாவது சிலிண்டரும் வந்து விட்டது.

கல்லயாணத்திற்கு பிறகு அவரது ஆசைகளும் , கனவுளும் மாறி விட்டன. இப்பொழுதெல்லாம் வீட்டிற்கு அவசியத் தேவையான பிரிஷைப் பற்றிய கனவுதான் அவளிடத்து மேலோங்கி உள்ளது. அவருடைய குழந்தை இப்போதுதான் மழலை மொழியே பேச ஆரம்பித்துள்ளது. அனால் எல். கே. ஜி அட்மிசன்கள் பற்றிய பயம் அன்றே அவரைத் தொற்றிக் கொண்டது.

சின்ன வயதில் தோழிகளுடன் கண்ணாமூச்சி ஆடிய கவிருக்கு டேபில் டென்னிஸ் ஆடத் தெரியாது. விளையாட்டு பந்தினைக் கூட சுமக்காத இவர் இன்று குழந்தையை உப்பு மூட்டை சுமக்கிறார். இப்படி எத்தனையோ விஷயங்கள் இதுவரை தெரியாமல், உணராமல் இருக்கிறது. எனினும் எல்லாவற்றைப் பற்றியும் நினைக்கும் பொழுது நிரந்தரமில்லாத பாதுகாப்பில்லாத வாழ்க்கையைக் குறித்து ஒரு புறம் பயம் எழுந்தாலும் மறுபுறம் தன் குடும்பம் தன் குழந்தை என்ற எண்ணம் மேலோங்கும் போது சிறிது சந்தோஷம் ஏற்படுகிறது என்று தன் இயல்பான, ஆனால் ஒடுக்கப்பட்ட நிலையையும் அழகுபடக் கூறியுள்ளார் கவிஞர்.

# வாழ்க்கை - வாழ்வுப் பாடல் - தருமு சிவராம்

## முன்னுரை

படிமக் கவிஞர் என்றும் ஆன்மீகக் கவிஞர் என்றும் பலராலும் போற்றப்படும் தருமுசிவராம் அவர்கள் இலங்கையைச் சார்ந்தவர். போர்க்கள பூமியாய் மாறிவிட்ட பூமியில் வாழ நேரிட்டதன் காரணமாக வாழ்வின் மீது மிகுந்த பற்றுக் கொண்டு கவிதைகள் எழுதியவர். வாழ்க்கை என்பது வாழ்ந்து அழிவதற்காக என்றாலும் அந்த வாழ்வு அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும் என்பதையே தன்னுடைய வாழ்வுப் பாடல் கவிதையில் முன்வைக்கிறார் எனலாம்.

## பொருளுரை

மனிதராய்ப் பிறப்பது அரிதினும் அரிது என்பது மூத்தோர் வாக்கு அதனை ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும் இந்தக் கிடைத்தற்கரிய பேறான வாழ்க்கையை நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். வாழ்க்கை ஆரம்பமும் முடிவுமற்றது. என்று பிறந்தோம் என்று உணர முடியாதது. என்றொருவன் வாழ்க்கையைப் புரிந்து கொள்கிறானோ அன்று புதிதாய்ப் பிறக்கிறான் என்கிறார் கவிஞர். வாழ்க்கையை முழுமையாக உணர்ந்தவனுக்கு மரணமில்லை தனிமை கண்டு பயம்கிடையாது. வாழ்க்கையின் தன்மையை உணர்ந்தவனுக்கு அழிவின் குரலும், சிரிப்பு, துயரங்களின் குரலும் வாழ்வின் குரலாகத்தான் தோன்றும். அயலான் கண்களை உற்றுப் பார்த்தால், உன்னுடைய தோற்றம் தெரியும்

அதனால் அடுத்தவனை குறை கூறும்முன் உன்னைத் திருத்திக் கொள். அவனுள் இயங்கும் வாழ்வும் நீயே என்பதை உணர்ந்து கொண்டால் உனக்கு அழிவில்லை.

வாழ்வை நேசிக்காதவனால் மனிதர்களை நேசிக்க முடியாது. எனவே சந்தேகச் சுமை ஏறும். தனிமை சூழும், மரணம் பலிகொள்ளும் அவனை. வாழ்க்கையை நேசித்தால் அன்பு எவரையும் ஏமாற்றாது. வாழ்வை நேசித்தால் உனது நேர்மை உன்னை உயர்த்தும். வாழ்வை நேசிக்காத மனிதன் தான் வாழ்க்கையைச் சிக்கலுக்குரியதாக்கிக் கொள்கிறான். பழங்கடவுள்களை வணங்குவதை விடுத்து மனிதனை நினை, வாழ்வை வணங்கு ஏனெனில், வாழ்க்கை என்பது நித்ய மலர் அன்றாடம் மலர்வது. இடையறாத ஊற்று வாழ்க்கை என்கிறார் கவிஞர்.

தன் வீடு, தன்பெண்டு என்று வாழாதே. அங்கே தனிமை இருக்கும் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற உயரிய தத்துவத்தைப் பின்பற்றுவோமானால், வாழ்வின் வெற்றியை அடையலாம் எனக்கூறும் கவிஞர், ஒற்றை அன்பின் தனிமையைத் கண்டதாலேயே தான் அழ நேரிட்டதாகக் கூறுகிறார். முகமூடி அணிந்த மனித நிழல்களின் நடிப்பினால் வாழ்க்கை என்ற மலர் வதங்கிவிட்டதாகக் கவிஞர் கூறுகிறார்.

மனிதனே உனது ஆழ்மனத்தை நுணுகி ஆராய்ந்து பார்த்தால், மூடத்தனம் உன்னைப் பலி கொள்ளாது. துக்கத்தைச் சந்திக்காமல் மகிழ்ச்சியை அறியமுடியாது. பலவகை விலங்குகளை நீ அணிந்து கொண்டிருக்கிறாய் உனது உரத்த குரலே உன்னை அந்த விலங்குகளில் இருந்து விடுவிக்கும். பாசமாகிய தளையிலிருந்து விடுபடாத வரை உன்னால் பாசத்தை வெல்ல முடியாது. எந்த சலனமும் இலலாத இரவுகளிலும் மலர்கள் மலர்வதைப் போலவும், மரத்திலுள்ள மலரை மட்டும் பார்க்காமல் முழு மரத்தின் அழகையும் என்று நாம் நேசிக்கத் துவங்குகிறோமோ அன்று தான் வாழ்வையும் நேசிக்க முடியும் என்கிறார்.

**முடிவுரை.** இவ்வாறாகக் கவிஞர் தன்னுடைய கவிதை வாயிலாக மனிதன் மனிதனாக வாழ நேசித்தல் அவசியம். நேசித்தல் மட்டுமே மனிதனின் வாழ்வை முழுமையாக்கும். நேசம் என்றும் தேயாது அதுதான் மனிதனை மனிதன் என்று உணர வைக்கும் என்று கூறுகிறார் எனலாம்.

## பகுதி – அ (ஒரு மதிப்பெண் வினாக்கள்)

1. பாஞ்சாலி சபதக் காவியன் யார்?
   (அ) பாரதியார், (ஆ) பாரதிதாசன், (இ) கண்ணதாசன், (ஈ) கவிமணி
2. ஆங்கிலமும், ஐரோப்பியப் பாடத் திட்டமும் தீமை தருபவை என்று எச்சரிக்கை செய்தவர்?
   (அ) பாரதியார், (ஆ) பாரதிதாசன், (இ) கண்ணதாசன், (ஈ) கவிமணி
3. பேடி என்பதன் பொருள் என்ன?
   (அ) புத்திசாலி, (ஆ) தைரியசாலி, (இ) கோழை, (ஈ) ஏழை
4. மேழி என்பதன் பொருள் என்ன?
   (அ) கலப்பை (ஆ) மண்வெட்டி (இ) அரிவாள், (ஈ) கடப்பாரை
5. வெற்றுரை பேசித் திரிய வேண்டாம். ஒற்றுமையாய் வாழுங்கள் எனக் கூறியவர்?
   (அ) பாரதியார், (ஆ) பாரதிதாசன், (இ) கண்ணதாசன், (ஈ) கவிமணி
6. காலவழு என்ற கவிதையின் ஆசிரியர்?
   (அ) அப்துல் ரகுமான் (ஆ) பாரதிதாசன் (இ) கண்ணதாசன் (ஈ) கவிமணி
7. கோடையில் குருவாயூர் சந்தனமாகக் குளிர்ச்சி தருவது எது?
   (அ) சிறுவாணி (ஆ) பாரதப்புழை (இ) ஆழியாறு (ஈ) மலையாளக்காற்று
8. கானகந்தர்வன் யார்?
   (அ) குமாரன் ஆசான் (ஆ) ஏசுதாஸ் (இ) நாராயணகுரு (ஈ) சிற்பி பாலசுப்பிரமணியன்
9. சூழலியல் என்ற கவிதையின் ஆசிரியர்?
   (அ) அப்துல் ரகுமான் (ஆ) எஸ். வைத்தீஸ்வரன் (இ) கண்ணதாசன், (ஈ) பாலா
10. பன்மொழிப் புலமையாளன் யார்?.

    (அ). கவிமணி(ஆ). பாரதிதாசன் (இ). பாரதியார் (ஈ). வாணிதாசன்
11. 'பாவேந்தர்' என்ற புனைப்பெயருடைய கவிஞர் யார்?.

    (அ). அப்துல் ரகுமான் (ஆ). சிற்பி பாலசுப்பிரமணியம் (இ). பாரதியார் (ஈ). பாரதிதாசன்
12. 'மனமே வாழ்வின் உயிர்நிலையாம்' –என விளம்பிடும் கவிஞர் பெயர் என்ன?

    (அ). சுகந்தி சுப்பிரமணியம் (ஆ). பாரதிதாசன் (இ). வைரமுத்து (ஈ). கவிமணி
13. 'சாதி இருட்டைப் போக்கிய கேரளத்து ஞாயிறு' - யார்?
    (அ) குமரன் ஆசான் (ஆ) சிற்பி பாலசுப்பிமணியம் (இ) ஸ்ரீநாராயணகுரு (ஈ) பாலக்காட்டு மணி
14. 'வாழ்வை நேசி' - எனத் தத்துவம் பாடிய கவிஞர் யார்?.

    (அ). சுகந்தி சுப்பிரமணியம் (ஆ). பாரதிதாசன் (இ). அப்துல் ரகுமான் (ஈ). தருமு சிவராம்
15. 'தெருவை மணக்கவரும் பூக்காரி போல் வருவது எது?
    (அ) விடியல் (ஆ) மழை (இ) காற்று (ஈ) இரவு
16. ஷெல்லி எனத் தன் பெயரை மாற்றிக் கொண்டார் யார்?
    அ)வாணிதாசன் ஆ)கண்ணதாசன் இ)பாரதிதாசன் ஈ)பாரதியார்
17. பாரதிதாசன் படைப்புகளில் இவற்றுள் எது?
    அ) பாண்டியன்பரிசு ஆ)பாஞ்சாலிசபதம் இ)ஆசியஜோதிஈ)நகரச்சுவர்கள்
18. வாழ்வின் உயிர் நிலையாக அமைவதுஎது?
    அ)அறிவு ஆ)பணம் இ)மனம்ஈ)சத்தி
19. விரல் மீட்டியமழை……..கவிதைத் தொகுப்பாகும்.
    அ) சூழலியல் ஆ) அழகியல் இ) நாட்டுப்புறவியல் ஈ) திறனாய்வியல்

20. பெண்ணிய எழுத்தின் அழிக்க முடியாத சத்தியாக விளங்கபவர் யார்?
அ) சுகந்திசுப்பிரமணியம் ஆ) தாமரை இ) கவிமணிஈ) தாராபாரதி
21. பாஞ்சாலி சபதக் காவியன் யார்?
அ)கவிமணி ஆ)பாரதியார் இ)பாரதிதாசன் ஈ)சிற்பி பாலசுப்பிரமணியன்
22. ‘‘அற்பர் கல்வியின் நெஞ்சு பொருந்துமோ’’ என்ற கவிதை வரி இடம்பெறும் பாடப்பகுதி எது?
அ) காலவழு ஆ)திருக்குறள் இ)ஆங்கிலக்கல்வி ஈ)மலையாளக்காற்று
23. பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?
அ)ஷெல்லிதாசன் ஆ)வைரமுத்து இ)கனகசுப்புரத்தினம் ஈ)கவிமணி
24. பெண்ணியச் சிந்தனையாளர் யார்?
அ)இளவழகனார் ஆ)சுந்தரவடிவேலு இ)ஒட்டக்கூத்தர் ஈ)கவிஞர் தாமரை
25. விடியல் நேரத்தின் இயல்பைக் குறிப்பிடும் நும் பாடப்பகுதி எது?
அ)வாழ்வுப்பாடல் ஆ)அம்மாவுக்கு இ)மழைக்குறிப்பு ஈ)விரல் மீட்டிய மழை
26. ‘‘அம்மாவுக்கு’’ என்ற கவிதையை இயற்றியவர் யார்?
அ) சிற்பி பாலசுப்பிரமணியன் ஆ)வைரமுத்து இ)பாரதிதாசன் ஈ)கவிமணி
27. ஆசாரக்கோவையின் ஆசிரியர் யார்?
28. குயில் பாட்டின் தத்துவ மேதை யார்?.

(அ). பாரதியார் (ஆ). பாரதிதாசன் (இ). அப்துல் ரகுமான் (ஈ). தருமு சிவராம்

29. ‘புரட்சிக்கவி’ என்ற நூலின் ஆசிரியர் யார்?.

(அ). அப்துல் ரகுமான் (ஆ). தருமு சிவராம் (இ). பாரதியார் (ஈ). பாரதிதாசன்

30. கவிஞர் சிற்பி அவர்களால், ‘கேரளத்து ஞாயிறு’ எனப் போற்றப்பெறுபவர் யார்?.

(அ). ஆதிசங்கரர் (ஆ). பாரதிதாசன் (இ). ஸ்ரீ நாராயண குரு (ஈ). குமாரன் ஆசான்

31. ‘வாழ்வின் பூரணிப்பில் மரணமில்லை’ எனத் தத்துவம் பாடிய கவிஞர் யார்?.

(அ). பாரதியார் (ஆ). பாரதிதாசன் (இ). அப்துல் ரகுமான் (ஈ). தருமு சிவராம்

32. ‘விரல் மீட்டிய மழை’ -என்னும் கவிதை எதன் இயல்பைப் புலப்படுத்துகின்றது?
(அ) விடியல் நேரம் (ஆ) நள்ளிரவு (இ) மாலை நேரம் (ஈ) நண்பகல் நேரம்

**பகுதி – ஆ (2 மதிப்பெண்கள் வினாக்கள்)**

1.‘‘ஒற்றுமையே உயிர்நிலை’’ – என்ற கவிதையின் மையக்கருத்தைச் சுட்டுக.
2. பாரதியார் கூறிடும் இந்தியச்சான்றோர்களின் பெயர்களை எழுதுக?
3.கவிமணிதேசியவிநாயகம்பிள்ளையின் படைப்புகள் நான்கு கூறுக.
4.‘‘தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்’’-இடம் சுட்டிப் பொருள் கூறு?
5.பாரதிதாசன் குறித்து சிறுகுறிப்புத் தருக?

6.அறிவு வாரித் துரும்பென் றலைந்ததால்’ – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

7. புதையுண்ட வாழ்க்கை கவிதையின் வழி பெண்களின் நிலையைச் சுட்டுக.

**பகுதி – இ** **(6 மதிப்பெண்கள் வினாக்கள்)**

1. ஆங்கிலமும், ஐரோப்பியப் பாடத் திட்டமும் தீமை தருபவை என்பது குறித்து பாரதியார் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.
2. ‘அம்மாவுக்கு’ எனும் கவிதை வழி வைரமுத்துவின் பாசப்பிணைப்பைப் புலப்படுத்துக.
3. ஆங்கிலக்கல்வியின் தாக்கத்தை பாரதியர் எங்ஙனம் எச்சரிக்கின்றார் விளக்குக?
4. நும் பாடப்பகுதியில் வரும் மனிதநேயச்சிந்தனைக் கருத்துக்களை சான்றுடன்

எடுத்துரைத்திடுக?.

5. ஆங்கிலவழிக் கல்வியின் நிலைகுறித்து பாரதியார் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
6. கேரளத்துச் செய்தயினை கூறிவரும் மலையாளக்காற்றின் சிறப்பினைவிவரி.

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

**கோவை- 21.**

Enable | Enlighten | Enrich
(Deemed to be University)
(Under Section 3 of UGC Act 1956)

## கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

## தமிழ்த்துறை

(2017-2018)

**பகுதி – I, தமிழ் தாள் – I 17LAU101**

**பாடத்திட்டக் குறிப்புகள்**

முதலாமாண்டு இளநிலை கலையியல்

பட்ட வகுப்புகளுக்குரியது

# அலகு – 2

## ஆசாரக்கோவை

1. **நல்லொழுக்கங்கள் எட்டு**

தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாதிருத்தல் வேண்டும்

பொறுமையுடன் இருத்தல் வேண்டும்

எல்லோரிடமும் இனிமையாகப் பேசுதல் வேண்டும்

எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாதிருத்தல் வேண்டும்

கல்வியைக் கசடறக் கற்றல் வேண்டும்

கற்ற கல்வியின் வழி உலக இயல்பை அறிந்து நடத்தல் வேண்டும்

தெளிந்த நல்ல அறிவுடையவராக இருத்தல் வேண்டும்

நல்லவர் நட்பையே நாடுதல் வேண்டும். இவை எட்டும் நம் வாழ்வில் பின்பற்றத்தக்க நல்லொழுக்கங்களாகும்.

2. **பின்பற்றவேண்டியவை ஐந்து**

தண்ணீரில் தன் நிழல் பார்த்தல் கூடாது
தரையில் அமர்ந்து நிலத்தைக் கீறுதல் கூடாது
மரங்கள் பகலில் உட்கொண்டகெட்ட காற்றை இரவில் வெளிவிடுவதால் இரவுநேரத்தில் மரத்தினடியில் அமரக்கூடாது
கூடாதநாட்களில் நீர், நெய் கலக்காது எண்ணெய் தேய்த்தல் கூடாது நீர் கொண்டு உடலைச் சுத்தம் செய்யாது பிறரைப் பார்த்தல் கூடாது இவை வாழ்வில் பின்பற்றவேண்டிய ஐந்து நெறிமுறைகள் ஆகும்.

3. **வணங்கத்தக்கவர் ஐவர்**

அரசன், குரு, தாய், தந்தை, தன்னைவிட மூத்தோர் ஆகியோர் தமக்கு நிகரில்லாதவர் என்பதால், தேவர்களைத் தொழுவதற்கு நிகராக இவர்களையும் வணங்கவேண்டுமென்பது எல்லாநல்லோரும் கூறிய நெறிமுறையாகும்.

4. **உணவு உண்ணும் முறை**

உணவை உண்ணத் தொடங்கு முன், உணவை வணங்கி கிழக்குமுகமாக அமர்ந்து உண்ணவேண்டும். மேலும் உணவு உண்ணும் போது தூங்காமல், அசைந்தாடாமல், அங்குமிங்கும் பார்க்காமல், பேசாமல், எதைப்பற்றியும் சிந்திக்காமல், உணவின் சுவையை அறிந்து, சிந்தாமல் எடுத்து நன்கு உண்ணவேண்டும்.

2017

5. **<u>அறிவுடையவர் செயல்</u>**
   தெளிந்த அறிவுடையவர்கள் பெரியோர் முன் கைநீட்டிப் பேசமாட்டார்கள், எழுதுகோல் கொண்டு காலில் எழுதமாட்டார்கள், அறிவொழுக்கம் இல்லாதாரை அறிவுடையோருடன் ஒப்பிட்டுக் கூறமாட்டார்கள், பெரியோர் கொடுக்கும் பொருளை உட்கார்ந்து கொண்டே வாங்கமாட்டார்கள். இவையெல்லாம் தகாதசெயல்கள் என்பதால் அறிவுடையோர் இவற்றை மேற்கொள்ளமாட்டார்கள்.

# கொன்றைவேந்தன்

தாய், தந்தையர் கண்கண்ட தெய்வம்

கோவிலுக்குச் சென்று இறைவனைத் தொழுவது மிகவும் நல்லது

இல்லறவாழ்வே மிகவும் நன்மை பயக்கக் கூடியது

பிறருக்கு உதவி செய்யாதோர் பொருளைத் தீயவர் பறித்துக் கொள்வர்

ஊராரோடு பகைத்துக் கொண்டால் குடும்பம் அழிந்து விடும்

அறிவியலுக்கு ஆதாரமான எண்ணும், இலக்கிய அறிவுக்கு ஆதாரமான எழுத்தும் நமக்குக் கண் போன்றவை.

செய் என்று சொல்லும் முன்பே குறிப்பறிந்து செயலாற்றும் பிள்ளைகள் அம்ருதம் போன்றவர்கள்

பொறாமைப் பேச்சு வளர்ச்சியை அழிக்கும்

சிக்கனமாயிருந்து தான்யத்தையும், செல்வத்தையும் தேட வேண்டும்.

பிறர் குற்றங்களையே ஆராய்ந்து கொண்டிருந்தால், சுற்றத்தார் என்று எவருமே இருக்க மாட்டார்கள்

பலவானாக இருந்தாலும், கர்வப் பேச்சு பேசாதே

நமக்கு ஒருவர் கெடுதல் செய்தால், அதை அப்படியே விட்டு விடுதலே உயர்ந்த செயல்.

தாழ்வு வந்த போதும் மனந்தளராது இருப்பதே மீண்டும் எல்லாவற்றையும்சேர்க்கும்.

கையில் இருக்கும் பொருளை விட உண்மையான செல்வம் கல்வியே ஆகும்.

தேவையிருக்கும் இடம் சென்று உதவி செய்தலே, ஆட்சி செய்வோர் அறிய வேண்டியது.

பெற்றோருக்குப் பெருமை, அவர் பிள்ளைகள் சான்றோர் எனப் பாராட்டப்படுவதே.

தவத்திற்கு அழகு இறை நினைவோடு இருப்பதே.

புகழோடு வாழ விரும்பினால், பயிர்த் தொழிலில் ஈடுபட வேண்டும்

எந்த நிலையிலும் கூடி இருத்தலே சுற்றத்திற்கு அழகு.

சூதாட்டமும், தேவையில்லாத விவாதமும் துன்பத்தையே தரு

பொருள் கொடுக்குமளவு இருந்தால், பிறருக்கு உணவிட்டு உண்ண சோம்பெறிகள் வறுமையில் வாடித் திரிவர்

தந்தை சொல்லெ உயர்ந்த மந்திரம் போலாகும்

தாயே சிறந்த தெய்வமாகும்

2017

கடல் கடந்தாவது பொருள் தேட வேண்டும்

கோபம் சீக்கிரமாகப் போய் விட வேண்டும். இல்லையேல் அது சண்டையில் போய் முடியும்

பொருளைத் தேடிச் சேர்க்காது, இருப்பதை செலவிட்டுக் கொண்டிருந்தால்துன்பத்தில்முடியும்.

தை, மாசி (வெயில் காலம்) மாதங்களில் வைக்கோல் வேய்ந்த வீட்டில் உறங்கு.

பிறரிடம் வணங்கி அந்த ஊதியத்தில் உண்பதை விட பயிர் செய்து உண்பதே இனிது.

நெருங்கிய நண்பனிடத்தும் நம் வறுமை பற்றிப் பேசக் கூடாது

நல்லோர் நட்பு இல்லையேல், அல்லல் படுவோம்

நாடு செழித்திருக்குமானால் எவருக்கும் இன்பமே.

சொன்ன சொல் தவறாது இருத்தலே, நிலையான கல்வி கற்றதற்கு அழகு

நீர் நிறைந்த ஊரில் வசிக்க வேண்டும்

சிறிய கார்யமாக இருந்தாலும், யோசித்து செயல் பட வேண்டும்

நல்ல நூல்களைப் பயின்று, ஒழுக்கத்தோடு நடந்து கொள்

நமக்குத் தெரியாமல் ஒருவருக்கு வஞ்சனை செய்ய முடியாது.

மனம் ஒப்பி செய்யாத எந்த விரதமும் சிறப்பாக முடியாது

சக்தியற்றவர் இடத்தும் மனம் நோகுமாறு பேசக்கூடாது

சிறியவர்களும் செய்யும் கார்யத்தால் சிறந்தவர் ஆவர்

உயிரைக் கொன்று அதை உண்ணாமல் இருப்பதே விரதமாகும்

ஒருவர் புண்ணியம் அவர் அடைந்த விளைச்சலில் தெரியும்

சிறந்த உணவாக இருந்தாலும், காலமறிந்து உண்ண வேண்டும்

அடுத்தவன் மனைவியை விரும்பாததே சிறந்த அறம்

தாய்ப்பாலை ஊட்டி வளர்த்தால், அந்தக் குழந்தை பலம் பெறும், நிர்வாக .சுமைகளைத் தாங்கும்.

புலாலுண்ணுதல், கொலை, திருடு இம்மூன்றையும் செய்யாதே.

கொடியவர்களிடம் சிறந்த ஒழுக்கங்கள் இருக்காது.

ஞானம் பெற்றோர்க்கு சுற்றம் என்ற பந்தமும், கோபமும் கிடையாது.

அறியாதவர் போன்று இருப்பது பெண்களுக்கு அணிகலன்.

நிதானமாகச் செய்யும் கார்யங்களில் வெற்றி நிச்சயம்.

அனைத்துத் தீங்குகளையும் விட்டு விடு.

தான் முயன்று உழைத்து சம்பாதித்ததே உணவு என்பதாகும்.

தேவாம்ருதமே கிடைத்தாலும், பிறரோடு சேர்ந்து உண்.

மழையின்றி ஒன்றும் இல்லை.

மழை வரப்போவதற்கு அறிகுறியே மின்னல்.

மாலுமி இல்லாத ஓடம் செல்லாது.

பிறருக்கு செய்யும் நன்மை, தீமைகள் பின்பு நமக்கே வரும் .

முதியோர்கள் அறிவுரை அமிர்தம் போன்றது.

மெத்தையில் படுத்து உறங்குதலே தூக்கத்திற்கு சுகம்

கலப்பையால் உழைத்துச் சேர்த்த செல்வம் ஒரு போதும்

வீண் போகாது.

பெரியோர் சொல்லை கேளாமல் மறுத்தால் அந்த காரியங்கள் கெட்டுவிடும்

மௌனமே மெய்ஞ்ஞானத்தின் எல்லை

சோழ வளவனை ஒத்த செல்வம் படைத்திருந்தாலும், வரவு அறிந்து செலவு செய்து உண்ண வேண்டும்

மழை குறைந்து விடுமானால் பல தான தர்மங்கள் குறைந்து விடும்

விருந்தினரை உபசரித்தறியாத இல்லத்தில் தேவையான ஒழுக்கம் இருக்காது

வீரனுடன் கூடிய நட்பு, கையில் கூர்மையான அம்பை வைத்திருப்பதற்கு ஒப்பாகும்

யாசிக்காமல் இருப்பதே வல்லவர்க்கு இலக்கணம்

உற்சாகமான முயற்சியோடு இருப்பதே முன்னேற்றத்திற்கு அழகு

தூய்மையான மனமுள்ளோருக்கு, வஞ்சக எண்ணம் இல்லை

அரசின் கோபத்துக்கு ஆளானவருக்கு வேறு துணை இல்லை

தினமும் காலையில் தெய்வத்தை வணங்கு

பழக்கப்பட்ட, சமமான இடத்தில் படுத்து உறங்கு

படிக்காதவர்களிடம் மனமறிந்த ஒழுக்கம் இருக்காது.

### *அற இலக்கியம் - நீதி நூல்:*ஆசிரியர்:மாயவரம் வேதநாயகம்.

1. பெற்றோரை மறவாதீர்:சிறுபொருள் தந்தவரையும் வாழ்நாள் முற்றும் மனத்தில் நினைக்க வேண்டும் என்பது பெரியோர் திருமொழி. அப்படியானால் நம் உடல்இ உயிர்இ வாழ்வு எல்லாம் தந்தருளிய தாய் தந்தையரை மறவாதிருப்பதல்லாமல்இ செய்யும் கைம்மாறு இல்லை.

2.இரத்தத்தைப் பாலாகத் தந்த தாயை மறவாதீர்:கடவுளைத் தொழுது கருவுற்றுக் கசக்கும் மருந்துண்டு பல துன்பங்கள் அடைந்து பத்துத்திங்கள் சுமந்து பெற்றெடுத்துப் பாலூட்டி வலிமையுடன் வளர்த்த அருமைத் தாயை நெஞ்சமே வணங்குவாயாக!.

3.பெற்றோரையே தெய்வமாகப் போற்றுங்கள்:எல்லா உலகங்களையும் படைத்துக் காக்கும் ஆண்டவனைத் தொழவேண்டுமானால் அம்மையே அப்பா என்று ஒப்புரைத்துத் தொழுவோம். கண்கண்ட தெய்வமாகக் காணப்படும் தாய் தந்தையருக்கு எங்கும் ஒப்பில்லை அவர்கள் திருவடியை நெஞ்சே போற்று!.

4.பெற்றோரைப் போற்றாதவர்கள் நரகத்தில் துன்புறுவர்:வைத்து வளர்த்தவர்க்குப் பூஇ நிழல்இ பழம் நல்காத மரத்தை வெட்டி எரிப்பது போன்றுஇ தாய் தந்தையரை வணங்காத அறிவிலாரை ஆண்டவன் இருள் உலகில் தள்ளி வருத்துவன்.

5.முதுமையிலும் மதித்து நடங்கள்:பெற்றவர்கள் பிள்ளைகள் பொருட்டு அளவிலாத் துன்பம் அடைந்தனர். அத்துன்பத்திற்கு ஈடாக மூன்று உலகமும் கொடுப்பினும் போதா. அவர்கள் தங்கள் மூப்பினாலும்இ சோர்வினாலும் கடுஞ்சொற்கள் சொல்ல நேர்ந்தால்இ அச்சொற்களை வெல்லப்பாகென்று கொண்டு அவர்களைப் போற்றிவரல் மக்கட்குக் கடன்.

## திருக்குறள் - பண்புடைமை

பெருமை முதலிய சிறந்த குணங்களிலிருந்து ஒருவன் வழுவாது நின்று எல்லோரது இயல்புகளையும் அறிந்து ஒத்து ஒழுகும் தன்மையே பண்பாகும். இப்பண்பினை விளக்குவதாக இவ்வதிகாரம் அமைந்துள்ளது.

### 1. பண்புடைமையை எய்துதல்

எல்லோரிடத்தும் எளிமையான தன்மையுடையவராதலின் பண்புடைமை என்னும் நன்னெறியை அடைவது எளிது என்று சொல்லுவர் அறநூலோர். குணங்களால் நிறைந்த தன்மை உடையதாலும், உலகத்தைத் தன்பால் வசீகரிப்பதாலும், தொல்லோர் சென்ற நன்னெறி என்பதாலும் பண்புடைமையை அனைவரும் எளிதில் பின்பற்றி ஒழுகுதல் வேண்டும் என்பதற்காக நூலோர் இங்ஙனம் கூறுகின்றனர்.

### 2. பண்புடையராவதற்குரிய காரணம்

எல்லோரிடத்திலும் அன்புடையவனாய் இருத்தலும் அனைத்து நல் இலக்கணங்களும் உடைய குடியில் பிறந்தவருக்கு உரிய செயல்களை உடையவனாயிருத்தலும் ஆகிய இவ்விரண்டும் பண்புடைமை என்னும் நன்னெறி ஆகும்.

### 3. நன்மக்கட் பண்பு உடையவனாதல்

உயிரோடு பொருந்தாத உடம்பால் ஒத்திருத்தலால் ஒருவன் நன்மக்களுக்கு ஒப்பாக மாட்டான். பொருத்தமான பண்பால் ஒத்திருத்தலே பொருந்துதற்குரிய ஒப்பாகும். எனவே நன்மக்களோடு பெறப்படும் ஒப்பாவது உடம்பினால் ஒத்தல் அன்று.

### 4. பண்புடைமை பாராட்டப்படும்

நீதியையும் அறத்தையும் விரும்புதலும் எல்லோருக்கும் பயன்படுதலுமாகிய நல்லோரினது உயர்ந்த பண்புகளை இவ்வுலகத்தோர் கொண்டாடுவர். எனவே உயர்ந்த பண்புகளைக் கடைபிடித்து ஒழுகுதல் வேண்டும்.

### 5. பண்புடையாரின் சிறப்பு

ஒருவரை விளையாட்டாகப் பழித்துப் பேசுதலும் பேசுபவருக்கு அது துன்பத்தை விளைவிக்கும். ஆதலால், பிறரது இன்ப, துன்பங்களையும் இயல்புகளையும் அறிந்து நடக்கக்கூடிய பண்புடையாரிடத்தில் பகைமை உள்ளபோதும், பண்புகளே காணப்படும். பண்புடையார், இவை இன்னாதவை என்பதை முன்னமேயே அறிந்தவராவார். எனவே அவற்றை ஒருபோதும் செய்ய மாட்டார். இனியவற்றையே செய்வார்.

### 6. பண்புடையாரின் உயர்ச்சி

பண்புடையாரைச் சார்ந்து அமைந்திருப்பதால் உலகம் இடையறாது இயங்கி வருகிறது. அவ்வாறு சார்ந்து இல்லையாயின் உலகமானது மண்ணுள் புகுந்து மறைந்து போகும். எனவே உலகியல் நிலைத்து இயங்குவதற்கு அனைவரும் பண்புடைமையைச் சார்ந்து ஒழுகுதல் வேண்டும்.

### 7. அறிவின் பயனானது மக்கட்பண்பு

நன்மக்கட்கே உரிய நற்பண்பு இல்லாதவர். அரத்தின் கூர்மை போலும் கூரிய அறிவுடையராக இருந்தாலும் ஓரறிவுடைய மரத்திற்கு ஒப்பாகக் கருதப்படுவர். அறிவிற்குப் பயனான மக்கட் பண்பு இல்லையாயின் அறிவும் இல்லாதவர் என்றே கருதப்படுவர்.

### 8. பண்புடையாருக்கு இழுக்காதல்

தம்மோடு நட்பு கொள்ளாது பகைமையே செய்தொழுகுபவர் இடத்திலும் தாம் பண்புடையராக நடந்து கொள்ளாமை அறிவுடையார்க்கு இழுக்காகும். எனவே எத்தகைய தன்மை உடையவருடனும் பகைமை பாராட்டாது பழகுதல் பண்புடைமை ஆகும்.

### 9. பண்பின்மையின் குற்றம்

**பண்பின்மையால்** ஒருவரோடும் கலந்து உரையாடி மகிழும் தன்மை அறியாவதற்கு மிகப் பெரிய உலகமானது பகல்பொழுதிலும் இருள் நிறைந்து காணப்படும். எனவே எல்லோரோடும் கலந்து பழகும் தன்மை அறியாததால் பண்பில்லாதவர்க்கு உலகியல் தெரியாது என்பது பொருளாகும். எனவே அனைவரோடும் கலந்து மகிழ்தலே பண்புடைமையாகும்.

### 10. பண்பில்லாரின் கேடு

பண்பில்லாதவன் தன் முன்வினையால் பெற்ற பெருஞ்செல்வமானது ஒருவருக்கும் பயன்படாது கெடும் என்பது, நல்ல பசுவின் பாலானது வைத்த கலத்தின் குற்றத்தால் சுவையின்றி கெட்டதைப் போன்றதாகும். உலகின் எல்லாப் பயனையும் பெறுதற்குக் காரணமானது பெருஞ்செல்வம். அப்பெருஞ்செல்வம் பண்பில்லாதவர்க்கும் பிறருக்கும் பயன்படாது போகும்.

## திருக்குறள் - வினைத்திட்பம்

வினையாவது செயல். திண்மையாவது உறுதி. எனவே வினைத்திட்பம் என்பது வினைத்திண்மை. அதாவது வினை உறுதி என்பதாகும். குறிப்பிட்ட செயலை வெற்றிகரமாகச் செய்து முடிப்பவனுக்கு வேண்டிய மனவுறுதியை இவ்வதிகாரம் விளக்குவதாக அமைந்துள்ளது.

**வினைத்திட்பம் என்பதன் விளக்கம்**

ஒரு வினையின் திண்மை, உறுதி என்பது அதனை முடித்தற்கு உரியவனின் மனத்திண்மையே ஆகும். வினை நல்ல முறையில் முடிவதற்குத் துணையாகின்ற படை, அரண், நட்பு முதலானவையும் திண்மைகள் என்று கூறப்பட மாட்டா.

**வினைத்திட்பம் குறித்த கொள்கை**

ஒரு வினையைச் செய்வதற்கு முன்னர் அதற்கு இடையூறு ஏற்படுமாயின் அவ்வினையைச் செய்யாமையும், செய்யும் வினையில் இடையூறு எற்பட்ட வழி அதற்குத் தளராமையும் ஆகிய கொள்கையே நீதி நூல் ஆராயந்த அமைச்சரது கொள்கையாகும்.

**வினை செயலாற்றும் வகை**

இடையூறு ஏற்படுத்துவோருக்கு இடையே இருந்து ஒரு செயலைச் செய்ய வேண்டிய சூழலில் பின்வருமாறு செயல்பட வேண்டும். குறித்த ஒரு செயலை பிறர் அறியாத வண்ணம் முதலில் மறைத்து, பின்னர் பிறருக்குப் புலப்படும் வகையில் செய்து முடிப்பதே வினை செய்யக் கூடிய வகை ஆகும். அதுவே வினைத்திட்பம் ஆகும். அங்ஙனம் இன்றி அவ்வினையானது இடையிலேயே பிறருக்குப் புலப்படுமாயின் செய்பவனுக்குப் பெருந்துன்பத்தைத் தந்து அச்செயலையும் முடக்கும்.

**வினைத்திட்பத்தின் அருமை**

ஒரு வினையை இவ்வாறெல்லாம் செய்து முடிக்கலாம் என வரிசைபட வழி சொல்லுதல் எல்லோருக்கும் எளியதாகும். ஆனால் சொல்லிய வழியில் நின்று அதனை வெற்றியுறச் செய்து முடிப்பது என்பது அனைவருக்கும் அரியவாகும்.

**வினைத்திட்பத்தின் சிறப்பு**

சிந்தனையாலும், செயல் திறனாலும் சிறப்பு பெற்றுப் பிற இலக்கணங்களால் பெருமை பெற்ற அமைச்சரது வினைத்திட்பமானது அரசனுக்குச் செல்வத்தையும், புகழையும் தரக்கூடியதாகும். அரசனாலும் எல்லோராலும் நன்கு மதிக்கப்படக் கூடியதாக அமையும்.

**வினைத்திட்பமுடையவர் எய்தும் பயன்**

ஒரு செயலைச் செய்ய நினைத்தவர் அவ்வினையை முடிப்பதற்குரிய மனவுறுதி உடையவராயிருப்பின், அவர் அடைய எண்ணிய பொருள்கள் எல்லாவற்றையும் அவர் எண்ணியவாறே எய்துவர்.

**வினைத்திட்பம் உடையவரை அறிதல்**

உருண்டு செல்லும் பெரிய தேரின்கண் உள்ள அச்சாணி உருவில் சிறியது. ஆயினும் தேர் ஓட அதுவே அடிப்படை. அதுபோன்று உருவில் எளியவராயினும் எடுத்த காரியத்தில் உறுதியுடன் இருந்து வினையை முடிப்பவர் இவ்வுலகில் உண்டு. ஆதலால் உருவத்தில் சிறுமை கண்டு எவரையும் இகழாது இருத்தல் வேண்டும்.

**வினை செய்யும் வகை**

பலகாலம் ஆராய்ந்து கலக்கமின்றி மனம் தெளிந்து தாம் செய்வதாகத் தேர்ந்தெடுத்துத் துணிந்த செயலை, பின்னர் மனச்சோர்வில்லாமலும் காலம் தாழ்த்தாமலும் செய்து முடிக்க வேண்டும்.

**வினை செய்யும் உறுதி**

ஒரு செயலைச் செய்ய முயலும் பொழுது முதலில் துன்பம் மிக வருமாயினும் அதனைக் கண்டு தளர்தல் கூடாது. அச்செயல் முடிவில் இன்பம் தரும் என்ற நம்பிக்கை வேண்டும். எனவே எச்செயலினையும் மனவுறுதியோடு செய்தல் வேண்டும்.

**வினைத்திட்பம் இல்லாதவரது இழிவு**

ஒரு செயலைச் செய்வதற்குரிய மனவுறுதி இல்லாதவருக்கு அம்மனவுறுதி அல்லாத பொருள், படை, நட்பு, அரண் முதலிய உறுதிபாடுகளெல்லாம் அமைந்தாலும் அவை பயனற்றவையே. மனத்திட்பம் இல்லாத அவரைக் கண்டு உலகிலுள்ள உயர்ந்தோர் மதியார்.

# பழமொழி நானூறு

## கல்வி

குடிப்பதற்கு இனிமையான, உவற்பில்லாத நல்லநீர் கிணற்றைத்தவிர வேறு இடத்தில் இல்லையென்று நினைக்கும் கிணற்றுத்தவளை போல், தாமும் கருதாமல். நாள்முழுவதும் வெறுப்பின்றி இனிதாகப் படித்தலைக் காட்டிலும் அறிஞர்களிடம் பாடம் கேட்டல், ஊன்று கோல் போல் உதவுமாதலால் **“கற்றலைவிட கேட்டலே”** மேல் என்கிறார் பெருவாயில் முள்ளியார்.

### அறிவுடைமை

மூங்கிலைப் போன்று நன்கு செழிப்புற்று வளர்ந்த, திரண்ட தோள்களையும், கூரிய வேல்போன்ற கண்களையும் உடைய பெண்ணே பரந்த வானிலே ஒளிவீசிக் கொண்டிருக்கின்ற கதிரவனைக் கையால் மறைக்க இயலுமோ? அதுபோல மிகுந்த அறிவும், ஆற்றலும் கொண்டவர்களை தகாத சொற்களையும், செயல்களையும், பழி பாவங்களையும் அவர்மேல் சுமத்தி , அவர்களின் புகழைக் கெடுக்க இயலுமா?.

### இன்னா செய்யாமை

நெஞ்சே தீங்கின் பயனை அடைவதற்கு நீண்ட நாட்கள் ஆகும் என்ற எண்ணத்தை உள்ளத்திலிருந்த அகற்றினால் அதன் பயனை உடனே அடைவாய். ஆகவே யாருக்கும், எவ்வுயிர்க்கும் தீங்கு செய்ய நினைப்பதைவிடுத்து நன்மை செய்யப்பழகுவாயெனில் அதுவே சாலச்சிறந்தது.இதில் **“முற்பகல் செய்யின் பிற்பகல்விளையும்”** என்பது பழமொழி.

### கீழோர் வாழ்க்கை

மலையினின்றும் விழுகின்ற ஒளிவிளங்கும் அருவியை உடைய மலைநாடனே, புகழ்நிறைந்த குடியில் பிறந்த அறிவு நிறைந்தவர்கள் வறுமையில் வாடிநிற்க, நல்ல பண்பும், நன்னடத்தையும் இல்லா கீழோர் செல்வத்தால் பெருகிநிற்பது, மிதக்க வேண்டிய சுரக்காய் நீரில் மூழ்கி இருப்பதும், மூழ்கி இருக்கவேண்டிய அம்மி மிதந்து கொண்டிருப்பதற்கும் ஒப்பாகும் என்கிறார். இதில், **'சுரை ஆழ அம்மி மிதப்ப'** என்பது பழமொழி.

### முயற்சி

விருப்பத்துடன் செய்யப்படும் செயல் விரவில் நிறைவுபெரும் ஆதலால் அதன் பயனையும் உடனடியாகப் பெறமுடியும். ஆகவே முயற்சியே உரிய செல்வத்தைச் சேர்க்கும் என்கிறார். இதில் **'முனிவில்லார் முன்னியது எய்தாமை யில்'** என்பது பழமொழி.

**பகுதி – அ (ஒரு மதிப்பெண் வினாக்கள்)**

1. ஆசாரம் என்பதன் பொருள்?
(அ) பண்பு (ஆ) ஒழுக்கம் (இ) ஆக்கம் (ஈ) அறிவு
2. கெடுவது செய்யின் விடுவது ……….
(அ) பண்பு (ஆ) ஒழுக்கம் (இ) ஆக்கம் (ஈ) கருமம்
3. நீதிநூல்களுள் காலத்தால் முற்ப்பட்டது எது?
(அ) கொன்றை வேந்தன் (ஆ) திருக்குறள் (இ) நாலடியார் (ஈ) பழமொழி நானூறு
4. கிணற்றகத்துத் தேரை போல் ஆகார் என்ற பாடல் வரி இடம்பெறும் இலக்கியம் எது?
(அ) கொன்றை வேந்தன் (ஆ) திருக்குறள் (இ) நாலடியார் (ஈ) பழமொழி நானூறு

5. 'ஆசாரம்' என்னும் சொல்லின் பொருள் யாது?.

(அ). கல்வி (ஆ).செல்வம் (இ). ஒழுக்கம் (ஈ). வீரம்

6. நீதிநூலின் ஆசிரியர் யார்?

(அ). ஔவையார் (ஆ). வேதநாயகம்பிள்ளை (இ). திருவள்ளுவர் (ஈ). பெருவாயின்முள்ளியார்

7. திருக்குறள் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் …… குறட்பாக்களை உடையது?

அ). ஐந்து (ஆ). பத்து (இ). ஏழு (ஈ). மூன்று

8. பெருவாயின்முள்ளியார் எழுதிய நூல் எது?.

(அ). ஆசாரக் கோவை (ஆ). கொன்றை வேந்தன் (இ). நீதி நூல் (ஈ). பழமொழி நானூறு

9. ஔவையார் எழுதிய நூல் எது?
அ) கலாவதி ஆ)ஞானக்குறள் இ) அழகின்சிரிப்பு ஈ) கண்ணன் பாட்டு
10. அறநெறி கூறும் நீதி நூல்களில் காலத்தால் முற்பட்டதுஎது?
அ)கொன்றைவேந்தன் ஆ)பழமொழி இ)திருக்குறள் ஈ)ஆசாரக்கோவை
11. அறத்துப்பாலில் அமைந்துள்ள அதிகாரங்கள் எத்தனை?
அ) 70 ஆ) 25 இ) 33 ஈ) 38
12. ஆசாரக்கோவையின் ஆசிரியர் யார்?
அ) ஒட்டக்கூத்தர் ஆ) திருவள்ளுவர் இ) கவிமணி ஈ) பெருவாயின் முள்ளியார்
13. "திரை கடல் ஓடியும்……. தேடு"
அ)சுற்றம் ஆ)அறிவு இ)திரவியம் ஈ)தெய்வம்
14. திருக்குறள் - பொருட்பாலில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?
அ) 25 ஆ) 70 இ) 38 ஈ) 133
15."சொல்லுதல் யார்க்கும்…..….அரியவாம்"
அ) வலிய ஆ) எளிய இ) சொல்லிய ஈ) வண்ணம்
16. முன்றுறையரையனாரால் இயற்றப்பட்ட நூல் எது?
அ) பழமொழி நானூறு ஆ) ஆசாரக்கோவை இ) மூவருலா ஈ) நீதிநூல்

17. பீரம்' என்னும் சொல்லின் பொருள் யாது?.

(அ). கல்வி (ஆ). உணவு (இ). தாய்ப்பால் (ஈ). நன்மை

18. நைபவர் எனினும் எங்ஙனம் உரைக்கக் கூடாது?

அ).நொய்ய உரைத்தல்(ஆ). அன்புடன் உரைத்தல் (இ).அறிவுடன் உரைத்தல்

(ஈ). ஆக்கத்துடன் உரைத்தல்

19. 'ஊழையும் உப்பக்கம் காண்பவர்' யார்?.

அ.கல்வியாளர் ஆ.செல்வந்தர் இ.அயராது உழைப்போர் ஈ.அறிவில் சிறந்தோர்

20. முன்றுறையரையனார் எழுதிய நூல் எது?.

(அ). ஆசாரக் கோவை (ஆ). கொன்றை வேந்தன் (இ). நீதி நூல் (ஈ). பழமொழி நானூறு

## பகுதி – ஆ (2 மதிப்பெண் வினாக்கள்)

1."கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
2. நகமும் சதையும் போல –பழமொழிக்கான விளக்கம் தருக.
3.மரம் போல்வர்"-என்றுவள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?
4. "தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்"-இடம் சுட்டிப் பொருள் கூறு?
5."ஔவையார்"- இயற்றிய நூல்கள் நான்கினைக் கூறு?
6. 'முனிவில்லார் முன்னியது எய்தாமை இல்' – பழமொழிக்கான விளக்கம் தருக.

## பகுதி – இ (6 மதிப்பெண் வினாக்கள்)

1.ஆசாரக்கோவை உணர்த்தும் அறக்கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.
2. பழமொழி நானூறு உணர்த்தும் கருத்துக்களைத தொகுத்தெழுதுக.
3. மக்கட்பண்பின் இன்றியமையாமையைத் திருக்குறளின் வழி விளக்கு?
4. நீதிநூல் தரும் நீதிக்கருத்துக்களைப் பட்டியலிடுக.
5. கொன்றைவேந்தன் வழி ஔவையார் கூறும் அறக்கருத்தினைத் தொகுத்து எழுதுக.
5. வினைத்திட்பத்தின்சிறப்புகளாகவள்ளுவர் கூறும் கருத்தினைத் தொகுத்துஎழுதுக.
7. "வினைத்திட்பத்தின்" இன்றியமையாமையை விவரி?
8. கொன்றை வேந்தன் குறிப்பிடும் நற்பண்புகளைக் கூறுக?
9. ஆசாரக் கோவை உணர்த்தும் வாழ்வியல் நெறிமுறைகளைப் பட்டியலிடுக.
10. வினைத் திட்பத்தின் இன்றியமையாமையைத் திருக்குறளின் வழி விளக்குக.

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

**கோவை- 21.**

Enable | Enlighten | Enrich
(Deemed to be University)
(Under Section 3 of UGC Act 1956)

## கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

## தமிழ்த்துறை

(2017-2018)

**பகுதி – I, தமிழ் தாள் – I 17LAU101**

**பாடத்திட்டக் குறிப்புகள்**

முதலாமாண்டு இளநிலை கலையியல்

பட்ட வகுப்புகளுக்குரியது

# இயல் - 3

## .திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் -பகழிக்கூத்தர்

இச்சிற்றிலக்கியமானது , திருச்செந்தூர் முருகனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடப்பெற்றதாகும்.இச்சிற்றிலக்கியமானது , திருச்செந்தூர் முருகனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடப்பெற்றதாகும்.

1. **வருகைப்பருவத்துப்பாடல் :**

**வயல்வெளியில் வாளை மீன்களின் செயல் :** வாளை மீன்கள், வலிமையானவை. ஊடலில் கோடுகளைக் கொண்டவை. அவை, செந்நெல் செழிப்பாக வளர்ந்த நெல் வயல்களில் இருந்து குதித்து விளையாடுகின்றன. முற்றி வளர்ந்த செந்நெல் கதிர்களுக்கு இடையில் வாளைமீன்கள் புகுந்து விளையாடுவதால், நெற்கதிர்கள் ஒன்றோடொன்று பிணைந்து நின்றன.

**உழவர்களின் அறுவடையும் உயர்ந்த முத்தைப் பெறுதலும்** : விளைந்த நெற்கதிர்களை, உழவர்கள் கூர்மையான அரிவாள் கொண்டு அறுத்தெடுத்தனர். அறுவடைசெய்த நெல்லை அவர்கள், பண்டமாற்று முறையில் விற்பனை செய்தனர். அப்பொழுது, அவர்கள் நெல்லுக்கு ஈடாக, வெண்முத்தைப்பெற்றுவந்து, தமது குடிசைகளில் சேர்த்தனர்.

**வள்ளி கணவன் முருகனின் திருச்செந்தூர்** : மேற்கண்டவாறு நீர்வளமும், நில வளமும் நிறைந்து விளங்குவது திருசெந்தூர் ஆகும். அங்கு அழகில் சிறப்புடைய வேலினைக் கருவியாகக் கொண்டு முருகன் வீற்றிருக்கின்றான். அவன், மணம் மிக்க சந்தனத்தை பூசி மகிழ்கின்ற வள்ளியின் கணவனாக விளங்குபவன். அவனே குழந்தையாக விளங்குகின்றான். துளிர் போன்று மென்மையாக, அடிமேல் அடிவைத்து நடக்கின்ற குழந்தை முருகனே! வருக! வருக! என்று அழைப்பதாகப் பாடல் அமைந்துள்ளது.

2.**அம்புலிப் பருவத்துப் பாடல் :**

**நிலவே விளையாடவா:** பெரிய மலைகளும் கிடுகிடுவென்று அதிரும்பயாக, மிகுந்த வேகத்தில் மயிலேறி வருபவன், திருச்செந்தூரில் வீற்றிருக்கின்ற குழந்தை முருகன். அவனுடன் விளையாட வருமாறு நிலவை அழைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**நெய்தல் நிலத்தில் முத்தின் ஒளி :** கடலில் இருந்து அளவில்லாத முத்துகள் கரை ஒதுங்கும், நெய்தல் நிலத்தில் உள்ள மக்கள் அதனைச் சேகரித்து மகிழ்வர். அத்துடன், சிறந்த வலம்புரிச் சங்கும், அளவில்லாத முத்துக்களைக் கரை ஒதுக்கிச் செல்லும். மேலும், கடற்கரைச் சோலையில், தாழை மடல்கள் மலர்ந்து மணம்வீசும், இளவாடைக்காற்று, அதன் மணத்தைச் சுற்றப்புறம் முழுவதிலும் பரப்பும். அங்கு, தாழை மடல்களின் உள்ளே இருந்து முத்துகள் ஒளி வீசும்.

**நூறுகோடி நிலவை காட்டிலும் பேரொளி :** திருச்செந்தூரின், எல்லா இடங்களிலும் முத்துக்கள் நிறைந்திருக்கின்றன. அவை பேரொளி வீசுகின்றன. அவ்வொளி, நூறு கோடி நிலவின் ஒளியைக் காட்டிலும் சிறந்த பேரொளியாக விளங்குகிறது. இதனால், அங்கு இருள்சூழ்ந்த இரவுப்பொழுது என்பதே இல்லை.

**அருள் நிலவாக முருகன் :** இரவு -இரத்தல்,பிறரிடம் பொருளைப்பெற்று வாழ்வதாகிய வறுமை வாழ்க்கை, திருச்செந்தூரில் இருந்து, குழந்தை முருகன், வேண்டுவோரின் வேண்டுதலுக்கு ஏற்ப அவர்தம் தகுதிக்கு உரியதைக் குறைவில்லாமல் தந்தருள்கின்றான். அதனால், அங்கு வறுமையில் வாடிப் பிறரிடம் பொருளை நாடிச் செல்கின்ற இழிவாகிய, கீழான வாழ்க்கை என்பது எவருக்கும் இல்லை. அவனே அருள்நிலவாக இருந்து, அனைத்தையும் வாரி வழங்குவதால், அருள்செல்வமாகிய ஒளி அனைத்து இடங்களிலும் நிறைந்திருந்தது.

**உன்குற்றம் நீங்கும் :** நிலவே! நீ, குழந்தை முருகனுடன் விளையாட வரவேண்டும். அவனுடன் விளையாடுவதற்கு வந்தால், எவராலும் நீக்க இயலாத, உனது குற்றமாகிய கலங்கத்தை அவன் போக்கி அருள்வான். இவ்வாறு, திருச்செந்தூரின் குழந்தை முருகனுடன் விளையாட வருமாறு நிலவினை அழைப்பதாக
இப்பாடல் அமைந்துள்ளது.

# மூவருலா - ஒட்டக்கூத்தர்
## இராசராச சோழன் உலா

**முன்னுரை :**

உலா என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று பாட்டுடைத் தலைவன் உலா வருதலைச் சிறப்பித்துப் பாடுதலின் இப்பெயர் பெற்றது. உலா என்பதற்குப் பவனி வருதல் என்பது பொருள். தலைவன் வீதியில் உலாவர அவனை ஏழுவகைப் பருவ மகளிரும் கண்டு காதல் கொள்வதைக் கூறுவது உலா என்னும் சிற்றிலக்கியமாகும்.

**ஒட்டக்கூத்தர் :**

கூத்தர் என்பதே இவர் இயற்பெயர் ஓட்டம் (பந்தயம்) வைத்துப் பாடுவதில் வல்லவர். ஆதலால் இவர் 'ஒட்டக்கூத்தர் எனப்பட்டார்.

**இராசராச சோழனின் வில் :**

- இந்திரனுடைய வச்சிரப் படையை வென்ற சிறப்பு உடையது.
- இலங்கைக்கு சேது அணை கட்டிய போது ஓர் அம்பினை விடுத்துப் பெருங்கடல் காய்ந்து வற்றிப் போகும் படி செய்த சிறப்புக்குரியது.

**இராச ராசசோழனின் வாள் :**

- வெள்ளம் பெருக்கெடுத்தோடி வீணாகக் கடலில் சென்று கலக்கும் காவிரியாற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டி மக்கள் வளமுடன் வாழ வழிவிட்டது.
- வானத்தில் வாழ்ந்த பகைவர்களை வென்ற தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன் கையில் தவழ்ந்த பெருமைக்குரியது.

**இராச ராசசோழனின் முரசு :**

- வஞ்சி மாநகரத்தில் சேரர் அஞ்சிப் போட்டுவிட்டு ஓடிய கடம்பமரத்தால் செய்யப்பட்ட பெருமை மிக்க முரசு.
- சோழனுடன் போரில் தோற்ற வேற்று நாட்டு மன்னர்கள், இழந்த தமது நாட்டை மீண்டும் பெற்றுக்கொண்டதற்கு பிரதிபலனாக தம் தலையில் மண் சுமந்து காவிரியில் அணைகட்டுமாறு செய்த கம்பீரமான முரசம் இதுவாகும்

**இராசராசசோழனின் கொடி:**

- இந்திரனைப் புலியாகக் கொடியில் கொண்டுள்ள சோழர்கொடி மேருமலையை வலம் வந்த பெருமைக்குரியது.

**இராசராசசோழனின் குடை:**

சோழநாட்டு மக்களைக் காக்கும் பொருட்டு வானளவு நெடிது உயர்ந்திருக்கும்

சிறப்புமிக்கது சோழன் குடை.

## குற்றாலக் குறவஞ்சி – திரிகூடராசப்பக்கவிராயர்

1. ஆண் குரங்குகள் பல்வகைப் பழங்களைப் பறித்துக் கொடுத்துப் பெண் குரங்குகளோடு தழுவும்; அக் குரங்குகளால் சிதறியெறியப்படுகின்ற பழங்களை வானுலகத்தில் வாழும் தேவர்கள் இரந்து

இரந்துவேண்டிக் கேட்பார்கள், வனவேடர்கள் தம் கண்களால் ஏறெடுத்துப்)பார்த்து உற்று நோக்கித் தேவர்களை அழைப்பார்கள்; வானின் வழியாகச் செல்கின்ற சித்தர்கள் கீழிறங்கி வந்து காயசித்தி மருந்துகளாகிய வன மூலிகைகளை வளர்ப்பார்கள்; தேன் கலந்த மலையருவியினது அலைகள் மேலெழுந்து வானத்தினின்றும் வழிந்து ஓடும்; அதனால் செந்நிற ஞாயிற்றின் தேரிற்பூட்டிச் செல்லும் குதிரைக் கால்களும் தேர்ச்சக்கரமும் வழுக்கி விழும்; வளைந்துள்ள இளம் பிறையைச் சூடியிருக்கின்ற சடைமுடியையுடைய அழகரான திருக்குற்றால நாதர் எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றாலமாகிய இச் சிறப்புவாய்ந்த திரிகூடமலையே எங்களுக்குரிமையாக நாங்கள் வாழ்கின்றமலையாகும்;

2. ஒலிக்கின்ற அலைகளையுடைய நீர் வீழ்ச்சி, செல்லும் வேகத்தில் கழங்காடுகின்ற தென்னும்படி முத்துக்களை ஒதுக்கிச் செல்லும்; அவ்வருவி, மக்கள் வாழ்கின்ற வீட்டின் முற்றங்களிலெல்லாம் பரவிச் சென்று சிறுமிகளின் மணல்வீடுகளை அழித்துக் கொண்டு ஓட்டம் பிடிக்கும்; நாங்கள் மலைக்கிழங்குகளைத் தோண்டியும், தேன் இறால்களைப் பிய்த்து எடுத்தும், மலையின் செழிப்பைப் பாடிக்கொண்டே கூத்தாடுவோம்; பூண்கட்டிய யானைக்கொம்புகளை ஒடித்து உலக்கையாகக் கொண்டு வறுத்த தினைத் தானியத்தை இடிப்போம். இளமை பொருந்திய குரங்குகள் இனிமையுள்ள மாம் பழங்களையே பந்தாகக் கொண்டு அடித்து விளையாடும்; தேன் பெருகி ஓடுகின்ற செண்பகப் பூவின் மணம், தேவருலகினிடத்தே போய்ப் பரவும்; அருட்கொடை வழங்குகின்ற தேவாதி தேவராகிய குறும்பலா மரத்தினடியில் எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றால நாதருக்குரியதான எல்லா வளப்பமும் பெருகியிருக்கின்ற திருக்குற்றாலமலையே எங்களுக்குரியதாக நாங்கள் வாழுகின்றமலையாகும்;

3. ஆடுகின்ற நாகப் பாம்புகள் கக்கிய எண்ணிறந்த மணிகள் எங்கும் ஒளிகொடுக்கும்; யானைகளானவை திங்களைத் தாம் உண்ணும் கவள உருண்டையென எண்ணி அது செல்கின்ற வான்வழியில் போகவொட்டாமல் தடைசெய்யும், மலைக் குறவர்கள் தினைப்பயிரை விதைப்பதற்காக அழிக்கப் படுகின்ற காடுகளிலெல்லாம் உள்ள பலவகை மரங்களும் அகில் குங்குமம் சந்தனமரங்களும் கண்டோர் வியக்கும்படி தம் மணங்களைப் பரப்பும்; காடுகளில் எங்கும் ஓடிச்சென்று வரையாடுகள் துள்ளிக் கீழே பாயும்; காகமும் பறவாத உயர்ந்த மலையில் மேகக் கூட்டங்கள் உச்சியில் சாய்ந்தோடும்; நீண்ட குறும்பலாவடியில் எழுந்தருளியிருக்கின்றவரும் கைலை மலையில் வாழ்பவருமாகிய திருக்குற்றாலநாதரின் நிலைபெற்றிருக்கின்ற திருக்குற்றாலமலையே எங்களுக்குரியதாக நாங்கள்வாழ்கின்றமலையாகும்;

4. திருக்கைலைமலை யென்று கூறப்படுகின்ற வடக்குப் பக்க மலைக்குத் தென்பக்கத்தில் இருக்கின்ற மலையாகும்; இது பெரிய பொன்மலை என்னும் மேருமலை போன்ற தென்னும்படி உயர்ந்த மலை அம்மே! சிவசைலம் என்னும் தெற்கு பக்கமுள்ள மலைக்கு வடக்குப் பக்கமாக இருக்கின்ற மலை இஃது அம்மே! இம்மலை மற்ற எல்லா மலைகளின் சிறப்பெல்லாம் தனக்குள் நிறையக்கொண்டிருக்கும் வளமுடையது அம்மே! அது வைரமணியுடன் பலவகை மணிகளையும் விளைத்துத் தருவது அம்மே! வான்வழியாகச் செல்லும் ஞாயிறு குகைகளையே வழியாகக்கொண்டு நுழைந்து செல்வதற்கு இடனாகஇருப்பதும் அந்த மலைதான் அம்மே! அறிதுயில் புரிகின்ற திருமாலான வருங்கூடத் துயில் விட்டெழுந்து எல்லா உலகங்களிலும் போய்த் தேடுகின்ற மேன்மையாளராகிய திரிகூடநாதப் பெருமானுக்குரிய திரிகூட மலைதான் எங்களுக்குரியதாக நாங்கள் வாழ்கின்ற மலையாகும் அம்மே!

5. கொல்லி மலையானது எனக்குப் பின் பிறந்த செல்லி என்னும் பெயருடையாளுக்குரிய மலையாகும்; அவளின் கணவனுக்குக் குடிக்காணியாட்சியாக இருப்பது பழனிமலை ஆகும் அம்மே! ஞாயிறு மேலே செல்கின்ற விந்தை என்னும் மலையே என் தந்தைக்குரிய மலையாகும் அம்மே! இமயமலை என்னுடைய தமையனுக்குரிய மலையாகும் அம்மே! சொல்லுதற்கரிய சுவாமி மலை என்னும் மலையே என் மாமியாளுக்குரிய மலையாகும் அம்மே! என் தோழிக்குரிய மலையோ நாஞ்சில் நாட்டிலுள்ள வேள்வி யென்னும் மலையாகும் அம்மே! மேகங்கள் குமுறலாகிய பறையை முழக்க, அதற்கேற்ப மயிலினங்கள் நடனஞ்செய்கின்ற திரிகூட மென்னும் திருக்குற்றாலமலையே எங்களுக்குச் செல்வப்பொருளாக இருக்கின்ற நாங்கள் வாழும் மலையம்மே!

6. எங்கள் குலந்தவிர வேறொரு சாதியில் நாங்கள் பெண்கள் கொடுக்கமாட்டோம்; வேறொரு குலத்தில் பெண்களை மணஞ்செய்யவும் மாட்டோம்; குறவர் சாதியினராகிய நாங்கள் ஒருவரை நட்புக் கொண்டால் இடையில் அந்நட்பை விட்டுவிடமாட்டோம்; நாங்கள் அச்சங்கொள்ளும்படி தினைப் புனத்தினிடத்தே வருகின்ற யானை முதலிய விலங்குகளைத் துரத்தி வேங்கை மரமாக நின்று எங்களுக்கு நிழல் தந்த நன்மைக்காக எண்ணிப் பார்த்து அருளாளராகிய இலஞ்சியில் எழுந்தருளியிருக்கின்ற வேலினை யுடைய முருகப் பெருமானுக்கு வள்ளி யென்னும் ஒரு பெண்ணை முன்பு கொடுக்கலானோம்; அதற்காக எங்களுக்குரிமையான வேறு மலைகள் எல்லாவற்றையும் மகட்கொடைப்பொருளாக வழங்கலானோம்; ஞாயிறு திங்கள் சுற்றிவருகின்ற மேருமலையைத் துருவன் என்பவனுக்குக் கொடுத்துதவினோம்; சிறந்தவராகிய திருக்குற்றால நாதருக்குரிய இத்தகைய திரிகூட மலையே எங்களுக்குரியதாக நாங்கள் வாழ்கின்ற மலையாகும் அம்மே!

## ***முக்கூடற்பள்ளு - ஆசிரியர்:*** *என்னயினாப் புலவர்.*

பள்ளர்கள் எனப்படுகின்ற உழவர்களின் வாழ்வியலையும்,உழவுத்தொழில் சார்ந்த செய்திகளையும் எடுத்துரைக்கின்ற சிற்றிலக்கியம்.

**பள்ளன்:** திருநெல்வேலியின் சீவலப்பேரியில் வாழ்கின்ற பள்ளன்(திருமாலை வணங்குபவன்). அவனது மனைவியர் இருவர்: **மூத்தவள்,** திருமுக்கூடல் நகரைச் சேர்ந்தவள்: **இளையவள்,** மருதூரைச் சேர்ந்தவள்.

**I.மூத்தபள்ளி, திருமுக்கூடலின்சிறப்புரைத்தல்: 1.**ஊரெங்கும்நீர் வளம் நிறைந்திருக்கும். நீர்நிலைகளில், செழுமையாகமலர்கள் பூத்திருக்கும். எருமைக்கன்றுகள், அவற்றை மேய்ந்து, செழித்திருக்கும்.

**2.** நிலப்பகுதிகளில், பல சோலைகளிலும், வண்ணவண்ண மலர்கள் பூத்திருக்கும்.மேட்டு நிலங்களிலும் மலர்கள் மலர்ந்து, எங்கும் குளிர்ச்சி நிறைந்திருக்கும். அம்மலர்களில் இருந்து தேனெடுக்க, வண்டுகளும், தேனீக்களும் சூழ்ந்து பாடும். அவற்றின் ரீங்கார ஓசை, கடினமான இரும்பையும் உருக்குகின்ற இனிமை உடையதாக இருக்கும்.**3.** சிறந்த நீர் வளத்தினைப் பெற்றிருப்பதனால், ஊரில் வாளை மீன்கள், மிகுதியாக வளர்ந்திருக்கும்.அவை, நீர்க் குடங்களிலும் புகுந்து, துள்ளி விளையாடும்.

**4.** மணிக்கற்களின் சந்தைகள் அமைந்துள்ள, செல்வம் மிகுந்த கடைவீதிகளில்மக்களின் ஆரவாரம், ஓயாமல் நிறைந்திருக்கும்.மக்களின் செல்வவளம் என்றும் சிறந்திருக்கும்.**5.**குறிஞ்சி முதலான நால்வகை நில மக்களும் வாழ்கின்ற, எங்கள் ஊரில் எங்கும் நீதி செழித்திருக்கும்.**6.**இவ்வாறு, என்றும், எப்பொழுதும், அனைத்துவளங்களும் பெருகச் செய்கின்ற உயர்ந்தவராகிய, அழகர் பெருமான் வாழ்கின்ற சிறப்புடைய, முக்கூடல் நகரே, எனது ஊராகும்.

**II. இளைய பள்ளி, திருமருதூரின் சிறப்புரைத்தல்:1.** ஊரெங்கும், நல்லநீரின் வளம் செழித்திருக்கும். பெருகி வருகின்ற நீரில், முத்துகள் இருந்து, வரப்புகளில் தங்கி, நீர்ப் பாதைகளைத் தடை செய்யும்.

**2.** ஊரெங்கும் கரும்பு ஆலைகள் செழித்திருக்கும். **3.** பேரிகை என்னும் வெற்றி முரசு ஓயாமல், ஒலிக்கும். மக்களின் ஓயாத ஆரவார ஓசைகள், கடல் அலைகளின் ஆரவாரத்தையும் தோற்கடிக்கும்.**4.**நாள்தோறும், பலவகைத் திருவிழாக்களும் சிறப்புற நடைபெறும். அதற்கென, பலவகை, வண்ண ஓவியங்கள் ஊரெங்கும் சிறந்திருக்கும். இவ்வாறு பல கலைகளும் ஊரில் செழித்திருக்கும்.**5.** ஒன்பது வகையான மணிக்கற்களும் எளிதில் கிடைக்கின்ற வகையில், செல்வவளம் எங்கும் நிறைந்திருக்கும்.**6.** ஊமத்தை என்னும் மலர்சூடிய இறைவனாகிய சிவபெருமான் வாழ்கின்ற சிறப்புடைய, திருமருதூரே எனது ஊராகும்.

**III. மழை மேகத்தின் வருணனை:**1. மருதமாகிய, வயல் நிலங்களுக்குத் தலைவன், இந்திரன். இந்திரனின் கட்டளைப்படி, மழை மேகமானது, மழையினைப் பெய்தது. **2.**திருமாலின் கையிலுள்ள, வளைவுகள் பொருந்திய, அழகிய வில் போல, பல வண்ணங்களுடன் வானவில் தோன்றியது.**3.** வெள்ளைத்தாமரையில், ஒளியுடன் பொருந்திய நான்முகனைப்போல, பேரொளியுடன், மின்னல் மின்னியது.

**4.**மேகமானது, தனது தலையினில் கங்கை நதியினைத் தாங்கிய, சிவபெருமானை போன்று, நிறைய நீரினைத் தாங்கியிருந்து, பெரும் மழையினைத் தந்தது.**5.**வள்ளலாகிய வடமலையப்பரின், கரிய யானையினைப் போன்று, கறுத்திருந்து, நல்ல மழையினைத் தந்தது.**6.**மழைப் பொழிவுக்குப் பின்னர், அவரது முத்துமாலையின் வெண்மையான நிறத்தைப் போன்று, தனது இயல்பான நிறத்தினைப் பெற்றது.

**IV. பெருக்கெடுத்த வெள்ளத்தின் வேகச் செயல்கள்: 1.** மழையால் பெருகிய வெள்ளமானது, காட்டாறு எனப் கரைப் புரண்டு ஓடியது.ஒரு சமயம், இந்திரன், அனைத்து மலைகளின் செல்வங்களையும், தானே பெற்று, அவற்றை வானவர்களுக்கு வழங்கினான். அவனைப்போன்று, மழை வெள்ளமும், அனைத்து வளங்களையும்,அனைவருக்கும் வாரி வழங்குகின்ற வள்ளலைப் போல, கொடைமுரசு முழங்குகின்ற ஆரவாரத்துடன், மிகவேகமாகப் பெருகி ஓடியது. **2.** மதம் கொண்ட, வலிமையான யானைகளையும், வலிமையான காட்டுப் பன்றிகளையும் அச்சம் கொள்ளச்செய்து, அவற்றைத் தன்னுடன் அடித்துச் சென்றது. **3.**வலிமையான சந்தன மரங்களைச் சாய்த்தும், மூங்கில் மரங்களிலிருந்து முத்துகளைச் சிதறச் செய்தும் பெருக்கெடுத்தது. **4.** காட்டு மல்லிகைக் கொடிகளை அடித்துக்கொண்டு சென்றது. தேன் கூட்டில் இருந்த ஈக்களைச் சிதறச் செய்தது. **5.** காட்டுமரங்களை அடியோடு சாய்த்தும், மேட்டுநிலத்தினை அடைந்தது.**6.** அங்கு, திருமாலின் மருமகனாகிய, முருகனை வணங்கியது. அங்கிருந்த வயல்களில் புகுந்து, தானியங்களையும், ஐவனம் எனப்படுகின்ற நெல் முதலானவற்றையும் தன்னுடன்

கொண்டுசென்றது. **7.** இறுதியில்,பாலை நிலத்தினையும் வளமாக்குகின்ற வகையில், அங்கு சென்று புகுந்தது.

**V. பள்ளன், நில வகை கூறுதல்:**இவ்வளவு நாள்களிலும், நீ செய்த வேலைகள் என்ன? என்று கூறும்படி, **பண்ணைக்காரன், பள்ளனிடம் கேட்டான். அதற்கு விடை கூறுவதாக, பள்ளன், தான் வேலைசெய்த பலவகையான நெல்வயல்களின் விவரத்தையும் பண்ணைக்காரனிடம்பட்டியலாக எடுத்துக்கூறினான்.**

**1.** சீவலப்பேரி ஏரியின் நீர்பாய்கின்ற, முக்கூடல் அழகரின் பெயரைக் கொண்டநெல்வயல்கள்,

**2.**மழைக் கால விளைச்சலைக் காட்டிலும் அதிக விளைச்சலைத் தருவது, கதலி வாழை என்னும் நெல்வகையாகும். அந்நெல் விளைகின்ற நெல்வயல்கள், **3.**சன்னை வெட்டியான் என்னும் வாய்க்கால் பாய்கின்ற நெல்வயல்கள், **4.**வன்னி மரங்கள் நிறைந்த மேட்டு நில வயல்கள், கோரைப் புற்கள் வளர்கின்ற ஓடைக் கரையினை ஒட்டிய வயல்கள், **5.**ஏரி நீரின் அளவினைக் குறிப்பதற்காக, நிலையாக நடப்பட்டுள்ள குத்துக்கல்லின் அருகில் அமைந்த நெல் வயல்கள், **6.** குளத்தினை ஒட்டிய நெல் வயல்கள், **7.** வீரபாண்டி ஏரியின், பாசன நெல் வயல்கள், **8.** திருமால் கோயிலின் நெல் வயல்கள், **9.**அளவைக்கு உட்பட்ட நெல் வயல்கள், **10.** உடையான் ஏரிப் பகுதியின் நெல் வயல்கள், **11.** ஆந்தைக் குளத்து நெல்வயல்கள், **12.**தோணித்துறையை ஒட்டிய நெல்வயல்கள் எனப் பல வகையான நெல் வயல்களுக்கும், விளைச்சல் பெருகுகின்ற வகையில் நிலத்தை பண்படுத்தினேன். மேலும், ஆட்டின் சாணத்தையும் அந்நெல் வயல்களுக்குச் சிறந்த உரமாக இட்டேன்.

---

## *சிற்றிலக்கியம்: கலிங்கத்துப்பரணி. ஆசிரியர்:* *செயங்கொண்டார்.*

***பரணி:*** போர்களத்தில், ஆயிரம் யானைகளை வென்ற வீரனின், வெற்றியைச் சிறப்பித்துப் பாடுவது, பரணி இலக்கியத்தின் அடிப்படையாகும். முதலாம் குலோத்துங்க சோழன், கலிங்கப் போரில் வெற்றி பெற்றான். முதுபேய் ஒன்று, காளி முதலானவர்களுக்கு, அப்போர்க்களக் காட்சிகளை எடுத்துரைப்பதாக, பாடப்பகுதி அமைந்துள்ளது.**1. போர்க்களப் பெருமை:**தேவர்களுக்கும், அசுரர்களுக்கும், 18- ஆண்டுகள் நடைபெற்ற போரும், இராமனுக்கும், இராவணனுக்கும், 18-மாதங்கள் நடைபெற்ற இராமயணப் போரும், 18-நாட்கள், பாண்டவர்க்கும், கௌரவர்க்கும் நடைபெற்ற மகாபாரதப் போரும், போர்க்களங்களும் கொடுமையானவை என்ற வரலாறுகள் மக்களிடையே உண்டு. அவ்வரலாறுகள், பொய்யாகும்படியாக, கலிங்கத்தில் கொடுமையான போர் நடைபெற்றது.

**2.கடலில் கப்பல்கள் போல, யானைகளின் வரிசை:**போர்க்களமானது, இரத்தக் கடல்போலக் காட்சியளித்தது. அங்கிருந்த யானைகளின் உடல் முழுவதிலும் காயங்கள் ஏற்பட்டு, இரத்தம் வழிந்தது. அத்துடன், பின்னங்கால்களில் ஏற்பட்டிருந்த, கடுமையான காயங்கள், யனைகளால் வேகமாக நடந்து செல்ல இயலாத சூழலை ஏற்படுத்தின. அதனால், அவை, ஒன்றன் பின் ஒன்றாக, மிக மெதுவாக நகர்ந்து நகர்ந்துசென்றன.அக்காட்சியானது, கடலில், ஒன்றன்பின் ஒன்றாகக் கப்பல்கள் அணிவகுத்துச் செல்வதைப்போலக் காணப்பட்டது.

**3.கொழுப்புச் சேற்றில் குதிரைகளின் தவிப்பு:**இரத்தக் கடலாகக் காட்சியளித்த போர்க்களத்தில், கொழுப்புச் சேறானது, எங்கும்நிறைந்து இருந்தது.கவசங்கள் போர்த்தப்பெற்று, வேகமாகப் பாய்கின்ற குதிரைகளின் கால்கள், இக்கொழுப்புச் சேற்றில் சிக்கின.அதனால், அவை, மிகவும் வேகமாகப் பாய்ந்து செல்ல வழியில்லாமல், ஒன்றன் பின்னால் ஒன்று, வரிசையாக நின்றன.அக்காட்சியானது, பெருக்கெடுத்து வருகின்ற

இரத்த வெள்ளத்தைக் கட்டுப்படுத்த அமைக்கப்பெற்ற, அணை போன்று காட்சியளிக்கிறது. அதனைப் பாருங்கள்! பாருங்கள்!.

**4. எக்காளம் ஊதுவோர் போன்ற வீரர்கள்:** பகைவர் வீசிய வேல்கள், வீரர்களின் வாயில் நிலையாகப் பாய்ந்தன. உறுதியாகப் பாய்ந்த அவ்வேல்களைத்தமது கைகளால் உருவி எடுக்க வீரர்கள் கடுமையாக முயற்சி செய்தனர். தமது கைகளில், அவர்கள் வேலினைப் பற்றிஇருந்த காட்சியானது, குழல் போன்றுநீண்ட, எக்காளம் என்னும் இசைக் கருவியினை இசைப்பவர்கள் போன்று அமைந்திருக்கிறது.அதனைப் பாருங்கள்! பாருங்கள்!.

**5. மண்ணில் விழாத வீரர்கள்:**வீரர்களின் மேல், வலிமையான வேல்கள்பாய்ந்தன. அவை, அவர்களின்உயிரைக் கொடுமையாகப் பிரித்தெடுத்தன. ஆயினும், அவ்வீரர்கள், வீரத்துடன் பகைவர்களை எதிர்ப்பவர்களாக, நின்றபடியே இருந்தனர். கழைக்கூத்தாடிகள், வலிமையான மூங்கில் மரங்களை, இரு புறங்களிலும், உறுதியாக நிறுத்தி, அதில் கட்டப்படுகின்ற கயிற்றினில் நடப்பதும், ஆடுவதுமாகிய சாதனைகளை நிகழ்த்துவர். அவர்களை, நிலத்தில் ஊன்றியிருக்கின்ற உறுதியான மூங்கில் மரங்களே தாங்கி நிற்கும். உயிர்ப் பிரிந்தும், மண்ணில் சாயாமல், பகைவர்களை அச்சுறுத்த வேண்டி, வீரர்களும் மண்ணில் சாயாமல், மரங்களைப்போல உறுதியாகநின்றபடியே உயிர்விட்டனர். அக்காட்சியினைப் பாருங்கள்! பாருங்கள்!.

**6. இறந்தும் சிரிக்கின்ற வீரர்கள்:**சான்றோர்கள், தம்மை நாடி வருகின்ற ஏழைகளும், விருந்தினரும் பசி நீங்க உண்பதைப் பார்த்து மனநிறைவுடன் முகம் மலர்ந்து இருப்பர். அவர்களைப்போன்றே, இறந்த வீரர்களும், இறந்த பின்பும், தங்களது உடலானது, பருந்து முதலான பறவைகளுக்கு உணவாக அமைகின்ற நிலையினை நினைத்து, தாமரை மலர் போல முகம் மலர்ந்து, இறந்துகிடக்கின்றனர்.அக்காட்சியினைப் பாருங்கள்! பாருங்கள்!.

**7. தாமரைப் பொய்கையைப் போன்ற போர்க்களம்:** போர்க்களத்தில் நிறைந்திருந்த, இரத்த வெள்ளமானது, தாமரைக் குளத்தின் நீர் போல இருந்தது. இரத்த வெள்ளத்தில் மூழ்கிய தேரின் உச்சிப் பகுதிகள், தாமரைக்குளத்தில் பூத்த மலர்கள் போலக் காட்சியளித்தன.இறந்து கிடந்த வீரர்களது தலைகளின் கறுமையான மயிர், தாமரை இலைகள் போலக் கறுமையாகக் காட்சியளித்தன.இவ்வாறு, ஒட்டுமொத்த போர்க்களமும், தாமரைப் பொய்கையைப் போலக் காட்சியளிக்கிறது.அக்காட்சியினைப் பாருங்கள்! பாருங்கள்!.

**8. கணவரின் தலையினைப் பெற்ற பெண்களின் புலம்பல்:** தமது கணவர்கள், போரில் வீர மரணம் அடைந்த செய்தியினைக் கேட்ட பெண்கள், அவர்களது உடல்களைக் கண்டாவது ஆறுதல் பெற நினைத்து, போர்க்களத்துக்கு ஓடோடி வந்தனர். பயிரவி என்னும், போர்களக் கடவுளைக் கேட்பவர்களாக அவர்கள் அழுது புலம்பினர். தலை துண்டிக்கப்பட்டதால் இறந்த வீரர்களின் மனைவியர், கணவர்களது தலையினை மட்டும் கண்டவுடன் கதறினர்.பகைவர் பலரையும் எதிர்த்து நிற்கின்ற கணவனின் வீரமான, வெட்டுப்பட்ட மார்புகள் எங்கே?.; பகைவர்களுக்கு அஞ்சி, முதுகு காட்டி ஓடாமல் அவர்களை எதிர்த்து நிற்கின்ற வலிமையான தோள்கள் எங்கே?; பகைவர்களை வாளெடுத்து விரட்டுகின்ற வலிமையான கரங்கள் எங்கே? என்று அழுது கதறுகின்றனர். அக்காட்சியினைப் பாருங்கள்! பாருங்கள்!.

**9. கணவனுடன் உயிர்விட்ட வீரப்பெண்கள்:**

வீரப்பெண்ணொருத்தி, தமது வீரக் கணவனுக்காகவே உயிர் வாழ்ந்தாள்.இப்பிறப்பில் மட்டுமல்லாமல், எத்துனைப் பிறவிகள் வாய்த்தாலும், அவனையே தனது கணவனாக அடைய வேண்டும் என்று உறுதிகொண்டவள், அவள்.நிறைவான அவ்அன்பினால், இறந்த தனது கணவனின் உடலை, நில மகளும் தொடுவதற்கு அவள் ஒப்பவில்லை.அதனால், அவனைத் தனது மடியில் ஏந்திக்கொண்டாள்.இறந்துவிட்ட தனது கணவனின் உயிரினை, வானுலகப் பெண்டிர் தழுவ நேருமோ? என்று அஞ்சினாள். உடனே, அதனைத் தவிர்க்க நினைத்தாள்.கணவவனது பிரிவினை

பொறுத்துக்கொண்டு,அவளால் உலகில் வாழ இயலாது என்பது உறுதி.அதனால், தானும் உயிர்விடத் துணிந்தாள்.வானுலகில், தனது கணவனின் உயிருடன் கலந்து மகிழவேண்டித் தனது உயிரையும் அவள் உடனே தியாகம் செய்தாள்.அத்துன்ப நிலையினைப் பாருங்கள்! பாருங்கள்!. எனஎடுத்துக்கூறி, முதுபேய், காளி முதலானவர்களுக்கு, போர்க்களத்தின் பலவகைக் காட்சிகளையும் விளக்கியது.

பகுதி – அ (ஒரு மதிப்பெண் வினாக்கள்)

1. பகழிக்கூத்தரால் பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் எது?
(அ) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (ஆ) திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் (இ) உலா (ஈ) மூவர் பிள்ளைத்தமிழ்
2. கிம்புரி என்பதன் பொருள் யாது?
(அ) சிங்கம் (ஆ) புலி (இ) யானை (ஈ)கரடி
3. போரில் வென்றவர்களைச் சிறப்பித்துப் பாடும் இலக்கியம் எது?
(அ) கலிங்கத்துப் பரணி (ஆ) குற்றலாக் குறவஞ்சி (இ) மூவருலா (ஈ) முக்கூடற்பள்ளு
4. பெருவாயின்முள்ளியார் எழுதிய நூல் எது?.

(அ). ஆசாரக் கோவை (ஆ). கொன்றை வேந்தன் (இ). நீதி நூல் (ஈ). பழமொழி

5. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் யாரைப்பற்றிப் பாடியது?

(அ).கண்ணன் (ஆ). சிவன் (இ). முருகன் (ஈ).இந்திரன்

6. முக்கூடற்பள்ளு –நூலை இயற்றியவர் யார்?

(அ). என்னாயினாப்புலவர் (ஆ). ஓட்டக்கூத்தர் (இ). திருவள்ளுவர் (ஈ). ஔவையார்

7. 'சான்றோர்' என்பதன் பொருள் யாது?.

(அ). கள்வர் (ஆ). தவசி (இ).அறிவுடையோர் (ஈ).புலவர்

8. நும் பாடப்பகுதியில் மலைவாழ் மக்களின் வாழ்வியலைக் கூறிடும் சிற்றிலக்கியம் எது?.

(அ). கலிங்கத்துப்பரணி (ஆ). மூவருலா (இ).முக்கூடற்பள்ளு (ஈ).குற்றாலக் குறவஞ்சி

9. 'பதும முகம் மலர்ந்தாரைப் பார்மின்! புர்மின்!' –என்ற தொடர் அமைந்த இலக்கியம் எது?

(அ). மூவருலா (ஆ). குற்றாலக் குறவஞ்சி (இ). முக்கூடற்பள்ளு(ஈ). கலிங்கத்துப்பரணி
10. கடவுள் அரசர் அடியவர் மீதுபாடப்படும் நூல் எது?
அ) பள்ளு ஆ) குறவஞ்சி இ) உலாஈ) தூது
11. பகழிக்கூத்தரால் திருச்செந்தூர் முருகன் மீதுபாடப்பட்ட இலக்கியம் எது?
அ)உலா ஆ)தூது இ)கோவைஈ)பிள்ளைத்தமிழ்
12. பிள்ளைத் தமிழ் இலக்கியம் ……..பாவித்துக் கொண்டு பத்துப் பருவங்களாக அமையப்பெறும்.
அ) குருவாக ஆ) ஆசானாக இ)தலைவனாகஈ) குழந்தையாக
13. போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்றவன் மீதுப் பாடப்படுவது………
அ) பள்ளு ஆ) பரணிஇ) தூது ஈ) உலா
14. "வலம்புரி" என்ற சொல்லின் பொருள் யாது?
அ)கடல் ஆ)மீன் இ)சங்கு ஈ)நிலவு
15. இராசராசன் உலா வருதலைக் குறிப்பிடும் நும் பாடப்பகுதி எது?
அ)மூவருலா ஆ) நீதிநூல் இ)திருக்குறள் ஈ) கலிங்கத்துப்பரணி

16. குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் யார்?
அ)ஒட்டக்கூத்தர் ஆ)பகழிக்கூத்தர் இ)கவிமணி ஈ)திரிகூடராசப்பக் கவிராயர்
17. செயங்கொண்டார் இயற்றிய நூல் எது?
அ)முக்கூடற்பள்ளு ஆ)கலிங்கத்துப்பரணி இ)திருக்குறள் ஈ)மூவருலா

18. பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்கள் எத்தனை?

(அ). 3 (ஆ). 12 (இ). 10 (ஈ). 11

19. குற்றாலக் குறவஞ்சி எந்நிலத்தின் வளத்தை உரைக்கும் நூல்?

(அ). வயல் (ஆ). மலை (இ). காடு (ஈ). பாலை

20. 'கிம்புரி' என்பதன் பொருள் யாது?.

(அ). யானை (ஆ). ஆடு (இ). நிலவு (ஈ). குரங்கு

21. உழவர்களின் வாழ்வியலைச் சுட்டுகின்ற சிற்றிலக்கியம் எது?.

(அ). கலிங்கத்துப்பரணி (ஆ). மூவருலா (இ). முக்கூடற்பள்ளு (ஈ). குற்றாலக் குறவஞ்சி

22. 'விருந்தினரும் வறியவரும் நெருங்கியுண்ண மேன்மேலும் முகமலரும்'

அமைந்த இலக்கியம் எது?.

(அ). மூவருலா (ஆ). குற்றாலக் குறவஞ்சி (இ). முக்கூடற்பள்ளு (ஈ). கலிங்கத்துப்பரணி

**பகுதி – ஆ** **(2 மதிப்பெண் வினாக்கள்)**

1. "வானக்குருசில் வள்ளலாய" இடம் சுட்டிப்பொருள் விளக்கம் தருக?
2. பரணி –பெயர்க்காரணம் கூறுக?
3. பிள்ளைத்தமிழின் பருவங்கள் யாவை?
4. "கலிங்கத்துப்பரணி" - சிறுகுறிப்புத் தருக?
5. பிள்ளைத் தமிழ்ப் பருவங்களைப் பட்டியலிடுக.

**பகுதி – இ** **(6 மதிப்பெண் வினாக்கள்)**

1. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழின் சிறப்புக்களைப் புலப்படுத்துக.
2. இராசராசசோழனின் உலா குறித்து மூவருலா வழி புலப்படுத்துக.
3. குற்றாலக் குறவஞ்சி கூறிடும் மலைநாட்டின் சிறப்புகளை விவரி.
4. முக்கூடற்பள்ளு எடுத்துரைக்கும் மருதநிலவளம் குறித்துத் தொகுத்துரைக்க.
5. திருக்குற்றாலமலையின் சிறப்பினையும் இயற்கைவளத்தினையும் பற்றிவிளக்கு
6. போக்களக் காட்சியைகலிங்கத்துப்பரணிவாயிலாகவிளக்குக.
7. குறத்தி கூறும் குற்றால மலையின் சிறப்பினை விவரி?
8. முருகனின் அருட்கொடையினையும் இயற்கை வளங்களையும் விவரி?
9. மூவருலா வழி இராசராசனின் சிறப்புகளை விவரி.
10. நகர் வளத்தை முக்கூடற்பள்ளு எடுத்துரைக்கும் பாங்கினை தொகுத்துரைக்க.

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

**கோவை- 21.**

Enable | Enlighten | Enrich
(Deemed to be University)
(Under Section 3 of UGC Act 1956)

## கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

## தமிழ்த்துறை

(2017-2018)

**பகுதி – I, தமிழ் தாள் – I 17LAU101**

**பாடத்திட்டக் குறிப்புகள்**

முதலாமாண்டு இளநிலை கலையியல்

பட்ட வகுப்புகளுக்குரியது

Prepared by Dr. P. Thamilarasi

# இயல் - 4

## *கட்டடக்கலை*

**கட்டுரை ஆசிரியர்:** மா. இராசமாணிக்கனார் **பிறப்பிடம்:** ஆந்திராவின் கர்னூல்.

**தகுதியும், சிறப்பும்:** கல்வெட்டு ஆய்வாளர், ஆய்வியல் அறிஞர். **நூல்கள்:**பல்லவர் வரலாறு, சைவசமய வளர்ச்சி, தமிழர் திருமணத்தில் தாலி, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, குழந்தை இலக்கியங்கள்.**பணி:** மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகத்தில் இணைப்பேராசிரியர்.

**கட்டுரையின் மையப்பொருள்:** **I.**சங்ககாலம்,**II.**இடைக்காலம், **III.** பிற்காலம் என்று பல்வேறு காலகட்டங்களில், தமிழகத்தில் கட்டடக்கலை வளர்ச்சி பெற்ற நிலைகளை இக்கட்டுரை விளக்குகிறது.

**I.சங்க காலம் (2,500-ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம்):சங்ககாலக் கட்டடங்கள்**

1. ***கடவுளுக்கு உரியகோயில்கள்:***

**பெயர்:**கோயில், சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டங்கள். **சுடுமண்:** சுடப்பட்ட மண் – செங்கல்.**கோட்டம்:** கோயில். செங்கற்களால், உயரமாகக் கட்டப்பெற்ற கோயில்கள்.

**கட்டுவோர்:** நூலறி புலவர், (கட்டடக் கலை பற்றிய நூல்களைப் படித்தவர்).

**கோயில் அமைப்போர்:** சோதிடர், கட்டடக் கலைப் பணிக்கான வழிபாடுகளைச் செய்வோர்,
கட்டடக் கலைப் பொறியாளர், சிற்பக் கலைஞர்(ஆர்க்கிடெக்ட்)ஆகியோர்.
**கட்டுமானப் பொருள்கள்:** மண், செங்கல், மரம், உலோகம் ஆகியவை.**(எ.கா):**இரண்டாம் நூற்றாண்டில், சேரன் செங்குட்டுவன், கண்ணகிக்குக் கட்டிய **பத்தினிக் கோயில்.**

2. ***அரசர்களுக்கு உரிய கோயில்கள்:*** கோ: அரசன், இல்: இருப்பிடம். (கோ+இல்= கோயில்)அரசர்களின் இருப்பிடங்களாகிய அரண்மனைகளும், **'கோயில்கள்'** எனப்பட்டன.

**அரண்மனையின் அமைப்பு:** மனை, மண்டபம், அந்தப்புரம், அரங்குகள், மதில், மதில் வாயில்கள், மதிலை ஒட்டி, மழைநீர் சேர்கின்ற இடம், பாதுகாப்பிற்காக அகழிகள்.
**அந்தப்புரம்:**வலிமையான தூண்களுடன், செஞ்சாந்து எனப்படுகின்ற இயற்கைச் சாயம் பூசப்பட்ட சுவர்கள், வண்ண ஓவியச் சுவர்கள்.
**மதில் வாயில்கள்:**1.யானைப்படை, கொடியுடன் வந்து செல்லக்கூடிய வகையில், பெரிய மலை போன்ற அகலமும், உயரமும் உடையவை.2. இரும்பினால் ஆன உறுதியான கதவுகள்,
3. மதிலின் வாயில்களில், நன்மையின் அடையாளமாக, யானைகளுடன் கூடிய இலட்சுமியின் திருஉருவம் அமைத்தல். சிவப்பு நிறம் பூசப்பெற்ற, பெரிய இரும்புக் கதவுகள்,
**மழைநீர் சேகரிக்கப்பெறுகின்ற இடம்:**அரண்மனையின் மொத்த மழைநீரும் சேகரமாகும் வகையில், மதில் வாயிலை ஒட்டி அமைந்த, மழை நீர்ச் சேகரிப்பு இடம். மீனின் வாயிலிருந்து, தண்ணீர் ஊற்றுவது போன்று, கலைநயத்துடன் அமைக்கப்பெற்ற சிற்பங்கள்.
**அகழிகள்:** அரண்மனையின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பெற்ற, நீர் நிறைந்த அகழிகள்.அதில், முதலைகள் வளர்க்கப்பெறும்.

3. **செல்வந்தர்களின் வாழிடங்கள்:**வணிகர்களின் குடியிருப்புகள், 'வளமனைகள்', மாளிகைகள் எனப்பட்டன.நிலவின் குளிர்ச்சியினைத் தருகின்ற நிலா முற்றம்,காற்றோட்டமும், வெளிச்சமும் புக

வசதியான, மிகப்பெரிய ஜன்னல்கள், பல அடுக்குகள் (Floors), அவற்றில் மாடங்கள். மாளிகையின் உச்சியில் கோபுரங்கள் போன்ற சிற்ப வேலைபாடுகள்.

***அரங்குகள்:***இசை அரங்குகள், நடன அரங்குகள், நாட்டிய அரங்குகள். அரங்குகளில், வண்ணத் திரைச் சீலைகளும், விளக்குகளும் முறையாகத் தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பெறுதல்.

(எ.கா): சிலப்பதிகாரம்: அரங்கேற்றுக் காதை.

**சாலைகள்:**நீளமாகவும், அகலமாகவும் கட்டமைக்கப்பெற்ற பெரிய சாலைகள்.

## II.இடைக்காலக் கட்டடக்கலை: பல்லவர்களும், சோழர்களும்

***பல்லவர்கள்:*** **காலத்தால் அழியாத கல்கோயில்கள்,பல்லவர்களின் கட்டடக்கலையின் தனிச் சிறப்பாகும்.**கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதலாக, மகேந்திரவர்ம பல்லவனின் புதிய முயற்சி.

**பல்லவர்களின் கோயில்கள்:1. குடைவரைக் கோயில்கள்:** திருப்பரங்குன்றம் முருகன் கோயில், நாமக்கல் நரசிம்மர் கோயில், பள்ளிகொண்ட பெருமாள் கோயில்முதலானவை.

**2. பாறைச் சிற்பங்கள்:** பெரிய பாறைகளில் சிற்பங்களைச் செதுக்கி அமைக்கப்பெற்றவை.

மாமல்லபுரத்தின் பஞ்சபாண்டவர் இரதங்கள், தேர் வடிவில் அமைந்துள்ளன.

**3. கல்கோயில்கள்:** மாமல்லபுரத்தின் கடற்கரைக் கோயில், காஞ்சிபுரத்தின் வைகுந்தப் பெருமாள் கோயில்,உலகளந்த பெருமாள் கோயில் முதலானவை.

***சோழர்கள்:***'விமானங்கள்' **என்பவை, கருவறையின் மேலே அமைக்கப்பெறுவன. விமானங்களை மிகப்பெரியதாகவும், கோபுரங்களை, மிகச் சிறியதாகவும் அமைத்த சிறப்பு, சோழர்களுக்கு உண்டு.** இராசராச சோழனின் தஞ்சாவூரின் பெரிய கோயில்,அங்குள்ள நிழல் சாயாத விமானம், மிகப்பெரிய இலிங்கம், நந்தி. இராசேந்திர சோழனின் கங்கைகொண்ட சோழபுரம், சிங்கமுகக் கிணறு மற்றும் சிறப்பான சிற்பங்கள், கருவறையின் எதிரில், குளிர்ச்சிக்காக கூறையில் அமைந்துள்ள சந்திரகாந்தக் கல் அமைப்பு.

தாரசுரம் சிவன் கோயில்: கோயிலின் நடுவில், தேர் போன்ற அமைப்பு, சிற்பத் தூண்கள்.

மற்றும் திரிபுவன வீரேச்சுவரம் எனப்படுகின்ற சரபேஸ்வரர் திருக்கோயில் ஆகியவை.

**உலோகத்தால் கூரை அமைக்கப்பட்ட திருக்கோயில்கள்:**தில்லை எனப்படுகின்ற சிதம்பரத்தில், தங்கத்தால் கூரையும், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில், வெள்ளியால் கூரையும், குற்றாலத்தில், செம்பினால் கூரையும்அமைக்கப்பட்டுள்ளன.

## III.பிற்காலத்தில் கட்டடக் கலை வளர்ச்சி:விஜயநகரப் பேரரசர்கள்,நாயக்க மன்னர்கள்

***விஜயநகரப் பேரரசர்கள்:*****கருவறையின் விமானங்களைச் சிறியதாகவும், கோபுரங்களைப் பெரியதாகவும் அமைத்தது, இவர்களது கட்டடக்கலையின் தனிச் சிறப்பாகும்.**7, 9, 11 எனப் பல அடுக்குகளில் அமைந்த உயர்ந்த கோபுரங்கள். திருவண்ணாமலை, மதுரை, இராமேஸ்வரம் போன்ற கோயில்களின் உயரமானகோபுரங்கள்.அவற்றில், கதைகளை விளக்குகின்ற சுதைச் சிற்பங்கள்.

***நாயக்கர்கள்:*****தூண் சிற்பங்களுடன் கூடிய, மண்டபங்கள்:** இராமேஸ்வரம் கோயிலின் ஆயிரங்கால் மண்டபம், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் புதுமண்டபம், திருமலை நாயக்கர் அரண்மனை. பேரூர்,

தூண் சிற்பங்கள், கல் சங்கிலி, சுழலும் தாமரை, கனக சபையின் இருபுறமும் அமைந்த, ஒரே கல்லாலான தூண் சிற்பங்கள் ஆகியவை.

***தமிழகத்தில் அரண்மனைகள்:*****சோழர்களின் அரண்மனைகள்:** தஞ்சாவூர், திருவாரூர், பழையாறை, கங்கைகொண்ட சோழபுரம்.**பாண்டியர்கள்:** மதுரை, **பல்லவர்கள்:**காஞ்சிபுரம் முதலான இடங்களில் இருந்துள்ளன. ஆனால், தற்போது, அவை கிடைக்கவில்லை.

மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரின் அரண்மனையும், தஞ்சாவூரின் சரபோஜி மன்னர்களின் அரண்மனையும் தற்போது தமிழகத்தில் அரண்மனைகளின் அமைப்பை அறியக் கிடைக்கின்ற சான்றுகளாகும்.

## ஆளுமைத்திறன் அறிவோம்

### (அறிவுக்கதிர்:அரசுப்பணி சிறப்பிதழ், செப்டம்பர் 2015 –வெளியீடு)

நமது ஆளுமைத்திறனே வெற்றியின் அடிப்படை. சாதனைகள் புரிகின்ற ஆளுமை(wise personality) யாகத் திகழ்வதற்கு ஆளுமைத்திறனை மேம்படுத்திக்கொள்ளுதல் .ன்றியமையாததாகும். ஆளுமைத் திறனுக்குரிய காரணிகளையும் அவற்றை மேம்படுத்தி, வெற்றி பெறுதல் குறித்தும் இக்கட்டுரை விளக்குகிறது.

1. இலக்கை அறிவோம் : எல்லா மனிதர்களின் செயல்பாடுகளையும் நிர்ணயிப்பது அவர்களின் இலக்குதான். இதனால்தான் எந்தக் குறிக்கோளும் இல்லாமல் வெறுமனே சுற்றித் திரிபவர்களை எவரும் மதிப்பதில்லை.

எனவே, உங்களின் இலக்குத்தான் உங்களுக்கான பாதையை அடையாளம் காட்டும். ஊங்களின் இலக்குதான் வாழ்க்கைப்பாதையில் ஏற்படு:ம் இன்னல்களைச் சமாளித்து வெற்றியை அடையும் வித்தையை உங்களுக்குக் கற்றுத் தரும்.

ஊங்களின் இலக்கு என்னவென்பதை நீங்கள்தான் தீர்மானிக்கவேண்டும். ஏதிர்காலத்தில் நீங்கள் என்னவாகப் போகிறீர்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டே உங்களது இலக்கை நீங்கள் அண்டயாளம் காணமுடியும்.

2.இலக்கை வரையறுப்போம்: வாழ்வின் இலக்கைக் கண்டறிந்த பிறகு, அதனைச் சரியான முறையில் வரையறை செய்துவிட்டால், உங்களது செயல்பாட்டில் சோர்வு இருக்காது. ஏமாற்றம் இருக்காது. இலக்கை வரையறை செய்யும்பொழுது அது அடையக் கூடிய, சாதிக்கக் கூடிய இலக்காய் இருப்பது அவசியம்.

குறிப்பிட்ட படிப்பில் அல்லது தேர்வில் நீங்கள் சாதிக்க இலக்கைக் கொணடிருந்தால், அதனை எப்படிச் செய்யப் போகிறீர்கள், அதற்காக என்ன வகையான முயற்சிகள் மேற்கொள்ளப் போகிறீர்கள், அந்த இலக்கை அடைவதற்கு தடைகளாக உள்ளவைகளை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள் அதற்காக உங்களை எந்தவிதத்தில் உருவாக்கிக்கொள்ளப்போகிறீர்கள், என இவைகளை எல்லாம் நீங்கள் அறிந்திருந்தால்தான் உங்களது இலக்கை குறித்த கனவு நனவாகும்.

3. இலக்கை முறையாகத் திட்டமிடல் : இலக்கை வெற்றி கொள்ளத் திட்டமிடல் என்பது மிக மிக இன்றியமையாதது. துிட்டமிடத் தவறுபவர்கள் தோல்வியடைத்திட்டமிடுகிறார்கள்.

2017

4. இலக்கின் செயல்முறை

5. முடிவுஎடுத்தல்

6. மனஉறுதி

7. சுயக்கட்டுப்பாடு

8. உருவஆளுமை

9. உள்ளஆளுமை

10. மனப்பான்மை

11.தலைமைப்பண்புகள்

12. காலமேலாண்மை

## பகுதி – அ (ஒரு மதிப்பெண் வினாக்கள்)

1. வி.கே. சூரியநாராயண சாஸ்திரியின் புனைப்பெயர் யாது?
(அ) பரிதிமாற் கலைஞர் (ஆ) வண்ணநிலவன் (இ) பாரதிதாசன் (ஈ) கண்ணதாசன்
2. யாருடைய ஆட்சிக்காலத்தில் விமானங்கள் சிறுத்து கோபுரங்கள் ஆயின?
(அ) சேரர் (ஆ) சோழர் (இ) பல்லவர் (ஈ) நாயக்கர்
3. 'ரூபாவதி,கலாவதி' – போன்ற நாடகநூல்களை எழுதிய அறிஞர் பெயர் யாது?.
(அ). சந்திரன் (ஆ). தமிழன் (இ). பரிதிமாற்கலைஞர் (ஈ). இந்திரன்
4. 'அப்பாவு' - என்ற இயற்பெயருடைய கட்டுரையாளர் யார்?
அ). பரிதிமாற்கலைஞர் (ஆ).நெ.து.சுந்தரவடிவேலு (இ). இராசமாணிக்கனார் (ஈ). இளவழகனார்
5. 'வெற்றிக்கான நேர்மறை மனப்பான்மைக்குத் துணையாவது……….
(அ). அறிவு (ஆ). கல்வி (இ). வீரம் (ஈ). தலைமைப்பண்புகள்
6. சூரியநாரயண சாத்திரியர் என்னும் பெயரின் வடிவம் யாது?
அ)கால்டுவெல் ஆ)மறைமலையடிகள் இ)பரிதிமாற் கலைஞர்ஈ)இளவழகனார்
7. கடவுளர் இடத்திற்கும் காவலன் வளமனைக்கும் வழங்கும் பொதுப்பெயர் எது?
அ)அரண்மனை ஆ) இல்லம் இ)கோவில்ஈ) நடுகல்
8. நெ.துசுந்தரம் பிள்ளை அவர்களுக்கான அடைமொழி யாது?
அ)மொழியின் தந்தை ஆ)கல்வியின் தந்தை இ) நூலின் தந்தைஈ)தமிழின் தந்தை
9. கல்வியின் சிறப்பினை எடுத்துரைக்கும் பாடப்பகுதிஎது?
அ)மணற்கேணி ஆ)கட்டிடக்கலை இ) வாழ்க்கை ஈ)உயர்தனிச் செம்மொழி
10. காலம் அனைவருக்கும் ……..
அ) நிலையானது ஆ) பொதுவானது இ) இயல்பானது ஈ) சுகமானது
11. இலக்கை அடையும் வரையிலும் தேவையானதுஎது?
அ)பொறுமை ஆ)அமைதி இ)சுயக்கட்டுப்பாடுஈ)தனிமை
12. பரிதிமாற்கலைஞர் மறைந்த ஆண்டினைக் குறிப்பிடுக?
அ)1903 ஆ)1855 இ)1880 ஈ)1870
13. மலைச்சரிவுகளைக் குடைந்து கோவில்களைத் தோற்றுவித்தவர் யார்?
அ)சேரர் ஆ)சோழர் இ)பாண்டியர் ஈ)பல்லவர்
14. முதல் உரைநடைப் புதினத்தை எழுதியவர் யார்?.
(அ). அவ்வையார் (ஆ). பெருவாயின் முள்ளியார் (இ). முன்றுறை அரையனார்
(ஈ). வேதநாயகம் பிள்ளை
15. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியின் தமிழ்ப் பெயர் யாது?.
(அ). சந்திரன் (ஆ). தமிழன் (இ). பரிதிமாற்கலைஞர் (ஈ). இந்திரன்
16. 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' என்ற நூலினை எழுதியவர் யார்?
அ). வரதராசனார் (ஆ). பாரதியார் (இ). இராசமாணிக்கனார் ஈ). இளவழகனார்

17 ‘எவ்வழி நல்லவ ராடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே’ எனக்கூறுகின்ற இலக்கியம் எது?.

(அ). குறுந்தொகை (ஆ). புறநானூறு (இ).மணிமேகலை (ஈ). நற்றிணை

18. ‘கற்றனைத்து ஊறும் அறிவு’ என வலியுறுத்துகின்ற உரைநடைப் பகுதியின் தலைப்பு எது?.

அ)வாழ்க்கை ஆ)உயர்தனிச்செம்மொழி இ)மணற்கேணி ஈ)ஆளுமைத்திறன் அறிவோம்

19. மனப்பான்மை எத்தனை வகைப்படும்?

(அ). 6 (ஆ). 12 (இ). 8 (ஈ). 2

**பகுதி – ஆ (2 மதிப்பெண்கள் வினாக்கள்)**

1. கற்கோவில் பற்றிக் குறிப்புவரைக?
2. காலமேலாண்மை –விளக்குக.
3. கற்கோவில்கள் குறித்து குறிப்பு வரைக.
4. ஆளுமைத் திறனுக்குரிய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக?
5. சோழர்காலக் கட்டடக் கலையைக்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கூறுக.

**பகுதி – இ (6 மதிப்பெண்கள் வினாக்கள்)**

1. இராசராசசோழனின் உலா குறித்து மூவருலா வழி புலப்படுத்துக.
2. உயர்தனிச்செம்மொழியின் சிறப்புக்கள் பற்றி பரிதிமாற்கலைஞர் கூறும் கருத்துக்கள் யாவை?
3. கட்டடக்கலை குறித்து இராசமாணிக்கனார் கட்டுரை வழி விளக்குக.
4. வெற்றிக்கு அடிப்படை ஆளுமைத் திறனே – ஆராய்க.
5. கட்டிடக்கலையின் சிறப்பியல்புகளை விரித்துரைக்க.
6. வாழ்க்கை நன்னெறிகளை, நும்பாடப்பகுதிக் கட்டுரை வழியே எடுத்தியம்புக.
7. தமிழ் உயர்தனிச் செம்மொழி விளக்குக?
8. ஆளுமைத்திறன் மேம்பாடு குறித்து விவரி?
9. உயர்தனிச் செம்மொழியின் சிறப்பியல்புகளை விரித்துரைக்க.
10. ஆளுமைத் திறனை மேம்படுத்துவதற்கான காரணிகளை எடுத்தியம்புக.

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

**கோவை- 21.**

Enable | Enlighten | Enrich
(Deemed to be University)
(Under Section 3 of UGC Act 1956)

## கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

## தமிழ்த்துறை

(2017-2018)

**பகுதி – I, தமிழ்   தாள் – I   17LAU101**

**பாடத்திட்டக் குறிப்புகள்**

முதலாமாண்டு இளநிலை கலையியல்

பட்ட வகுப்புகளுக்குரியது

# அலகு – V

## மொழிப்பயிற்சி - கடிதப் பயிற்சி

1. **பாரதி விழா செய்தியினை வெளியிட பதிப்பாசிரியருக்கு விண்ணப்பம்**

29-08-2017,

கோயம்புத்தூர்.

அனுப்புநர்,

அ. அறிவழகன்
செயலாளர்,
தமிழ்மன்றம்,
கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்
ஈச்சனாரிஅஞ்சல், கோயம்புத்தூர் – 21.

பெறுநர்,

பதிப்பாசிரியர்
தினமணிநாளிதழ்
கோயம்புத்தூர் – 21.

ஐயா,

பொருள் :மகாகவிபாரதியார்நினைநாள்செய்தியினைவெளியிடவேண்டிவிண்ணப்பம்.

வணக்கம்.

கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகத் தமிழ் மன்றமும், கோயம்புத்தூர் தமிழ்ச் சங்கமும் இணைந்து, மகாகவி பாரதியாரின் நினைவு நாளை, வருகின்ற 5-09-2017, 6-09-2017, வியாழன், வெள்ளி ஆகிய இரண்டு நாள் பெருவிழாவாக, கோயம்புத்தூர் கொடிசியா வளாகத்தில் சிறப்புற நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். விழாவின் முக்கிய நிகழ்வாகத் தமிழகத்தின் அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கிடையேயான, மாநில அளவிலான, பேச்சு, கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகள் சிறப்புற நடைபெற உள்ளன. அப்போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவில், நல்லாசிரியர், தமிழ்ச்சான்றோர் விருதாளர், திரு செந்தலை ந.கௌதமன் அவர்கள் கலந்து கொண்டு, பாரதி காணவிரும்பிய இளைஞர் சமுதாயம்" என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்ற உள்ளார். மேலும், இருநாட்களிலும், மகாகவியின் சிந்தனைகளை ஒட்டி, கற்பகம் உயர்கல்விக் கலைக் கழக மாணவர்களின் இசை மற்றும் நாடக நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறவுள்ளன. விழாவில், தாங்களும் கலந்துகொண்டுச் சிறப்பிக்க, அன்புடன் வேண்டுகிறோம். அத்துடன், இவ்விழாவினைக் குறித்த செய்தியினைத் தங்கள் நாளிதழில் வெளியிட்டு உதவுமாறும் வேண்டுகிறோம்.

நன்றி.

இப்படிக்கு,
அ. அறிவழகன்,
தமிழ்மன்றச்செயலாளர்
கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

## 2. நண்பனுக்கு வாழ்த்துத் தெரிவித்து, பாராட்டுக் கடிதம்.

**நண்பனுக்குப்பாராட்டுக்கடிதம்**

07-09-2017,

கோயம்புத்தூர்.

அன்பிற்கினியநண்பனுக்கு,

நலம். நலமறியஆவல். உனக்கும் உனது குடும்பத்தாருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள். நான் உனக்குக் கடந்தமுறை எழுதிய கடிதமும் வாழ்த்துக் கடிதமாக இருந்தது. இந்தக்கடிதமும் வாழ்த்துக் கடிதமாகவே அமைந்து விட்டமையால், எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.சென்றவாரம், புதுதில்லியில் குடியரசுத்தலைவர் திரு.பிரணாப்முகர்ஜியைச் சந்தித்து, ‘சிறந்தஇளம்சமூகத்தொண்டர்’ என்ற விருதினைப் பெற்றுவந்த அனுபவம் குறித்து எழுதியிருந்தாய். அத்துடன், நீவிருது பெற்றதைப் பாராட்டி, கற்பகம் உயர்கல்விக் கலைக் கழகத்தில் சிறந்ததொரு பாராட்டுவிழாவும் நடைபெற்றதையும் குறிப்பிட்டு, நீஅனுப்பியிருந்த கடிதமும் கிடைத்தது. நாட்டுக்கு உழைக்கின்ற நல்லகுடிமகனாக உன்னைப்பெற்றெடுத்த உனதுபெற்றோரின் திருவடிதொட்டு வணங்கி மகிழ்கின்றேன். உனது சாதனைக்காக அவர்கள், மகிழ்கின்ற வேளையில், எனது முதுநிலைப்பட்ட(PG:MBA) வாய்ப்புக்காக, இன்னும் இரண்டு மாதங்களில் ஃப்ளோரிடா செல்ல இருப்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்து. அவர்களது ஆசிகளும், ஊக்குவிப்புமே இத்தகைய அரியவாய்ப்பைப் பெற்றுத்தந்தது என்பது உண்மை. அவர்களுக்கு எனது வணக்கம். தாய்நாட்டிலேயே பயின்று, உலகச்சாதனைபுரிந்து, தாய்நாட்டுக்கே தொண்டுபுரிய வேண்டும் என்ற உனது கனவு வெகுவிரைவில் நிறைவேறவாழ்த்துக்கள். அதற்காகவே, இந்திய மேலாண்மையியல் கல்வி நிறுவனத்தில்(IIM) முதுநிலைப்பட்டம் மேற்கொள்வதற்கான பொதுநுழைவுத் தேர்வைஎழுதி, தேசியஅளவில் முதலிடமும் பெற்றுவிட்டாய். இவ்வெற்றிக்கான கடினஉழைப்புடன், பல்கலைக் கழகத்தேர்வையும் எழுதி, சிறப்புப்புள்ளிகளுடன் வெற்றி பெற்றுள்ளாய். பல்கலைக்கழகத் தேர்வில் இதுவரையிலும் இல்லாதசாதனையையும் புரிந்துள்ளாய். இதுஉனது பேராசிரியர்களுக்கும், பல்கலைக்கழகத்துக்கும், நமது நண்பர்களுக்கும் பெருமை சேர்க்கக்கூடிய தாகும். இதுகுறித்த செய்தியினைத் தினமணிநாளிதழில் கண்டுமகிழ்ந்தேன். உனது உடன்பயில்கின்ற மாற்றுத்திறனாளி நண்பரையும் ஊக்குவித்து, அவரையும் தேர்வில்முதலிடம் பெறச்செய்த, உனது தன்னலமில்லாத தொண்டினைத்தலை தாழ்த்தி வணங்கி, வாழ்த்தி மகிழ்கின்றேன். நமது வெற்றிப்பயணம் மேலும் தொடரும்.நல்ல பண்புகளால் செழித்துள்ள நமதுநட்பால் நாட்டுக்குப் பெருமைசேர்ப்போம்.

நன்றி.

இப்படிக்கு,

இனியநண்பன்,

அறிவழகன்.

கையொப்பம் (தமிழில்).

உறைமேல்முகவரி,

திருஅன்பு.அறிவொளிஅவர்கள்,

எண் : 20, விவேகானந்தர்நற்பணிமன்றம்,

தொல்காப்பியர்நகர், தஞ்சாவூர்-12.

## 3.கருத்தரங்கப் பங்கேற்பிற்கு அனுமதி வேண்டி விண்ணப்பம்

இடம் : ஈச்சனாரி

நாள் : 8.9.2017

அனுப்புநர்

அ. அறிவழகன்
வணிகவியல் முதலாம் ஆண்டு,
கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்,
ஈச்சநாரி.

பெறுநர்

துறைத்தலைவா் அவர்கள்,
வணிகவியல் துறை
கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்,
ஈச்சநாரி.

மதிப்பிற்குரியீா்,

**பொருள்: கருத்தரங்கப் பங்கேற்ப்பிற்கு அனுமதி வேண்டுதல் தொடர்பாக.**

வணக்கம். நான் கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகத்தில் இளங்கலை வணிகவியல் முதலாம் ஆண்டு படித்து வருகிறேன்.வருகின்ற 8.9.2017 அன்று இரத்தினம் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற உள்ள பன்னாட்டுக் கருத்தரங்கிரல் பங்குபெற அனுமதி அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இக்கடிதத்துடன் கருத்தரங்க அழைப்பு அறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

நன்றி!

இப்படிக்குத்
தங்கள் உண்மையுள்ள

(…………………..)

**பகுதி – அ** **(ஒரு மதிப்பெண் வினாக்கள்)**

1. மத்தியானம் என்பதன் தமிழ்ச்சொல் என்ன?
   (அ) முற்பகல் (ஆ) நண்பகல் (இ) பிற்பகல் (ஈ) மாலை
2. 'ஜாக்கிரதை' –என்பதன் தமிழாக்கம் கூறுக?.
   (அ). விளம்பரம் (ஆ). அறியாமை (இ). அறிவு (ஈ). கவனம்
3. 'அவரக்காய்' - இச்சொல்லின் திருந்திய வடிவத்தைக்குறிப்பிடுக?
   அ).அவரைக்காய் ஆ)அவரக்கா இ)அவரைக்கா ஈ)அவரய்க்காய்
4. மத்தியானம் என்பதன் தமிழ் சொல் எது?
   அ) காலைஆ) நண்பகல் இ) மாலை ஈ) இரவு
5. தாவாரம் -இச்சொல்லின் திருந்தியவடிவத்தைகுறிப்பிடுக.
   அ) தால்வாரம் ஆ) தாழ்வாரம் இ) தாள்வாரம் ஈ) தாவாரம்
6. "ரத்து" என்பதன் தமிழாக்கம் கூறு.
   அ)அழகு ஆ)அலுவலர் இ)நீக்கம் ஈ)சொத்து
7. "விஷயம்" என்பதன் தமிழ்ச்சொல் யாது?
   அ)அழகு ஆ)தகவல் இ)சொத்து ஈ)நீக்கம்

**பகுதி – இ** **(6 மதிப்பெண்கள் வினாக்கள்)**

1. வேலை வேண்டி விண்ணப்பம் ஒன்றைத் தயார் செய்க.
2. கருத்தரங்கில் பங்கேற்க அனுமதிவேண்டி துறைத்தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக.
3. நாளிதழ் விளம்பரஅடிப்படையில்இவேலைவேண்டிவிண்ணப்பம் ஒன்றுவரைக.
4. நண்பனின் தேர்வு வெற்றியைப் பாரட்டி கடிதம் வரைக?
5. நாளிதழ் விளம்பர அடிப்படையில், வேலைவேண்டி விண்ணப்பம் வரைக?
6. நாளிதழ் விளம்பர அடிப்படையில்இ வேலை வேண்டி விண்ணப்பம் எழுதுக.
7. கருத்தரங்கில் பங்கேற்க அனுமதிவேண்டி துறைத்தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக.

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம் *17LAU101*

## கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

## தமிழ்த்துறை

## முதல் இடைத் தேர்வு: பகுதி-I, தமிழ்த் தாள்:I

**நேரம்: 2மணி** **மொத்த மதிப்பெண்கள்: 50**

**பகுதி: அ**

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (20X1=20)**

1. 'பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்' எனக் கூறியவர் யார்?.

**(ஆ). பாரதியார்**

2 . ஷெல்லிதாசன் என்று அழைக்கப்பட்டவர் யார்?.

(அ). பாரதிதாசன் **(ஆ).பாரதியார்** (இ). சிற்பி பாலசுப்பிரமணியம் (ஈ).தருமுசிவராம்

3. அரம்போலும் கூர்மை உடையவர்கள் யார்?.

(அ). மக்கட்பண்பு உடையவர் (ஆ). கல்லாதவர்கள் (இ). அறிவிலிகள் **(ஈ). மக்கட்பண்பு இல்லாதவர்**

4. சாதி இருட்டைத் தகர்த்தெரிந்தவர் யார்?

(அ). குமாரன்ஆசான்(ஆ).ஆதிசங்கரர் **(இ).ஸ்ரீநாராயணகுரு** (ஈ). பாரதியார்

5. மலையாளக் காற்று யாரால் பாடப்பெற்றது?

(அ). பாரதிதாசன் (ஆ).கவிமணி (இ).வைரமுத்து **(ஈ). சிற்பி பாலசுப்பிரமணியம்**

6. யாருடைய சிம்ம கர்ஜனையை ஏற்றுவந்தது மலையாளக்காற்று?

(அ). ஆதிசங்கரர் (ஆ). பாரதிதாசன் (இ). ஸ்ரீநாராயணகுரு **(ஈ). குமாரன்ஆசான்**

7. 'கோவையின் விசிறி' எனப்பெறுகின்ற ஆறு எது?.

(அ). பெரியாறு (ஆ). ஆழியாறு **(இ). சிறுவாணி** (ஈ). பாரதப்புழை

8. கேரளத்தின் சரித்திரத்துச் சீதனம் நதி எது?

(அ). சிறுவாணி (ஆ). பெரியாறு **(இ). பாரதப்புழை** (ஈ). வைகை

9. 'கொன்றைவேந்தன்' நூலின் ஆசிரியர் யார்?.

**(அ). அவ்வையார்** (ஆ). பெருவாயின்முள்ளியார் (இ). முன்றுறைஅரையனார்(ஈ). வேதநாயகனார்

10. 'சீரைத் தேடின் __________ தேடு

(அ). அழகு(ஆ). அமிர்தம் **(இ).ஏர்** (ஈ). மயக்கம்

11. 'நிற்கக் கற்றல் --------------- திறம்பாமை

(அ). பதவி (ஆ). செல்வம் (இ). வீரம் **(ஈ).சொல்**

12. வானம் சுருங்கின்___________ சுருங்கும்

(அ). ஆசை (ஆ). நிலம் **(இ).தானம்** (ஈ). உணவு

13. உலகம் நிலைத்திருப்பது யாரால்?.

**(அ). பண்புடையவர்களால்** (ஆ). செல்வந்தர்களால் (இ). வீரர்களால் (ஈ). நண்பர்களால்

14. 'மரம் போன்றவர்கள்' எனத் திருக்குறள் யாரைச் சாடுகிறது?.

(அ). கல்வியில்லாதவரை (ஆ). செல்வமில்லாதவரை (இ).சுற்றமில்லாதவரை **(ஈ). பண்பற்றவரை**

15. திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழின் ஆசிரியர் யார்?.

(அ). குமரகுருபரர்(ஆ). ஒட்டக்கூத்தர் (இ). திரிகூடராசப்பக் கவிராயர் **(ஈ). பகழிக்கூத்தர்**

16. பிள்ளைத் தமிழ் இலக்கியம் எத்தனை பருவங்களைக் கொண்டது?.

(அ).12 **(ஆ).10** (இ).6 (ஈ). 8

17. 'அம்புலி' என்பதன் பொருள் யாது?.

(அ). பந்து (ஆ). கடல் **(இ). நிலவு** (ஈ). காற்று

18. பரிதிமாற் கலைஞர் எழுதிய நாடக நூல்?

(அ). அவ்வை (ஆ). ஞானக்குறள் **(இ). கலாபதி** (ஈ). பசி

19. தனித்தமிழ் இயக்கத்தில் முதன்மைப் பங்கு வகித்தவர் யார்?.

(அ). பரதியார்(ஆ). பாரதிதாசன்(இ). கண்ணதாசன் **(ஈ). பரிதிமாற் கலைஞர்**

20. வெற்றிக்கு அடிப்படையாவது எது?.

(அ). கல்வி (ஆ). அறிவு (இ). செல்வம் **(ஈ). ஆளுமைத்திறன் மேம்பாடு**

## பகுதி – ஆ

**அனைத்து வினாக்களுக்கும் தவறாமல், ஒருபத்தி அளவில் விடையளி: (3X2=6)**

21. 'அறிவு வாரித் துரும்பென் றலைந்ததால்'– இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

ஆங்கிலேயர் தரும் கல்வி, படுகுழியும், ஏறி உய்யவே இயலாத கொடுங்குகையும் போன்ற, தீது நிறைந்த அக்கல்வியின் மேல் கொண்டிருக்கும் மயக்கத்தினால் மிகவும் சிரத்தையுடன், எல்லாச் செய்கைகளிலும் பொய்மை நிறைந்திருக்கும் விலங்கினம் வாழும் வெங்குகைக்கு என்னை அனுப்பினார்.

22. பண்புடையவரின் பண்புகளைச் சுட்டுக.

குணங்களால் நிறைந்த தன்மை உடையதாலும், உலகத்தைத் தன்பால் வசீகரிப்பதாலும், தொல்லோர் சென்ற நன்னெறி என்பதாலும் சான்றோர் குணங்களாகும். மேலும் ஒருவரை விளையாட்டாகப் பழித்துப் பேசுதலும் பேசுபவருக்கு அது துன்பத்தை விளைவிக்கும். ஆதலால், பிறரது இன்ப, துன்பங்களையும் இயல்புகளையும் அறிந்து நடக்கக்கூடிய பண்புடையாரிடத்தில் பகைமை உள்ளபோதும், பண்புகளே காணப்படும். பண்புடையார், இவை இன்னாதவை என்பதை முன்னமேயே அறிந்தவராவார். எனவே அவற்றை ஒருபோதும் செய்ய மாட்டார். இனியவற்றையே செய்வார்.

23. அம்புலியை ஆட அழைக்கும் அழகினைக் குறிப்பிடுக.

பெரிய மலைகளும் கிடுகிடுவென்று அதிரும்படியாக, மிகுந்த வேகத்தில் மயிலேறி வருபவன், திருச்செந்தூரில் வீற்றிருக்கின்ற கழந்தை முருகன். கடலில் இருந்து அளவில்லாத முத்துகள் கரை ஒதுங்கும், நெய்தல் நிலத்தில் உள்ள மக்கள் அதனைச் சேகரித்து மகிழ்வர். அத்துடன், சிறந்த வலம்புரிச் சங்கும், அளவில்லாத முத்துக்களைக் கரை ஒதுக்கிச் செல்லும். மேலும், கடற்கரைச் சோலையில், தாழை மடல்கள் மலர்ந்து மணம்வீசும், இளவாடைக்காற்று, அதன் மணத்தைச் சுற்றப்புறம் முழுவதிலும் பரப்பும். ஆங்கு, தாழை மடல்களின் உள்ளே இருந்து முத்துகள் ஒளி வீசும். இரவு -இரத்தல்,பிறரிடம் பொருளைப்பெற்று வாழ்வதாகிய வறுமை வாழ்க்கை, திருச்செந்தூரில் இருந்து, குழந்தை முருகன், வேண்டுவோரின் வேண்டுதலுக்கு ஏற்ப அவர்தம் தகுதிக்கு உரியதைக் குறைவில்லாமல் தந்தருள்கின்றான். ஆதனால், அங்கு வறுமையில் வாடிப் பிறரிடம் பொருளை நாடிச் செல்கின்ற இழிவாகிய, கீழான வாழ்க்கை என்பது எவருக்கும் இல்லை. அவனே அருள்நிலவாக இருந்து, அனைத்தையும் வாரி வழங்குவதால், அருள்செல்வமாகிய ஒளி அனைத்து இடங்களிலும் நிறைந்திருந்தது. நிலவே! நீ, குழந்தை முருகனுடன் விளையாட வரவேண்டும். அவனுடன் விளையாடுவதற்கு வந்தால், எவராலும் நீக்க இயலாத, எனது குற்றமாகிய கலங்கத்தை அவன் போக்கிஅ ருள்வான். இவ்வாறு, திருச்செந்தூரின் குழந்தை முருகனுடன் விளையாட வருமாறு நிலவினை அழைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

## *பகுதி – இ*

***கட்டுரை வினாக்களுக்குத் தவறாமல் மூன்றுபக்க அளவில் விடையளி: (3X8=24)***

24.(அ). இந்தியக் கல்விச் சிந்தனையின் சிறப்பினை பாரதி எடுத்துரைக்கும் பாங்கு யாது?

பாரதியார் ஆங்கில மொழியை வெறுத்தவர் அல்லர். ஆங்கிலக்கவிஞன் பெயரால் தன்னைச் 'ஷெல்லி தாசன்' என்று அழைத்துக் கொண்டவர். பாரதியின் ஆங்கிலப் பயிற்சி(சுயசரிதை) என்னும் பகுதியில் நம்நாடு அடிமைப்பட்டுக்கிடந்த அன்றைய சூழ்நிலையில் பயிற்று மொழி ஆங்கிலமும், ஐரோப்பியப் பாடத்திட்டங்களும் தீமை தருபவை என்று எச்சரிக்கை செய்துள்ளனர். தன் ஆங்கிலப் பயிற்சி தனக்கு விருப்பமில்லாது அமைந்ததையும் அதனால் அவர் அனுபவித்த இன்னல்களையும் இக்கவிதையில் பின்வருமாறு மிக அழகாகவும் ஆழமாகவும் விளக்கியுள்ளார்.

**ஆங்கிலக்கல்வியைக் கற்கச் சொல்லுதல்**

திருநெல்வேலிக்குச் சென்று அவ்வூரில் வாழும் அந்தணர்கள் மற்றும் துரையர்கள் கற்கும் கல்வியினை கற்குமாறு என் தந்தை என்னைப் பணித்தார். புல்லை உண்ணுமாறு சிங்கத்தின் குட்டியினை அனுப்புதல் போலவும், இறைச்சியை வெட்டிவிற்பது நல்ல வருமானத்தைத் தருமென்று ஒரு பார்ப்பனப் பிள்ளையை அத்தொழிலை விருப்பப்பட்டுச் செய்யுமாறு அனுப்புவது போலவும், என்னுடைய தந்தை மிகவும் துன்பம் நிறைந்த, ஒரு பயனும் இல்லாத ஆங்கிலக்கல்வியை மேலும் என்னைப் போன்றார்க்கு அருவருப்பாகத் தோன்றிடும் கல்வியினை கற்கச் சொல்கிறார்.

**சூது நிறைந்தோர் கற்கும் கல்வி**

சூதுசெய்து வாழும் மக்கள், பணத்திற்காக ஒருவரைப்பற்றிய செய்தியினை மற்றொருவருக்குத் தெரிவித்துத் தம் வாழ்வில் நாயைப் போன்றார்க்கும், உணவிற்காகத் தம் உயிரைக் கூட விற்றிடுபவரும், தனக்கு ஏதாவது ஒரு வழியில் பயன்பட்டிடும் ஒருவரைச் சார்ந்து அவரைப் புகழ்ந்து பேசிடுவோரும், வீணாக எந்த வேலையும் செய்யாமல் இருக்கும் மக்களும் விலங்குகளுக்கு ஒப்பாவார்கள். அத்தகையோர் கற்றிடும் கல்வியை என்னைக் கற்குமாறு பணித்தார் என் தந்தை. மிகவும் அருமையான குணங்கள்

படைத்த என் ஆசைத் தோழியாகிய மயிலைப் பிரிந்து சென்று அக்கல்வியினைப் பயிலுமாறு பணித்தால் என் மனம் அற்பமானவர்கள் கற்றிடும் அக்கல்வியில் ஈடுபடாது.

**கல்வியின் பயன் அறியாதிருத்தல்**

ஜோதிடக்கணிதம் என்னும் கல்வியினை பன்னிரண்டு ஆண்டுகள் பயிலுபவர், ஆனால் மேகத்தால் சூழப்பெற்ற வானில் நிறைந்திருக்கும் விண்மீனில் ஒன்றைப் பற்றியும் அறிந்திலர். தமிழுக்கு அணியாக விளங்கிடும் பல ஆயிரக்கணக்கான நூல்களைக் கற்றிடுவர். ஆனால் கவிதைகளில் ஆழ்ந்திருக்கும் நுண்ணிய பொருளை அறியாதிருப்பர். ஏட்டில் விளங்கும் செய்தொழில் பற்றியும், அதன் பொருளையும் கூறிடும் அவர்களால் நம் நாட்டில் நிலவிடும் பொருளாதாரத் தட்டுப்பாட்டினைக் கூற இயலுவதில்லை. அர்த்தமற்ற பல்லாயிரம் நாமங்களைக் கூறிடுவர். ஆனால் அதனால் எள்ளளவும் பயன்பெற்றிலர்.

**புகழ் படைத்த பாரதப்பெருமை**

கம்பன் எனப்படும் ஒரு மானிடக்கவிஞன் வாழ்ந்ததும், காளிதாசன் 'சகுந்தலை ¢ என்னும் பெண்ணினை மையமாக வைத்துக் கவிதை நூலை இயற்றி அளித்ததும், தேவர் வாழ்கின்ற வானில் இருக்கும் செயற்கைக் கோள்களையும், விண்மீனையும் ஆராய்ந்து அறிந்து முதன்முதலில் தன் சாதனையால் பெருமை அடைந்த பாஸ்கரனின் புகழும், நம்புவதற்கே அறிதாகி கவிஞன் ஒருவன் உலகின் மீது இலக்கணம் படைத்ததும், உலகில் வாழும் மானிடரின் வாழ்வின் முக்கியத்துவமாகிய இறை உண்மையைக் கண்டுபிடித்து மக்களுக்கெல்லாம் உணர்த்திய ஆதிசங்கரர் புகழ் அடைந்ததும் இத்தாய்த்திருநாட்டில்தான். சேரமன்னன் செங்குட்டுவனின் தம்பி தன் அண்ணனுக்காகத் துறவறம் மேற்கொண்டு இளங்கோவடிகள் என்ற பெயர்பெற்று, கண்ணகியின் வாழ்க்கை வரலாறாகிய 'சிலப்பதிகாரம்' என்னும் நூலினை எழுதியதும், தெய்வப்புலவர் எனப்போற்றப்படும் திருவள்ளுவர், வானளவு உயரிய திருக்குறளை இயற்றி அளித்ததும், உலகில் நல்ல புகழ் படைத்த பாண்டிய, சோழர்கள் உலகைக் காத்ததும், தர்மம் வளர்த்ததும், பேரருட்சுடரோடு விளங்கக் கூடிய தமது வாள் கொண்டு அசோகனார், சிறிதும் பிழையின்றி இந்தப் புவித்தலத்தைக் காத்ததும், வீரர்க்ள அனைவரும் வாழ்த்த ஆங்கிலேயர்களின் தீய அரசாட்சியை வீழ்த்தி வெற்றி பெற்ற சிவாஜியின் வெற்றியும் மிக்க பெருமையுடையது நம் பாரத நாடு.

**ஆங்கிலக்கல்வி நமது பெருமையை மறைத்தல்**

மேற்கூறிய செய்திகளை அறியாமல் இருக்கிறார்கள் நம் பாரதத்து ஆங்கிலக்கல்வி பயிலும் மாணவர்கள். முன்னர் நமதுநாடு திகழ்ந்த பெருமையும்,மூண்டிருக்கும் இந்த நாளின் இகழ்ச்சியும், நாட்டின் உறுப்பினர்களாகிய மக்கள் உய்யும் வழியற்ற, தேவையற்ற கல்வியைக்கற்றுப் பித்தர்களாய் அலைவதையும் என்னவென்று கூறி நான் எவ்வாறு உணர்த்துவேன் என் உள்ளம் எரிவதை.

**தீது நிறைந்த ஆங்கிலக் கல்வி**

ஒரு சூழ்ச்சியும் உள்ளத்தில் இல்லாத என் தந்தை எனக்கு நன்மை செய்ய நினைத்து, ஆங்கிலேயர் தரும் கல்வி, படுகுழியும், ஏறி உய்யவே இயலாத கொடுங்குகையும் போன்ற, தீது நிறைந்த அக்கல்வியின்

மேல் கொண்டிருக்கும் மயக்கத்தினால் மிகவும் சிரத்தையுடன், எல்லாச் செய்கைகளிலும் பொய்மை நிறைந்திருக்கும் விலங்கினம் வாழும் வெங்குகைக்கு என்னை அனுப்பினார்.

**ஆங்கிலக்கல்வியினால் ஏற்பட்ட இழப்பு**

ஐயருக்கும் , மிகவும் பணவசதி படைத்தவர்களுக்கு மட்டுமே ஆங்கிலக் கல்வி, மற்றவர்களுக்கு இக்கல்வியினைக்கற்கும் தகுதியில்லை என்று பொய்யைக் கூறிய ஆங்கிலேயருக்கு ஒன்று கூறுகிறேன். நாள் முழுவதும் உங்கள் பாடத்தினில் என் மனதையும், பொழுதினையும் போக்கி , விழிகள் குழியாகிட, உள்ளமானது வலுவிழந்து , மனதின் சஞ்சலங்கள் அதிகரித்து, எனது சுதந்திரம் நீங்கி அறிவு குன்றி துரும்பைப்போல் இளைத்துவிட்டேன்.

**தப்பிப் பிழைத்தல்**

இத்தேவையற்ற கல்வியினால் என் தந்தைக்குச் செலவு ஆயிரமானாலும் எனக்குத் தீமை பல்லாயிரக்கணக்கில் சேர்ந்தது. நலம் என்பது எள்ளளவும் இல்லாத கல்வி இது. இதனை நாற்பதாயிரம் கோயிலில் வேண்டுமானாலும் கூறுவேன். என் முன்னோர்கள் சிலர் செய்த நல்ல செயலினாலும், பாரத தேவியின் அருளினாலும் மீளவே முடியாத பேரிருளில் வீழ்ந்த நான் அதனில் அழியாமல் ஒருவாறு தப்பிப் பிழைத்தேன் என்று ஆங்கிலக்கல்வியின் தீமைதனை அன்றே சுட்டிக்காட்டினார் பாரதி.

**(அல்லது)**

(ஆ). மலையாளக் காற்று வழங்கிய கொடைத் திறத்தை நும் பாடப்பகுதி கொண்டு ஆராய்க.

கவிஞர் சிற்பியின் மலையாளக்காற்று என்னும் கவிதை கேரளத்துச் செய்தி மடலாக நேசக்கரமாகத் திகழ்கிறது. காற்றே வருக, கேரள தேசத்தின் தாய்மொழியாகிய மலையாள மொழியின் இனிமையை உன்னோடு சேர்த்துக் கொண்டு வருக. சூரியன் உதயமாகிகிடும் புத்தம் புதிய காலை வேளையில் தான் வரும் தெருவையே வாச மலர்களின் மணத்தினால் கவர்ந்திடும் பூக்காரி போல வாசனையுடன் மெல்ல நடந்து வருக. உன் தாய்வீடாகிய பாலக்காட்டிற்கு வரும் செல்ல மகளாகிய உமது வருகைக்காக மூடப்படாத பெரிய கதவாக என்றும் திறந்தே இருந்திடும் பாலக்காட்டு கணவாய். அரபிக்கடலின் நீலநிறத் தண்ணீர் சுரங்கத்தில் இருந்து முத்து, பவளம் போன்ற கிடைத்தற்கரிய புதையல்களை அள்ளிக் கொண்டு, நெஞ்சை நிமிர்த்தி நின்றிடும் இரு கரைகளுக்கும் அதனைச் சுற்றி அமையப்பெற்ற அணைக்கும் சுகத்தைத் தருவது போல இன்பத்தோடு வந்து அதனில் மோதிடு. சங்கம்புழையின் கவிதைகள் போல, தேக்கு மரங்களின் நிறைவால் அடர்ந்து செறிந்திருக்கும் காடுகளின் தோளாகிய தேக்கு மரங்களின் கிளைகளில் உராய்ந்து வருக.

உன் தென்றல் காற்றினால் தென்னை மரங்களை கேரளத்துப் பாரம்பரிய நடனமான கதகளி போல ஆடவிட்டு மிளகுக் கொடிகளில் புகுந்து கண்ணாமூச்சி விளையாடி வருக. வித்தைகள் பல புரிந்து விளையாடும் மோகினியைப் போல பலா மரத்தின் இலைகள் பச்சைக்கிளிகள் போலச் சிறியதாய் அசைந்து ஆடிட, தாழம்பூக்கள் மஞ்சள் கிளிகளாய் சிறகடித்திட மாயம் புரிந்து வருக. கோடையில் குருவாயூர் சந்தனத்தின் குளிர்ச்சியைப் போல குளிர்வதும், கோடையில் காதலியின் அண்மைபோலச் சுடுவதும் உன் வழக்கம். ஆடி மாதத்தில் தமிழகமே வெயிலால் அவதியுறும் போது உனது இதமான தென்றல் காற்று எம் வாசலின் வழியே மெல்ல வந்து இறங்கிடும்.

பாலக்காட்டு மணியின் மிருதங்க ஆவர்த்தனம் போலவும், கேரளத்தின் சிறப்பான நடனங்களில் ஒன்றான எரிமேலி பேட்டைத் துள்ளலாகவும், கலகலப்பாக வந்து பளிங்குபோல் தூய்மையுடன் விளங்கிடும் மழைத்துளியுடன்

விளையாடிவரும் தென்றலே வெப்பத்தால் தகித்த எங்கள் மண்ணுக்கு கேரளத்தின் அம்பலப் புழை பால்பாயாசம் போல இனிமை தருகிறாய். இவ்வாறு எத்தனை நன்மைகளை எங்களுக்காக அள்ளிவந்தனை என்னருமைக் காற்றே. ரோமானியர்களின் வருகையினால் எங்களுக்கு வெள்ளியும், தங்கமும் அள்ளிவந்து எம் மண்ணில் விதைத்துப் போனாய். குலசேகரப் பெருமாளின் தேவகியின் புலம்பல் எனப்படும் அவலக் காவியத்தை அதன் சுவை குன்றாமல் எங்களுக்கு அள்ளித்தந்தாய். சேரமான் பெருமாள் நாயனாரின் ஆதிஉலா எனப்படும் ஞான உலாவினோடு நீயும் உலா வந்தாய். காட்டு யானையின் தந்தத்திற்கு ஒப்பான தத்துவக் கூர்மைக்கு எடுத்துக்காட்டான ஆதிசங்கரரை உன்னுடைய பிள்ளையாய் எடுத்து வந்தாய்.

தகழி சிவசங்கரம் பிள்ளையின் செம்மீனாய் மலையாளக் கரையோரக் கருத்தம்மாவாய் நீலக்கடலோரம் சோகத்தைச் சுமந்து திரிந்தாய். இலக்கியமாகி மட்டுமல்லாமல் கனராக கந்தருவனாக ஏசுதாஸின் இசையமுது நிறைந்த பாடலால் எம்மைக் கரைந்து கரைந்து காணாமற் போகச்செய்தாய். வைகை பெருகிவருவதற்குக் காரணமாகப் பெரியாற்றில் தேங்கி நின்றாய். கோவையின் களைப்பைத் தீர்க்க சிறுவாணி ஆறு கொண்டு விசிறினாய். பரம்பிக் குளத்தால் நெஞ்சில் பச்சை பிடிக்க வைத்தாய்.

இத்தனையும் மலையாளப்பூங்காற்றே எங்களுக்கு நீ செய்தாய். ஆனால் நாங்கள் என்ன கைம்மாறு செய்தோம்? நீ வருகின்ற கணவாய்ப் பாதையில் உன்னை வரவேற்பதற்காகப் பளிங்குக்கல் பதித்து அதன்மேல் பட்டுத்துணியை விரித்தது போல் ஓர் இளம் நதியை - ஆழியாற்றை அன்போடு அனுப்பி வைத்தோம். அதிசயம் பார். நல்லவர்களுக்குச் செய்யும் உபகாரம் பன்மடங்காகப் பெருகுமென்று சொல்லுவார்கள். அதைப்போல, உனக்காக விரித்த நடை பாவாடை அந்தச் சின்னஞ்சிறு நதியாகிய ஆழியாறு, கேரளத்தின் சரித்திரத்துச் சீதனமாய்க் கலைநதியாய்க் குலதனமாய்ப் பாரதப்புழையாகப் புகழோடு விளங்குகிறது. திருவள்ளுவர் சொன்னதைப்போல தினையளவு நன்றியைப் பனையளவு ஆக்கினாய். மலையாளக் காற்றே நீ வாழ்வாயாக!.

## 25.(அ). மக்கட் பண்பின் சிறப்புகள் குறித்து திருக்குறள் எங்ஙனம் விளக்குகிறது?

பெருமை முதலிய சிறந்த குணங்களிலிருந்து ஒருவன் வழுவாது நின்று எல்லோரது இயல்புகளையும் அறிந்து ஒத்து ஒழுகும் தன்மையே பண்பாகும். இப்பண்பினை விளக்குவதாக இவ்வதிகாரம் அமைந்துள்ளது.

எல்லோரிடத்தும் எளிமையான தன்மையுடையவராதலின் பண்புடைமை என்னும் நன்னெறியை அடைவது எளிது என்று சொல்லுவர் அறநூலோர். குணங்களால் நிறைந்த தன்மை உடையதாலும், உலகத்தைத் தன்பால் வசீகரிப்பதாலும், தொல்லோர் சென்ற நன்னெறி என்பதாலும் பண்புடைமையை அனைவரும் எளிதில் பின்பற்றி ஒழுகுதல் வேண்டும் என்பதற்காக நூலோர் இங்ஙனம் கூறுகின்றனர்.

எல்லோரிடத்திலும் அன்புடையவனாய் இருத்தலும் அனைத்து நல் இலக்கணங்களும் உடைய குடியில் பிறந்தவருக்கு உரிய செயல்களை உடையவனாயிருத்தலும் ஆகிய இவ்விரண்டும் பண்புடைமை என்னும் நன்னெறி ஆகும். உயிரோடு பொருந்தாத உடம்பால் ஒத்திருத்தலால் ஒருவன் நன்மக்களுக்கு ஒப்பாக மாட்டான். பொருத்தமான பண்பால் ஒத்திருத்தலே பொருந்துதற்குரிய ஒப்பாகும். எனவே நன்மக்களோடு பெறப்படும் ஒப்பாவது உடம்பினால் ஒத்தல் அன்று.

நீதியையும் அறத்தையும் விரும்புதலும் எல்லோருக்கும் பயன்படுதலுமாகிய நல்லோரினது உயர்ந்த பண்புகளை இவ்வுலகத்தோர் கொண்டாடுவர். எனவே உயர்ந்த பண்புகளைக் கடைபிடித்து ஒழுகுதல் வேண்டும். ஒருவரை விளையாட்டாகப் பழித்துப் பேசுதலும் பேசுபவருக்கு அது துன்பத்தை விளைவிக்கும். ஆதலால், பிறரது இன்ப, துன்பங்களையும் இயல்புகளையும் அறிந்து நடக்கக்கூடிய பண்புடையாரிடத்தில் பகைமை உள்ளபோதும், பண்புகளே காணப்படும். பண்புடையார், இவை இன்னாதவை என்பதை முன்னமேயே அறிந்தவராவார். எனவே அவற்றை ஒருபோதும் செய்ய மாட்டார். இனியவற்றையே செய்வார்.

பண்புடையாரைச் சார்ந்து அமைந்திருப்பதால் உலகம் இடையறாது இயங்கி வருகிறது. அவ்வாறு சார்ந்து இல்லையாயின் உலகமானது மண்ணுள் புகுந்து மறைந்து போகும். எனவே உலகியல் நிலைத்து இயங்குவதற்கு அனைவரும் பண்புடைமையைச் சார்ந்து ஒழுகுதல் வேண்டும். நன்மக்கட்கே உரிய நற்பண்பு இல்லாதவர். அரத்தின் கூர்மை போலும் கூரிய அறிவுடையராக இருந்தாலும் ஓரறிவுடைய மரத்திற்கு ஒப்பாகக் கருதப்படுவர். அறிவிற்குப் பயனான மக்கட் பண்பு இல்லையாயின் அறிவும் இல்லாதவர் என்றே கருதப்படுவர். தம்மோடு நட்பு கொள்ளாது பகைமையே செய்தொழுகுபவர் இடத்திலும் தாம் பண்புடையராக நடந்து கொள்ளாமை அறிவுடையார்க்கு இழுக்காகும். எனவே எத்தகைய தன்மை உடையவருடனும் பகைமை பாராட்டாது பழகுதல் பண்புடைமை ஆகும்.

### (ஆ). நீதிக்கருத்துக்களை கொன்றை வேந்தன் விரித்துரைக்கும் பாங்கு யாது?

தாய், தந்தையர் கண்கண்ட தெய்வம். கோவிலுக்குச் சென்று இறைவனைத் தொழுவது மிகவும் நல்லது. இல்லறவாழ்வே மிகவும் நன்மை பயக்கக் கூடியது. பிறருக்கு உதவி செய்யாதோர் பொருளைத் தீயவர் பறித்துக் கொள்வர். ஊராரோடு பகைத்துக் கொண்டால் குடும்பம் அழிந்து விடும். அறிவியலுக்கு ஆதாரமான எண்ணும், இலக்கிய அறிவுக்கு ஆதாரமான எழுத்தும் நமக்குக் கண் போன்றவை. செய் என்று சொல்லும் முன்பே குறிப்பறிந்து செயலாற்றும் பிள்ளைகள் அம்ருதம் போன்றவர்கள். பொறாமைப் பேச்சு வளர்ச்சியை அழிக்கும். சிக்கனமாயிருந்து தான்யத்தையும், செல்வத்தையும் தேட வேண்டும். பிறர் குற்றங்களையே ஆராய்ந்து கொண்டிருந்தால், சுற்றத்தார் என்று எவருமே இருக்க மாட்டார்கள். பலவானாக இருந்தாலும், கர்வப் பேச்சு பேசாதே.நமக்கு ஒருவர் கெடுதல் செய்தால், அதை அப்படியே விட்டு விடுதலே உயர்ந்த செயல். தாழ்வு வந்த தும் மனந்தளராது இருப்பதே மீண்டும் எல்லாவற்றையும்சேர்க்கும். கையில் இருக்கும் பொருளைவிட உண்மையான செல்வம் கல்வியே ஆகும். தேவையிருக்கும் இடம் சென்று உதவி செய்தலே, ஆட்சி செய்வோர் அறிய வேண்டியது.பெற்றோருக்குப் பெருமை, அவர் பிள்ளைகள் சான்றோர் எனப் பாராட்டப்படுவதே. தவத்திற்கு அழகு இறை நினைவோடு இருப்பதே. புகழோடு வாழ விரும்பினால், பயிர்த் தொழிலில் ஈடுபட வேண்டும். எந்த நிலையிலும் கூடி இருத்தலே சுற்றத்திற்கு அழகு. சூதாட்டமும், தேவையில்லாத விவாதமும் துன்பத்தையே தரு.பொருள் கொடுக்குமளவு இருந்தால், பிறருக்கு உணவிட்டு உண்ண சோம்பெறிகள் வறுமையில் வாடித் திரிவர். தந்தை சொல்லெ உயர்ந்த மந்திரம் போலாகும் .தாயே சிறந்த தெய்வமாகும். கடல் கடந்தாவது பொருள் தேட வேண்டும், கோபம் சீக்கிரமாகப் போய் விட வேண்டும். இல்லையேல் அது சண்டையில் போய் முடியும். பொருளைத் தேடிச் சேர்க்காது, இருப்பதை செலவிட்டுக் கொண்டிருந்தால் துன்பத்தில் முடியும். தை, மாசி (வெயில் காலம்) மாதங்களில் வைக்கோல் வேய்ந்த வீட்டில் உறங்கு. பிறரிடம் வணங்கி அந்த ஊதியத்தில் உண்பதைவிட பயிர்செய்து உண்பதே இனிது.நெருங்கிய நண்பனிடத்தும் நம் வறுமை பற்றிப் பேசக் கூடாது நல்லோர் நட்பு இல்லையேல், அல்லல் படுவோம். நாடு செழித்திருக்குமானால் எவருக்கும் இன்பமே. சொன்ன சொல் தவறாது இருத்தலே, நிலையான கல்வி கற்றதற்கு அழகு. நீர் நிறைந்த ஊரில் வசிக்க வேண்டும். சிறிய கார்யமாக இருந்தாலும், யோசித்து செயல் பட வேண்டும். நல்ல நூல்களைப் பயின்று, ஒழுக்கத்தோடு நடந்து கொள். நமக்குத் தெரியாமல் ஒருவருக்கு வஞ்சனை செய்ய முடியாது.

மனம் ஒப்பி செய்யாத எந்த விரதமும் சிறப்பாக முடியாது. சக்தியற்றவர் இடத்தும் மனம் நோகுமாறு பேசக்கூடாது. சிறியவர்களும் செய்யும் கார்யத்தால் சிறந்தவர் ஆவர். உயிரைக் கொன்று அதை உண்ணாமல் இருப்பதே விரதமாகும். ஒருவர் புண்ணியம் அவர் அடைந்த விளைச்சலில் தெரியும். சிறந்த உணவாக இருந்தாலும், காலமறிந்து உண்ண வேண்டும். அடுத்தவன் மனைவியை விரும்பாததே சிறந்த அறம். தாய்ப்பாலை ஊட்டி வளர்த்தால், அந்தக் குழந்தை பலம் பெறும், நிர்வாக .சுமைகளைத் தாங்கும். புலாலுண்ணுதல், கொலை, திருடு இம்மூன்றையும் செய்யாதே. கொடியவர்களிடம் சிறந்த ஒழுக்கங்கள் இருக்காது. ஞானம் பெற்றோர்க்கு சுற்றம் என்ற பந்தமும், கோபமும் கிடையாது. அறியாதவர் போன்று இருப்பது பெண்களுக்கு அணிகலன். நிதானமாகச் செய்யும் கார்யங்களில் வெற்றி நிச்சயம். அனைத்துத் தீங்குகளையும் விட்டு விடு. தான் முயன்று உழைத்து சம்பாதித்ததே உணவு என்பதாகும். தேவாம்ருதமே கிடைத்தாலும், பிறரோடு சேர்ந்து உண். மழையின்றி ஒன்றும் இல்லை. மழை வரப்போவதற்கு அறிகுறியே மின்னல். மாலுமி இல்லாத ஓடம் செல்லாது. பிறருக்கு செய்யும் நன்மை, தீமைகள் பின்பு நமக்கே வரும் . முதியோர்கள் அறிவுரை அமிர்தம் போன்றது. மெத்தையில் படுத்து உறங்குதலே தூக்கத்திற்கு சுகம். கலப்பையால் உழைத்துச் சேர்த்த செல்வம் ஒரு போதும். வீண் போகாது. பெரியோர் சொல்லை கேளாமல் மறுத்தால் அந்த காரியங்கள் கெட்டுவிடும்

**26.(அ). உயர்தனிச் செம்மொழியின் தனிச்சிறப்புகள் குறித்து எடுத்துரைக்க.**

உயர்தனிச் செம்மொழியின் ஆசிரியர் பாரிதிமாற் கலைஞர் – ஆசிரியர் குறிப்பு – உயர்தனிச் செம்மொழி குறித்த விளக்கம் – தமிழின் மூன்று பிரிவுகள் – அவற்றின் விளக்கம் – இசைத்தமிழின் சிறப்பு – நாடகத்தமிழின் தனித்தன்மை – இயற்தமிழின் சிறப்பு – பிற மொழிகளைவிட தமிழ்மொழி உயர்ந்திருப்பதற்கான காரணம் – செம்மொழியாகிய பிற மொழிகள் பற்றிய குறிப்பு – தனித்தியங்கும் தன்மையோடு தமிழ் இருப்பதனை விளக்குதல் போன்றவை.

**(ஆ). நாளிதழ் விளம்பர அடிப்படையில், வேலைவேண்டி விண்ணப்பம் எழுதுக.**

அனுப்புநர்

பெருநர்

மதிப்பிற்குரியீர்,

பொருள் –

வணக்கம். கல்வித்தகுதியோடு சுய விவரங்களை இணைத்து முக்கியக் குறிப்புகளை எழுதுதல் – நன்றி- இடம் – நாள்- கையொப்பம் முதலியவற்றை எழுதுதல்.

**கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்** ***17LAU101***

## கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

## தமிழ்த்துறை

### கலையியல் பட்ட மாணவர்க்குரியது

## இரண்டாம் இடைத் தேர்வு: பகுதி-I, தமிழ்த் தாள்:I

**நேரம்: 2மணி** **மொத்த மதிப்பெண்கள்: 50**

***பகுதி: அ***

***சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக:*** ***(20X1=20)***

1. 'மனமே வாழ்வின் உயிர்நிலையாம்' என்று கூறிய கவிஞர் யார்?

   (அ). சுகந்தி சுப்பிரமணியம் (ஆ). பாரதியார் (இ). எஸ். வைதீஸ்வரன் **(ஈ). கவிமணி**

2. 'படைப்புக் கடவுளின்' பெயர் யாது?

   **(அ). பிரம்மா** (ஆ). திருமால் (இ). வருணன் (ஈ). இந்திரன்

3. 'மலரும் மாலையும்' -என்ற கவிதைத் தொகுதியில் இடம் பெற்ற கவிதையின் பெயர் என்ன?

   **(அ). ஒற்றுமையே உயிர்நிலை** (ஆ). விரல்மீட்டியமழை (இ). காலவழு (ஈ). வான்

4. 'தன்னுயிர் போற்றித் திரிபவர் எக்குலத்தில் பிறந்தோர்' ஆவர்?

   (அ). உயர்ந்தகுலம் **(ஆ). தாழ்ந்தகுலம்** (இ). வேதியர்குலம் (ஈ). மனிதகுலம்

5. 'எண்ணிய எண்ணியாங்கு எய்துபவர்' யார்?

   (அ). கல்வியாளர்(ஆ).செல்வந்தர்(இ). **மனவலிமையுடையோர்** (ஈ). அறிவில் சிறந்தோர்

6. 'வீறெய்தி மாள்பவரின்' -போற்றுதற்கு உரியது?

   **(அ). வினைத்திட்பம்** (ஆ). அறிவு (இ). கல்வி (ஈ). செல்வம்

7. 'உருவுகண்டு எள்ளாதீர்கள்' என வலியுறுத்துகின்ற இலக்கியம் எது?

   **(அ). திருக்குறள்** (ஆ). கொன்றை வேந்தன் (இ). பழமொழி நானூறு (ஈ). கலிங்கத்துப்பரணி

8. திருக்குறள் பொருட்பாலில் உள்ள அதிகாரங்கள் மொத்தம் எத்தனை?

   (அ). 35 **(ஆ). 70** (இ). 38 (ஈ). 25

9. பழமொழிநானூறு நூலின் ஆசிரியர் யார்?

   (அ). .அவ்வையார் (ஆ). பெருவாயின்முள்ளியார் **(இ). முன்றுறைஅரையனார்** (ஈ). பாரதியார்

10. 'ஞாயிறு' என்னும் சொல்லின் பொருள் யாது?

    (அ). அழகு (ஆ). சந்திரன் (இ). மேகம் **(ஈ). சூரியன்**

11. 'தேரை' என்பதன் பொருள் கூறுக?

    **(அ). தவளை** (ஆ). ஆமை (இ). மீன் (ஈ). நண்டு

12. 'ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்' - என மொழிகின்ற இலக்கியம் எது?

    (அ). கலிங்கத்துப்பரணி **(ஆ). பழமொழிநானூறு** (இ). திருக்குறள் (ஈ). மூவருலா

13. 'கலம்' - என்பதன் பொருள் யாது?

    **(அ). மரக்கலம்** (ஆ). நெற்களம் (இ). உப்பளம் (ஈ). ஏர்களம்

14. கலிங்கத்துப் பரணியை பாடிய ஆசியரியர் யார்?

    **(அ). செயங்கொண்டார்** (ஆ). ஒட்டக்கூத்தர் (இ). திரிகூடராசப்பக் கவிராயர் (ஈ). பகழிக்கூத்தர்

15. போர்க்களத்தில் வீழ்ந்துகிடக்கும் வீரர்களின் முகங்களைத் தாமரைமலர் போல் காட்சிப்படுத்திடும் இலக்கியம் எது?

(அ). மூவருலா **(ஆ). கலிங்கத்துப்பரணி** (இ). முக்கூடற்பள்ளு (ஈ). திருக்குற்றாலக்குறவஞ்சி

16. 'மானவர்' என்பதன் பொருள் யாது?

(அ). அமைச்சர் **(ஆ). வீரர்** (இ). அரசர் (ஈ). அந்தணர்

17. பத்தினிக்கோயில் எழுப்பப்பெற்ற காலம் யாது?

(அ). 4 ஆம் நூற்றாண்டு **(ஆ). 2 ஆம் நூற்றாண்டு** (இ). 5ஆம் நூற்றாண்டு (ஈ).7 ஆம்நூற்றாண்டு

18. ஒரே கல்லைக் கோயிலாக அமைத்த பெருமை யாருக்குரியது?

(அ). பாண்டியர்(ஆ). சேரர் (இ). சோழர் **(ஈ). பல்லவர்**

19. 'கல்வித்தந்தை என அனைவராலும் அழைக்கப்படுபவர்' யார்?

(அ). இளவழகனார் (ஆ). பரிதிமாற்கலைஞர் **(இ). நெ.து.சுந்தரவடிவேலு** (ஈ). ம.இராசமாணிக்கனார்

20. 'கற்றணைத்து ஊறும் அறிவு என வலியுறுத்துக்கின்ற' உரைநடைப் பகுதியின் தலைப்பு யாது?

(அ). உயர்தனிச்செம்மொழி (ஆ). வாழ்க்கை **(இ). மணற்கேணி** (ஈ). கட்டடக்கலை

## ***பகுதி – ஆ***

***அனைத்து வினாக்களுக்கும் தவறாமல், ஒருபத்தி அளவில் விடையளி: (3X2=6)***

21. வினைத்திட்பம் என்பது ஒருவரின் மனத்திட்பம் என்பதை விளக்குக?

**பதில்** : வினையாவது செயல். திண்மையாவது உறுதி. எனவே வினைத்திட்பம் என்பது வினைத்திண்மை. அதாவது வினை உறுதி என்பதாகும். குறிப்பிட்ட செயலை வெற்றிகரமாகச் செய்து முடிப்பவனுக்கு வேண்டிய மனவுறுதியை இவ்வதிகாரம் விளக்குவதாக அமைந்துள்ளது.வினைத்திட்பம் என்பதன் விளக்கம்

22. "பொருதடக்கை வாளெங்கே! மணிமார்பெங்கே!"- இடம் சுட்டிப்பொருள் விளக்கம் தருக.

**கணவரின் தலையினைப் பெற்ற பெண்களின் புலம்பல்:** தமது கணவர்கள், போரில் வீர மரணம் அடைந்த செய்தியினைக் கேட்ட பெண்கள், அவர்களது உடல்களைக் கண்டாவது ஆறுதல் பெற நினைத்து, போர்க்களத்துக்கு ஓடோடி வந்தனர். பயிரவி என்னும், போர்களக் கடவுளைக் கேட்பவர்களாக அவர்கள் அழுது புலம்பினர். தலை துண்டிக்கப்பட்டதால் இறந்த வீரர்களின் மனைவியர், கணவர்களது தலையினை மட்டும் கண்டவுடன் கதறினர்.பகைவர் பலரையும் எதிர்த்து நிற்கின்ற கணவனின் வீரமான, வெட்டுப்பட்ட மார்புகள் எங்கே?.; பகைவர்களுக்கு அஞ்சி, முதுகு காட்டி ஓடாமல் அவர்களை எதிர்த்து நிற்கின்ற வலிமையான தோள்கள் எங்கே?; பகைவர்களை வாளெடுத்து விரட்டுகின்ற வலிமையான கரங்கள் எங்கே? என்று அழுது கதறுகின்றனர்.

23. பல்லவர் காலக்கட்டடக்கலைச் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுக?

*பல்லவர்கள்* காலத்தால் அழியாத கல்கோயில்கள்,பல்லவர்களின் கட்டடக்கலையின் தனிச் சிறப்பாகும்.கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதலாக, மகேந்திரவர்ம பல்லவனின் புதிய முயற்சி.**பல்லவர்களின் கோயில்கள் -** குடைவரைக் கோயில்கள் – திருப்பரங்குன்றம் முருகன் கோயில், நாமக்கல் நரசிம்மர் கோயில், பள்ளிகொண்ட பெருமாள் கோயில்முதலானவை.

## பகுதி – இ

*கட்டுரை வினாக்களுக்குத் தவறாமல் மூன்றுபக்க அளவில் விடையளி:* *(3X8=24)*

24.(அ). ஒற்றுமையே உயிர்நிலை என்னும் கவிதையின் வாயிலாக வெளிப்படும் ஒற்றுமைச் சிந்தனையை விளக்குக?

**முன்னுரை**

கவிமணி சி. தேசிக விநாயகம் பிள்ளை வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பூதவுடம்மை நீத்துப் புகழுடம்பு நிறுவியவர்.இவரது கவிதைகள் தமிழ் இலக்கிய உலகில் புதியவழியையும், விழிப்பையும் புத்துணர்ச்சியையும் ஊட்டின. இவரது மலரும் மாலையும் என்ற கவிதைத் தொகுதியில் இடம் பெற்ற ஒற்றுமையே உயிர்நிலை எனும் கவிதையின் கருத்தினை இக்கட்டுரையில் காண்போம்.

**ஒற்றுமையாக உழைத்திடுவோம்.**

இந்திய நாட்டில் வாழும் மககள் அனைவரும் இணைந்து நாட்டின் முன்னேற்றம் கருதி உழைக்க வேண்டும். நாட்டின் முன்னேற்றத்திற்குத் துணையாக இருக்க வேண்டும். வீணாகக் கதைகள் பல பேசி பொழுதைப் போக்க வேண்டாம். மக்கள் ங்களுக்குள் கூடி விருந்துண்ணுவதோ தங்கள் குடும்பத்திற்குள் பெண்ணைத் திருமணம் செய்வித்து உறவு கொள்ளுவதோ ஒற்றுமையாகிவிடாது. அது தேவையுமில்லை. ஆனால் ஒவ்வொரு மனனும் மற்றவரோடு விரும்பி அன்பு கொண்டு நட்புடன் பழகவேண்டும். அந்நட்பின் பயனாய் இந்திய தேச நன்மைக்காய் உழைக்க வேண்டும். இதனால் எந்த நட்டமும் ஏற்படப் போவதில்லை. எனவே மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

**சாதி வேற்றுமை வேண்டாம்.**

நம்மிடையே சாதி வேற்றுமைகளை ஏற்படுத்திக் கொண்டு மேல்,கீழ் சாதி என்ற பிரிவினைகளை பாராட்டிச் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அனைவரும் பாரதத்தாயின் மக்கள் என்றும் பல்லவி பாடுகிறோம். நம்மிடையே சண்டைகள் இட்டுக் கொண்டே ஒரு தாயின் பிள்ளைகள் என்று சொவ்தால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை

**சாதி இரண்டு**

நம் பழங்கால அமைப்பின் படி வேதங்களின் தலைவனான பிரம்மனின் முகத்தில் இருந்து தோன்றிய வேதியர்கள் உயர்ந்த குலவத்தவர்கள் என்றும், அவனது பாதத்தில் தோன்றியவர்களான சூத்திரர்கள் அடிமைகள் என்றும் கூறுகின்றவர்களைப் பார்த்துக் கவிஞர் பாம்பிற்குப் பல்லில் விஷம், தேளினுக்கு கெடுக்கில் விஷம் ஆனால் தாயை விடச் சிறந்தவனான நம்மைப் படைத்த பிரமனுக்கு காலில் விஷமுண்டோ சொல்லுங்கள் என்று கேட்டு, அவ்வாறு விடமுண்டு எனில் உச்சியில் நன்கு பழுத்த சுவையான கனியையும் வேர்ப்பகுதியில் நச்சுக் கனியையும் கொண்ட ஒரு பலாமரத்தை இந்த உலகில் காணமுடியுமா? எனவும் கேட்கிறார்.

ஔவைத்தாய் கூறிய இட்டார் பெரியார், இடாதா இழிகுலத்தார் எனும் கருத்தின் படி சாதி இரண்டுதான் இந்தச் சமுதாயம் அதனை மறந்து விட்டது இவர்கள் சொல்லும் சாதி அமைப்பினை

முதலில் ஏற்படுத்தியவன் இறைவனா அல்லது மக்கள் தங்கள் கற்பனையால் ஏற்படுத்தினார்களா எனக் கவிஞர் கேட்கிறார்.

**(ஆ). வினைத்திட்பத்தின் முக்கியத்துவம் குறித்து சான்றுடன் நிறுவுக?**

வினையாவது செயல். திண்மையாவது உறுதி. எனவே வினைத்திட்பம் என்பது வினைத்திண்மை. அதாவது வினை உறுதி என்பதாகும். குறிப்பிட்ட செயலை வெற்றிகரமாகச் செய்து முடிப்பவனுக்கு வேண்டிய மனவுறுதியை இவ்வதிகாரம் விளக்குவதாக அமைந்துள்ளது.

**வினைத்திட்பம் என்பதன் விளக்கம்**

ஒரு வினையின் திண்மை, உறுதி என்பது அதனை முடித்தற்கு உரியவனின் மனத்திண்மையே ஆகும். வினை நல்ல முறையில் முடிவதற்குத் துணையாகின்ற படை, அரண், நட்பு முதலானவையும் திண்மைகள் என்று கூறப்பட மாட்டா.

வினைத்திட்பம் குறித்த கொள்கை

ஒரு வினையைச் செய்வதற்கு முன்னர் அதற்கு இடையூறு ஏற்படுமாயின் அவ்வினையைச் செய்யாமையும், செய்யும் வினையில் இடையூறு எற்பட்ட வழி அதற்குத் தளராமையும் ஆகிய கொள்கையே நீதி நூல் ஆராயந்த அமைச்சரது கொள்கையாகும்.

**வினை செயலாற்றும் வகை**

இடையூறு ஏற்படுத்துவோருக்கு இடையே இருந்து ஒரு செயலைச் செய்ய வேண்டிய சூழலில் பின்வருமாறு செயல்பட வேண்டும். குறித்த ஒரு செயலை பிறர் அறியாத வண்ணம் முதலில் மறைத்து, பின்னர் பிறருக்குப் புலப்படும் வகையில் செய்து முடிப்பதே வினை செய்யக் கூடிய வகை ஆகும். அதுவே வினைத்திட்பம் ஆகும். அங்ஙனம் இன்றி அவ்வினையானது இடையிலேயே பிறருக்குப் புலப்படுமாயின் செய்பவனுக்குப் பெருந்துன்பத்தைத் தந்து அச்செயலையும் முடக்கும்.

**வினைத்திட்பத்தின் அருமை**

ஒரு வினையை இவ்வாறெல்லாம் செய்து முடிக்கலாம் என வரிசைபட வழி சொல்லுதல் எல்லோருக்கும் எளியதாகும். ஆனால் சொல்லிய வழியில் நின்று அதனை வெற்றியுறச் செய்து முடிப்பது என்பது அனைவருக்கும் அரியவாகும்.

**வினைத்திட்பத்தின் சிறப்பு**

சிந்தனையாலும், செயல் திறனாலும் சிறப்பு பெற்றுப் பிற இலக்கணங்களால் பெருமை பெற்ற அமைச்சரது வினைத்திட்பமானது அரசனுக்குச் செல்வத்தையும், புகழையும் தரக்கூடியதாகும். அரசனாலும் எல்லோராலும் நன்கு மதிக்கப்படக் கூடியதாக அமையும்.

**வினைத்திட்பமுடையவர் எய்தும் பயன்**

ஒரு செயலைச் செய்ய நினைத்தவர் அவ்வினையை முடிப்பதற்குரிய மனவுறுதி உடையவராயிருப்பின், அவர் அடைய எண்ணிய பொருள்கள் எல்லாவற்றையும் அவர் எண்ணியவாறே எய்துவர்.

**வினைத்திட்பம் உடையவரை அறிதல்**

உருண்டு செல்லும் பெரிய தேரின்கண் உள்ள அச்சாணி உருவில் சிறியது. ஆயினும் தேர் ஓட அதுவே அடிப்படை. அதுபோன்று உருவில் எளியவராயினும் எடுத்த காரியத்தில் உறுதியுடன் இருந்து வினையை முடிப்பவர் இவ்வுலகில் உண்டு. ஆதலால் உருவத்தில் சிறுமை கண்டு எவரையும் இகழாது இருத்தல் வேண்டும்.

**வினை செய்யும் வகை**

பலகாலம் ஆராய்ந்து கலக்கமின்றி மனம் தெளிந்து தாம் செய்வதாகத் தேர்ந்தெடுத்துத் துணிந்த செயலை, பின்னர் மனச்சோர்வில்லாமலும் காலம் தாழ்த்தாமலும் செய்து முடிக்க வேண்டும்.

**வினை செய்யும் உறுதி**

ஒரு செயலைச் செய்ய முயலும் பொழுது முதலில் துன்பம் மிக வருமாயினும் அதனைக் கண்டு தளர்தல் கூடாது. அச்செயல் முடிவில் இன்பம் தரும் என்ற நம்பிக்கை வேண்டும். எனவே எச்செயலினையும் மனவுறுதியோடு செய்தல் வேண்டும்.

**வினைத்திட்பம் இல்லாதவரது இழிவு**

ஒரு செயலைச் செய்வதற்குரிய மனவுறுதி இல்லாதவருக்கு அம்மனவுறுதி அல்லாத பொருள், படை, நட்பு, அரண் முதலிய உறுதிபாடுகளெல்லாம் அமைந்தாலும் அவை பயனற்றவையே. மனத்திட்பம் இல்லாத அவரைக் கண்டு உலகிலுள்ள உயர்ந்தோர் மதியார்.

**25.(அ). பழமொழிநானூறு எடுத்துரைக்கும் செய்திகளை விவரி?**

**கல்வி :**குடிப்பதற்கு இனிமையான, உவற்பில்லாத நல்லநீர் கிணற்றைத்தவிர வேறு இடத்தில் இல்லையென்று நினைக்கும் கிணற்றுத்தவளை போல், தாமும் கருதாமல். நாள்முழுவதும் வெறுப்பின்றி இனிதாகப் படித்தலைக் காட்டிலும் அறிஞர்களிடம் பாடம் கேட்டல், ஊன்று கோல் போல் உதவுமாதலால் **“கற்றலைவிட கேட்டலே”** மேல் என்கிறார் முன்றுறைஅரையனார்.
**அறிவுடைமை :** மூங்கிலைப் போன்று நன்கு செழிப்புற்று வளர்ந்த, திரண்ட தோள்களையும், கூரிய வேல்போன்ற கண்களையும் உடைய பெண்ணே பரந்த வானிலே ஒளிவீசிக் கொண்டிருக்கின்ற கதிரவனைக் கையால் மறைக்க இயலுமோ? அதுபோல மிகுந்த அறிவும், ஆற்றலும் கொண்டவர்களை தகாத சொற்களையும், செயல்களையும், பழி பாவங்களையும் அவர்மேல் சுமத்தி , அவர்களின் புகழைக் கெடுக்க இயலுமா?. **இன்னா செய்யாமை :** நெஞ்சே தீங்கின் பயனை அடைவதற்கு நீண்ட நாட்கள் ஆகும் என்ற எண்ணத்தை உள்ளத்திலிருந்த அகற்றினால் அதன் பயனை உடனே அடைவாய். ஆகவே யாருக்கும், எவ்வுயிர்க்கும் தீங்கு செய்ய நினைப்பதைவிடுத்து நன்மை செய்யப்பழகுவாயெனில் அதுவே சாலச்சிறந்தது.இதில் **“ முற்பகல் செய்யின் பிற்பகல்விளையும் ”** என்பது பழமொழி.
**கீழோர் வாழ்க்கை :** மலையினின்றும் விழுகின்ற ஒளிவிளங்கும் அருவியை உடைய மலைநாடனே, புகழ்நிறைந்த குடியில் பிறந்த அறிவு நிறைந்தவர்கள் வறுமையில் வாடிநிற்க, நல்ல பண்பும், நன்னடத்தையும் இல்லா கீழோர் செல்வத்தால் பெருகிநிற்பது, மிதக்க வேண்டிய சுரக்காய் நீரில் மூழ்கி இருப்பதும், மூழ்கி இருக்கவேண்டிய அம்மி மிதந்து கொண்டிருப்பதற்கும் ஒப்பாகும் என்கிறார். இதில், **“சுரை ஆழ அம்மி மிதப்ப“ என்பது பழமொழி.**
முயற்சி : விருப்பத்துடன் செய்யப்படும் செயல் விரவில் நிறைவுபெறும் ஆதலால் அதன் பயனையும் உடனடியாகப் பெறமுடியும். ஆகவே முயற்சியே உரிய செல்வத்தைச் சேர்க்கும் என்கிறார். இதில் “முனிவில்லார் முன்னியது எய்தாமை யில்“ என்பது பழமொழி.

(ஆ). பழந்தமிழர் கட்டடக்கலை பற்றி டாக்டர்.ம. இராசமாணிக்கனார் தரும் கருத்துக்களை தொகுத்துரைக்க?

**கட்டுரை ஆசிரியர்:** மா. இராசமாணிக்கனார் **பிறப்பிடம்:** ஆந்திராவின் கர்னூல்.

**தகுதியும், சிறப்பும்:** கல்வெட்டு ஆய்வாளர், ஆய்வியல் அறிஞர். **நூல்கள்:**பல்லவர் வரலாறு, சைவசமய வளர்ச்சி, தமிழர் திருமணத்தில் தாலி, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, குழந்தை இலக்கியங்கள்.**பணி:** மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகத்தில் இணைப்பேராசிரியர்.

**கட்டுரையின் மையப்பொருள்:** **I.**சங்ககாலம்,**II.**இடைக்காலம், **III.** பிற்காலம் என்று பல்வேறு காலகட்டங்களில், தமிழகத்தில் கட்டடக்கலை வளர்ச்சி பெற்ற நிலைகளை இக்கட்டுரை விளக்குகிறது.

**சங்க காலம் (2,500-ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம்):சங்ககாலக் கட்டடங்கள்**

***கடவுளுக்கு உரியகோயில்கள்:*** **பெயர்:**கோயில், சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டங்கள். **சுடுமண்:** சுடப்பட்ட மண் – செங்கல்.**கோட்டம்:** கோயில். செங்கற்களால், உயரமாகக் கட்டப்பெற்ற கோயில்கள்.

**கட்டுவோர்:** நூலறி புலவர், (கட்டடக் கலை பற்றிய நூல்களைப் படித்தவர்).

**கோயில் அமைப்போர்:** சோதிடர், கட்டடக் கலைப் பணிக்கான வழிபாடுகளைச் செய்வோர், கட்டடக் கலைப் பொறியாளர், சிற்பக் கலைஞர்(ஆர்க்கிடெக்ட்)ஆகியோர்.

**கட்டுமானப் பொருள்கள்:** மண், செங்கல், மரம், உலோகம் ஆகியவை.**(எ.கா):**இரண்டாம் நூற்றாண்டில், சேரன் செங்குட்டுவன், கண்ணகிக்குக் கட்டிய **பத்தினிக் கோயில்.**

***அரசர்களுக்கு உரிய கோயில்கள்:*** கோ: அரசன், இல்: இருப்பிடம். (கோ+இல்= கோயில்)அரசர்களின் இருப்பிடங்களாகிய அரண்மனைகளும், **'கோயில்கள்'** எனப்பட்டன.

**அரண்மனையின் அமைப்பு:** மனை, மண்டபம், அந்தப்புரம், அரங்குகள், மதில், மதில் வாயில்கள், மதிலை ஒட்டி, மழைநீர் சேர்கின்ற இடம், பாதுகாப்பிற்காக அகழிகள்.

**அந்தப்புரம்:**வலிமையான தூண்களுடன், செஞ்சாந்து எனப்படுகின்ற இயற்கைச் சாயம் பூசப்பட்ட சுவர்கள், வண்ண ஓவியச் சுவர்கள்.

**மதில் வாயில்கள்:**1.யானைப்படை, கொடியுடன் வந்து செல்லக்கூடிய வகையில், பெரிய மலை போன்ற அகலமும், உயரமும் உடையவை.2. இரும்பினால் ஆன உறுதியான கதவுகள், மதிலின் வாயில்களில், நன்மையின் அடையாளமாக, யானைகளுடன் கூடிய இலட்சுமியின் திருஉருவம் அமைத்தல். சிவப்பு நிறம் பூசப்பெற்ற, பெரிய இரும்புக் கதவுகள்,

**மழைநீர் சேகரிக்கப்பெறுகின்ற இடம்:**அரண்மனையின் மொத்த மழைநீரும் சேகரமாகும் வகையில், மதில் வாயிலை ஒட்டி அமைந்த, மழை நீர்ச் சேகரிப்பு இடம். மீனின் வாயிலிருந்து, தண்ணீர் ஊற்றுவது போன்று, கலைநயத்துடன் அமைக்கப்பெற்ற சிற்பங்கள்.

**அகழிகள்:** அரண்மனையின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பெற்ற, நீர் நிறைந்த அகழிகள்.அதில், முதலைகள் வளர்க்கப்பெறும்.

**செல்வந்தர்களின் வாழிடங்கள்:**வணிகர்களின் குடியிருப்புகள், 'வளமனைகள்' , மாளிகைகள் எனப்பட்டன.நிலவின் குளிர்ச்சியினைத் தருகின்ற நிலா முற்றம்,காற்றோட்டமும், வெளிச்சமும் புக வசதியான, மிகப்பெரிய ஜன்னல்கள், பல அடுக்குகள் (Floors), அவற்றில் மாடங்கள். மாளிகையின் உச்சியில் கோபுரங்கள் போன்ற சிற்ப வேலைபாடுகள்.

**அரங்குகள்:**இசை அரங்குகள், நடன அரங்குகள், நாட்டிய அரங்குகள். அரங்குகளில், வண்ணத் திரைச் சீலைகளும், விளக்குகளும் முறையாகத் தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பெறுதல்.

(எ.கா): சிலப்பதிகாரம்: அரங்கேற்றுக் காதை.

**சாலைகள்:**நீளமாகவும், அகலமாகவும் கட்டமைக்கப்பெற்ற பெரிய சாலைகள்.

**இடைக்காலக் கட்டடக்கலை: பல்லவர்களும், சோழர்களும்**

***பல்லவர்கள்:*** **காலத்தால் அழியாத கல்கோயில்கள்,பல்லவர்களின் கட்டடக்கலையின் தனிச் சிறப்பாகும்.**கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதலாக, மகேந்திரவர்ம பல்லவனின் புதிய முயற்சி.

**பல்லவர்களின் கோயில்கள்:1. குடைவரைக் கோயில்கள்:** திருப்பரங்குன்றம் முருகன் கோயில், நாமக்கல் நரசிம்மர் கோயில், பள்ளிகொண்ட பெருமாள் கோயில்முதலானவை.

**பாறைச் சிற்பங்கள்:** பெரிய பாறைகளில் சிற்பங்களைச் செதுக்கி அமைக்கப்பெற்றவை.

மாமல்லபுரத்தின் பஞ்சபாண்டவர் இரதங்கள், தேர் வடிவில் அமைந்துள்ளன.

**கல்கோயில்கள்:** மாமல்லபுரத்தின் கடற்கரைக் கோயில், காஞ்சிபுரத்தின் வைகுந்தப் பெருமாள் கோயில்,உலகளந்த பெருமாள் கோயில் முதலானவை.

***சோழர்கள்:*****'விமானங்கள்' என்பவை, கருவறையின் மேலே அமைக்கப்பெறுவன. விமானங்களை மிகப்பெரியதாகவும், கோபுரங்களை, மிகச் சிறியதாகவும் அமைத்த சிறப்பு, சோழர்களுக்கு உண்டு.** இராசராச சோழனின் தஞ்சாவூரின் பெரிய கோயில்,அங்குள்ள நிழல் சாயாத விமானம், மிகப்பெரிய இலிங்கம், நந்தி. இராசேந்திர சோழனின் கங்கைகொண்ட சோழபுரம், சிங்கமுகக் கிணறு மற்றும் சிறப்பான சிற்பங்கள், கருவறையின் எதிரில், குளிர்ச்சிக்காக கூறையில் அமைந்துள்ள சந்திரகாந்தக் கல் அமைப்பு.தாரசுரம் சிவன் கோயில்: கோயிலின் நடுவில், தேர் போன்ற அமைப்பு, சிற்பத் தூண்கள்.மற்றும் திரிபுவன வீரேச்சுவரம் எனப்படுகின்ற சரபேஸ்வரர் திருக்கோயில் ஆகியவை.

**உலோகத்தால் கூரை அமைக்கப்பட்ட திருக்கோயில்கள்:**தில்லை எனப்படுகின்ற சிதம்பரத்தில், தங்கத்தால் கூரையும், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில், வெள்ளியால் கூரையும், குற்றாலத்தில், செம்பினால் கூரையும்அமைக்கப்பட்டுள்ளன.

**பிற்காலத்தில் கட்டடக் கலை வளர்ச்சி:விஜயநகரப் பேரரசர்கள்,நாயக்க மன்னர்கள்**

***விஜயநகரப் பேரரசர்கள்:*****கருவறையின் விமானங்களைச் சிறியதாகவும், கோபுரங்களைப் பெரியதாகவும் அமைத்தது, இவர்களது கட்டடக்கலையின் தனிச் சிறப்பாகும்.**7, 9, 11 எனப் பல

அடுக்குகளில் அமைந்த உயர்ந்த கோபுரங்கள். திருவண்ணாமலை, மதுரை, இராமேஸ்வரம் போன்ற கோயில்களின் உயரமானகோபுரங்கள்.அவற்றில், கதைகளை விளக்குகின்ற சுதைச் சிற்பங்கள்.

***நாயக்கர்கள்:*** **தூண் சிற்பங்களுடன் கூடிய, மண்டபங்கள்:** இராமேஸ்வரம் கோயிலின் ஆயிரங்கால் மண்டபம், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் புதுமண்டபம், திருமலை நாயக்கர் அரண்மனை. பேரூர், தூண் சிற்பங்கள், கல் சங்கிலி, சுழலும் தாமரை, கனக சபையின் இருபுறமும் அமைந்த, ஒரே கல்லாலான தூண் சிற்பங்கள் ஆகியவை.

***தமிழகத்தில் அரண்மனைகள்:*** **சோழர்களின் அரண்மனைகள்:** தஞ்சாவூர், திருவாரூர், பழையாறை, கங்கைகொண்ட சோழபுரம்.**பாண்டியர்கள்:** மதுரை, **பல்லவர்கள்:**காஞ்சிபுரம் முதலான இடங்களில் இருந்துள்ளன. ஆனால், தற்போது, அவை கிடைக்கவில்லை. மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரின் அரண்மனையும், தஞ்சாவூரின் சரபோஜி மன்னர்களின் அரண்மனையும் தற்போது தமிழகத்தில் அரண்மனைகளின் அமைப்பை அறியக் கிடைக்கின்ற சான்றுகளாகும்.

**26.(அ). "மணற்கேணி" என்ற தலைப்பில் வரும் கட்டுரை உணர்த்தும் செய்தியை எழுதுக?**

ஆசிரியர் - நெ.து. சுந்தரவடிவேலு கல்வித் தந்தை என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படுபவராவர்.பிறப்பு -12.10.1912.காஞ்சிபுரம் மாவட்டம்- நெய்யாற்றுப்பாக்கம். சிறப்புக்கள் -தமிழ்நாடு நாளிதழில் துணை ஆசிரியர், அரசு ஊழியர், ஊராட்சி உதவி அலுவலர்,பள்ளிக்கல்வி இளந்துணை ஆய்வாளர், மாவட்டக்கல்வி ஆலோசகர், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்.

புனலூர் நல்லானின் நன்முயற்சி – புனல்நாடு ஏரி, குளங்கள், ஆறுகள, மடுக்கள் எப்போதும் நீர் இருக்கும். ஆத்தகைய நாடு வரண்டு போகும் நிலை – நல்லான் முயற்சி – நல்லானும் நாயகமும் - மணற்கேணியின் சிறப்பு –கற்கக் கற்க அறிவு ஊறும் -உயர்விற்கு அடிப்படை அறிவே.

**(ஆ). கருத்தரங்கப் பங்கேற்பிற்கான அனுமதி வேண்டி துறைத்தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக?**

இடம் : ஈச்சனாரி
நாள் : 8.9.2017

அனுப்புநர்

அ. அறிவழகன்
வணிகவியல் முதலாம் ஆண்டு,
கற்பகம் பல்கலைக்கழகம்,
ஈச்சநாரி.

பெறுநர்

துறைத்தலைவர் அவர்கள்,
வணிகவியல் துறை
கற்பகம் பல்கலைக்கழகம்,
ஈச்சநாரி.

மதிப்பிற்குரியீர்,

**பொருள்: கருத்தரங்கப் பங்கேற்ப்பிற்கு அனுமதி வேண்டுதல் தொடர்பாக.**

வணக்கம். நான் கற்பகம் பல்கலைக்கழகத்தில் இளங்கலை வணிகவியல் முதலாம் ஆண்டு படித்து வருகிறேன்.வருகின்ற 8.9.2017 அன்று இரத்தினம் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற உள்ள பன்னாட்டுக் கருத்தரங்கிரல் பங்குபெற அனுமதி அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இக்கடிதத்துடன் கருத்தரங்க அழைப்பு அறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

நன்றி!

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள

**கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்** 17LAU101

*(For Arts Students)*

**கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்**

**தமிழ்த்துறை**

**முதலாம் பருவம்: மூன்றாம் இடைத்தேர்வு** **நாள்: 24-09-2017**

**நேரம்: 2 மணி** **மொத்த மதிப்பெண்கள்:50**

**பகுதி: அ: ஒரு மதிப்பெண் வினாக்கள்** **(20X1=20)**

1. 'அழகின் சிரிப்பு' கவிதைத்தொகுப்பின் ஆசிரியர் யார்?.
   (அ). பாரதியார் **(ஆ). பாரதிதாசன்** (இ). வைரமுத்து (ஈ). அப்துல்ரகுமான்
2. 'காலவழு' கவிதையின் ஆசிரியர் யார்?.
   **(அ). அப்துல்ரகுமான்** (ஆ). வைரமுத்து (இ). பாரதிதாசன் (ஈ). பாரதியார்
3. பின்வருவனவற்றுள், கவிஞர் தாமரையின் கவிதையினைச் சுட்டுக.
   **(அ). 'மழைக்குறிப்பு'** (ஆ). 'அழகின் சிரிப்பு' (இ). 'காலவழு' (ஈ). 'வாழ்வுப் பாடல்'
4. பின்வருவனவற்றுள், கவிஞர் தருமுசிவராம் அவர்களின் கவிதையினைச் சுட்டுக.
   (அ). 'காலவழு' **(ஆ). 'வாழ்வுப் பாடல்'** (இ). 'மழைக்குறிப்பு' (ஈ). 'அழகின் சிரிப்பு'
5. 'புதையுண்ட வாழ்க்கை' கவிதையின் ஆசிரியர் யார்?.
   (அ). அப்துல்ரகுமான் (ஆ). வைரமுத்து (இ). பாரதிதாசன் **(ஈ). சுகந்தி சுப்பிரமணியம்**
6. 'பெத்தவளே ஒம்பெரும ஒத்தவரி சொல்லலையே' என்று வருந்திப் பாடியவர் யார்?.
   (அ). பாரதியார் (ஆ). பாரதிதாசன் **(இ). வைரமுத்து** ஈ) அப்துல்ரகுமான்
7. 'அன்னை தந்தைக்குச் செய்யும் அருங்கைம்மாறு உளதோ?' என்று பாடியவர் யார்?.
   (அ). பாரதியார் (ஆ). பெருவாயின் முள்ளியார் (இ). அவ்வையார் **( ஈ). வேதநாயகனார்**
8. 'பெருமை முயற்சி தரும்' என்று வலியுறுத்துகின்ற நீதிநூல் எது?.
   (அ). நீதிநூல் **(ஆ). திருக்குறள்** (இ). கொன்றை வேந்தன் (ஈ). ஆசாரக்கோவை
9. 'தாளாண்மை' என்பதன் பொருளினைச் சுட்டுக.
   (அ). அறிவு (ஆ). செல்வம் (இ). கல்வி **(ஈ). முயற்சி**
10. 'நிகரில் ஞானச் சோதிநூல்' எது?.
    **(அ). நீதிநூல்** (ஆ). திருக்குறள் (இ). கொன்றை வேந்தன் (ஈ). ஆசாரக்கோவை
11. பெருவாயின் முள்ளியார் எழுதிய நூலினைச் சுட்டுக.
    (அ). கொன்றை வேந்தன் **(ஆ). ஆசாரக்கோவை** (இ). நீதிநூல் (ஈ). திருக்குறள்
12. ஒழுக்கங்களை வரிசைப்படக் கூறுகின்ற காரணத்தால் பெயர்பெற்ற இலக்கியம் எது?.
    **(அ). ஆசாரக்கோவை** (ஆ). கொன்றை வேந்தன் (இ). திருக்குறள் (ஈ). நீதிநூல்
13. 'பூபால கோபாலன்' யார்?.
    (அ). செங்குட்டுவன் (ஆ). குலோத்துங்கன் **(இ). இரண்டாம் இராசராசன்** (ஈ). விக்கிரமன்

14. கடப்ப முதுமுரசத்தை வென்றவர் யார்?.

(அ). சேரர் **(ஆ). சோழர்** (இ). பாண்டியர் (ஈ). கொங்கர்

15. குறத்திக்கு இளையவளாகிய செல்லிக்கு உரிய மலை எது?.

(அ). குற்றாலமலை **(ஆ). கொல்லிமலை** (இ). பழநிமலை (ஈ). வேள்விமலை

16. 'என்னயினாப் புலவர்' இயற்றிய சிற்றிலக்கியம் எது?.

**(அ).முக்கூடற்பள்ளு** (ஆ). மூவருலா (இ). குற்றாலக்குறவஞ்சி (ஈ). கலிங்கத்துப்பரணி

17. 'வாழ்க்கை' என்னும் தலைப்பிலான உரைநடைப் பகுதியின் ஆசிரியர் யார்?.

(அ). நல்லான் **(ஆ). இளவழகனார்** (இ). சுந்தரவடிவேலனார் (ஈ). நாயகனார்

18. 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்று வலியுறுத்துகின்ற இலக்கியம் எது?.

**(அ). புறநானூறு** (ஆ). கலித்தொகை (இ). நற்றிணை (ஈ). குறுந்தொகை

19. 'நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பவர்கள் யார்?.

(அ). செல்வர் **(ஆ). நாகரிகர்** (இ). கல்வியாளர் (ஈ). அறிவுடையோர்

20. 'பிறன்கடை செலாஅச் செல்வம்' என்று வலியுறுத்துகின்ற இலக்கியம் எது?.

**(அ). குறுந்தொகை** (ஆ). பதிற்றுப்பத்து (இ). பரிபாடல் (ஈ). புறநானூறு

## பகுதி: ஆ: இரு மதிப்பெண் வினாக்கள் (3X2=6)

**21. 'புதையுண்ட வாழ்க்கை': கவிதையின் மையத்தைச் சுருக்கமாகச் சுட்டுக.**

காலந்தோறும் ஆணாதிக்கச் சமுதாயத்தால் அடிமைப்படுகின்ற பெண்ணினத்தின் சுதந்திர வாழ்க்கையானது, அடையாளச் சுவடுகள்அற்ற, புதைந்துபோன வாழ்க்கையாக உள்ள அவலத்தைக் கவிஞர் சுட்டியுள்ளார்.

**22. 'தானக்களிறு படிந்திடக் கொலை ஏனக்களிறு மடிந்திட ' – இடம்சுட்டிப் பொருள் கூறுக?.**

இடம்: என்னயினாப் புலவரின் முக்கூடற்பள்ளு, பெருகிய மழை வெள்ளமானது, வலிமையான யானைகளை உடன் கொண்டு சென்றது. அத்துடன், அப்பெருவெள்ளத்தில் சிக்கி, வலிமையான காட்டுப் பன்றிகளும் இறக்கும்படியாக மழை வெள்ளம் பெருக்கெடுத்த சூழலை, இத்தொடர் சுட்டுகிறது.

**23. ஆசார வித்துகளைக் குறிப்பிடுக.**

நன்றிமறவாமை, பொறுமை காத்தல், பயனுள்ள நற்சொற்களை மட்டுமே பேசுதல், அனைத்து உயிர்க்கும் நன்மையே செய்தல், கற்ற கல்விக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், ஒத்து வாழ்தல், பகுத்தறிவுடையவராகச் சிந்தித்துச் செயல்படுதல், நல்லவரோடு மட்டுமே நட்பு கொள்ளுதல் ஆகியவையே ஆசார வித்துகள்.

**பகுதி: இ: பெரு வினாக்கள் (4X6=24)**

**24. 'காலவழு' கவிதையின் தன்முன்னேற்றச் சிந்தனைகளை விவரி.**

வாழ்க்கை என்பது, எதிர்காலத்தை நோக்கிய பயணம் என நேர்மறையாகச் சிந்தித்தல், பழம்பெருமையால் மட்டுமே வாழ இயலாது என்பதை உணர்தல், நிகழ்காலச் செயல்பாடுகளை, வளமான எதிர்காலத்திற்கான வாய்ப்பாக மாற்றிக்கொள்ள உறுதி கொண்டிருத்தல்.

**25. 'ஆள்வினைஉடைமையும், ஆளுமைத்திறன்மேம்பாடும்': கட்டுரை வரைக.**

**ஆள்வினைஉடைமை:** இது, திருக்குறளின், 62-ஆவது அதிகாரமாகும். **ஆள்வினைஉடைமை** என்பதை, வினையில் ஆளுமைஉடைமை எனப் பொருள்கொள்ளலாம். **வினை: செயல், ஆளுமைஉடைமை என்றால், வெற்றிபெறுதல்: அதாவது, எந்தவொரு செயலிலும் வெற்றிபெறுவதற்குரிய வகையில், தொடர்ந்து உழைக்கவேண்டியதன் இன்றியமையாமையினை,** இவ்அதிகாரம் விளக்குகிறது.

1. **உழைப்பின் இன்றியமையாமை: (9. தெய்வத்தான்ஆகாதுஎனினும்...):** தெய்வத்தின் அருள் பெற்றுத்தராத உயர்வையும், உண்மையான உழைப்பு, உறுதியாகப் பெற்றுத்தரும்.

**2. உழைப்பேஉயர்வு: (6. முயற்சி திருவினை ஆக்கும்...)** உண்மையான உழைப்பே உயர்வினைத் தரும்: உழைப்பின்மை, தாழ்வினையே தரும்.

**3. உழைப்பவரின் உறுதி: (10. ஊழையும் உப்பக்கம் காண்பர்...):** ஓயாமல், தளர்வின்றி உழைப்பவர்கள், வலிமையான, விதியையும் வெல்வார்கள்.

**4. உழைப்பவரின் அணுகுமுறை: (அ.தொடர்ந்தமுயற்சி: (1. அருமைஉடைத்தென்று அசாஅவாமை...):**

எந்தவொரு செயலும், கடினமானது என்று, சோர்வடையாதீர்கள்: தொடர்ந்த உழைப்பு, வெற்றியாகிய பெருமையினை, உறுதியாகப் பெற்றுத்தரும்.

**(ஆ). நம்மை நம்புதல்: (2. வினைக்கண் வினைகெடல்):** தாம், முழுமையான வலுவுடையவர்கள் என்று நம்பாதவர்கள், எந்தஒருசெயலையும், இடையிலேயே கைவிட்டுவிடுகின்றனர். அவர்களை, இவ்வுலகம், 'தோல்வியடைந்தவர்கள்'என ஒதுக்கித்தள்ளும்.

**(இ). திறன்மேம்பாடு: (8. பொறியின்மையார்க்கும்)** திறமை இல்லை என்பது குற்றமன்று: இல்லாத திறமையினை வளர்த்துக்கொள்வதற்கான முயற்சியும், உழைப்பும் இல்லாமையே பெருங்குற்றமாகும்.

**5. உழைப்பாளிகளின்உயர்வு: (5. இன்பம்விழையான்): (அ).சமுதாயத்தூண்கள்:** உழைப்பாளிகள், சமுதாயத்தின் தூண் போன்றவர்கள்: அவர்கள், எந்தவொரு செயலையும் பொதுநலத்துக்காகவே செய்வர்: எந்தவொரு செயலிலும், தமது நலத்தினைப் பற்றி அவர்கள் சிந்திக்கமாட்டார்கள்.

**(ஆ). உழைப்பவரே உயந்தோர்: (3. தாளாண்மை இல்லாதான்): (தாளாண்மை: உழைப்பு), வேளாண்மை: பிறருக்குஉதவுதல்).** உண்மையான உழைப்பினாலேயே, பிறருக்கு உதவுதல் என்கின்ற, உயர்நிலையினை அடையஇயலும்.

**6. உழைக்காதவரின் சிறுமை: (அ.கோழையின் கையில் வாள்: 4. தாளாண்மை இல்லாதான்)**: உழைப்பில்லாதவர்கள், பிறருக்குத் தாங்கள் உதவுவதாகப் பொய் மட்டுமே கூறஇயலும். அவ்வாறு அவர்கள் கூறுவது, கோழையின் கையில் உள்ளவாள் போலப் பயனில்லாததாகும்.

**(ஆ). மூதேவியேகுடியிருப்பாள்: (7. மடியுளாள்மாமுகடி)**:சோம்பேறிகளுடன், மூதேவியே குடியிருப்பாள்: ஆனால், வெற்றித்திருமகள், உழைப்பாளிகளைத் தொழுது, என்றும் அவர்களின் வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் துணைநிற்பாள்.

**26. 'மூவருலா' செய்திகளைத் தொகுத்துரைக்க.**

இரண்டாம் இராசராசனின் வீரமும் வெற்றியும்: வாள், முரசு, குடை, கொடி, மகுடத்தின் சிறப்பு, சோழர்களின் ஆத்தி மலர் மாலை, உலா அணிவகுப்பு.

**27. 'வாழ்க்கை' : உரைநடைப்பகுதி சுட்டுகின்ற நன்னெறிகளை விவரி.**

பண்டைத் தமிழரின் இல்வாழ்க்கை மாண்பு, தொழில் மாண்பு, ஒற்றுமை வாழ்க்கை, நம்பிக்கை அடிப்படையிலான நாகரிக வாழ்க்கை, கல்வியைப் போற்றிய மாண்பு, தன்முயற்சி உடைய தன்மான வாழ்க்கை, இரவாத மாண்பு, உயிர்நேயமாக மேம்பட்ட மனிதநேயம், அன்பும் வீரமும் இரு கண்களெனக் கொண்ட உயர்வு, தம்மைத் தாமே திருத்திக்கொண்டு உயர்ந்து வாழ்ந்த சிறப்பு.

Reg. No................................

[17LAU101]

# KARPAGAM ACADEMY OF HIGHER EDUCATION

COIMBATORE – 641 021
(For the candidates admitted from 2017 onwards)

**B.Com, B.Com (CA), B.Com (BPS), B.Com (PA), BBA,**
**DEGREE EXAMINATION, NOVEMBER 2017**

First Semester

தமிழ்த்தாள் - I

Time: 3 hours Maximum : 60 marks

**PART – A (20 x 1 = 20 Marks) (30 Minutes)**
**Answer ALL the Questions**

1. குயில் பாட்டின் தத்துவ மேதை யார்?.
(அ)பாரதியார் (ஆ)பாரதிதாசன் (இ)அப்துல் ரகுமான் (ஈ)தருமுசிவராம்
2. 'புரட்சிக்கவி' என்ற நூலின் ஆசிரியர் யார்?.
(அ)அப்துல் ரகுமான் (ஆ)தருமு சிவராம் (இ)பாரதியார் (ஈ)பாரதிதாசன்
3. கவிஞர் சிற்பி அவர்களால் 'கேரளத்து ஞாயிறு' எனப் போற்றப்பெறுபவர் யார்?.
(அ)ஆதிசங்கரர் (ஆ)பாரதிதாசன் (இ)ஸ்ரீ நாராயண குரு
(ஈ)குமாரன் ஆசான்
4. 'வாழ்வின் பூரணிப்பில் மரணமில்லை' எனத் தத்துவம் பாடிய கவிஞர் யார்?.
(அ)பாரதியார் (ஆ)பாரதிதாசன் (இ)அப்துல் ரகுமான் (ஈ)தருமு சிவராம்
5. 'விரல் மீட்டிய மழை' -என்னும் கவிதை எதன் இயல்பைப் புலப்படுத்துகின்றது?
(அ) விடியல் நேரம் (ஆ) நள்ளிரவு (இ) மாலை நேரம் (ஈ) நண்பகல் நேரம்
6. 'பீரம்' என்னும் சொல்லின் பொருள் யாது?.
(அ)கல்வி (ஆ)உணவு (இ)தாய்ப்பால் (ஈ)நன்மை



7. நைபவர் எனினும் எங்ஙனம் உரைக்கக் கூடாது?
(அ).நொய்ய உரைத்தல் (ஆ).அன்புடன் உரைத்தல் (இ).அறிவுடன் உரைத்தல்
(ஈ). ஆக்கத்துடன் உரைத்தல்
8. முதல் உரைநடைப் புதினத்தை எழுதியவர் யார்?.
(அ)அவ்வையார் (ஆ)பெருவாயின் முள்ளியார் (இ)முன்றுறை அரையனார்
(ஈ)வேதநாயகம் பிள்ளை
9. 'ஊழையும் உப்பக்கம் காண்பவர்' யார்?.
(அ)கல்வியாளர் (ஆ)செல்வந்தர் (இ)அயராது உழைப்போர்
(ஈ)அறிவில் சிறந்தோர்
10. முன்றுறையரையனார் எழுதிய நூல் எது?.
(அ)ஆசாரக் கோவை (ஆ)கொன்றை வேந்தன் (இ)நீதி நூல்
(ஈ)பழமொழி நானூறு
11. பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்கள் எத்தனை?
(அ) 3 (ஆ) 12 (இ) 10 (ஈ) 11
12. குற்றாலக் குறவஞ்சி எந்நிலத்தின் வளத்தை உரைக்கும் நூல்?
(அ)வயல் (ஆ)மலை (இ)காடு (ஈ)பாலை
13. 'கிம்புரி' என்பதன் பொருள் யாது?.
(அ)யானை (ஆ)ஆடு (இ)நிலவு (ஈ)குரங்கு
14. உழவர்களின் வாழ்வியலைச் சுட்டுகின்ற சிற்றிலக்கியம் எது?.
(அ) கலிங்கத்துப்பரணி (ஆ).மூவருலா (இ)முக்கூடற்பள்ளு
(ஈ)குற்றாலக் குறவஞ்சி
15. 'விருந்தினரும் வறியவரும் நெருங்கியுண்ண மேன்மேலும் முகமலரும்' என்ற தொடர் அமைந்த இலக்கியம் எது?.
(அ)மூவருலா (ஆ)குற்றாலக் குறவஞ்சி (இ)முக்கூடற்பள்ளு
(ஈ)கலிங்கத்துப்பரணி
16. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியின் தமிழ்ப் பெயர் யாது?.
(அ)சந்திரன் (ஆ)தமிழன் (இ)பரிதிமாற்கலைஞர் (ஈ)இந்திரன்
17. 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' என்ற நூலினை எழுதியவர் யார்?
(அ)வரதராசனார் (ஆ)பாரதியார் (இ)இராசமாணிக்கனார் ஈ)இளவழகனார்

18. 'எவ்வழி நல்லவ ராடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' எனக் கூறுகின்ற இலக்கியம் எது?.

(அ)குறுந்தொகை (ஆ)புறநானூறு (இ).மணிமேகலை (ஈ)நற்றிணை

19. 'கற்றனைத்து ஊறும் அறிவு' என வலியுறுத்துகின்ற உரைநடைப் பகுதியின் தலைப்பு எது?.

(அ).வாழ்க்கை (ஆ). உயர்தனிச் செம்மொழி (இ). மணற்கேணி

(ஈ).ஆளுமைத்திறன் அறிவோம்

20. மனப்பான்மை எத்தனை வகைப்படும்?

(அ). 6 (ஆ). 12 (இ). 8 (ஈ). 2

## PART B (5 x 2 = 10 Marks) (2 ½ Hours)
## Answer ALL the Questions

21. பாரதியார் எழுதிய படைப்புகளில் ஏதேனும் ஒன்றினைக் குறிப்பிடுக.
22. கொன்றை வேந்தனின் ஆசிரியர் யார்?
23. மூவருலா பாடியவர் யார்?
24. கட்டடக்கலை என்ற கட்டுரையை எழுதியவர் யார்?
25. மரபுவழக்களை நீக்குக i. கிளி கத்தும் ii. மயில்கூவும்

## PART C (5 x 6 = 30 Marks)
## Answer ALL the Questions

26. அ. வினை மரபுச் சொற்களை எழுதுக.
(அல்லது)
ஆ. பெயர் மரபுச் சொற்களை எழுதுக.

27. அ. 'ஆளுமைத் திறன் அறிவோம்' பற்றி எழுதுக.
(அல்லது)
ஆ. இளவழனாரின் வாழ்க்கை பற்றி எழுதுக.

28. அ. கலிச்சக்கரவர்த்தி செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியை விளக்குக.
(அல்லது)
ஆ. முக்கூடற்பள்ளு பற்றி எழுதுக.

29. அ. பழமொழி நானூறு பற்றி எழுதுக.
(அல்லது)
ஆ. நீதி நூலின் கருத்தை விளக்குக.



30. அ. வாழ்க்கையின் படிமம் எது? விளக்குக.
(அல்லது)
ஆ. பெண்ணியம் பற்றி எழுதுக.

**கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம் 16LAU101**

**கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்**

**தமிழ்த்துறை**

***முதல் பருவத்தேர்வு: பகுதி-I, தமிழ்த்தாள்:I***

***கலையியல் பட்ட வகுப்புகளுக்குரியது***

*நேரம்: 3 மணி* *மொத்த மதிப்பெண்கள்: 60*

*பகுதி: அ*

*சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக:* *(20X1=20)*

**1. தம்மை, 'ஷெல்லிதாசன்' என்று அழைத்து மகிழ்ந்த கவிஞர் யார்?.**

**(அ). பாரதியார்** (ஆ). பாரதிதாசன் (இ). அப்துல் ரகுமான் (ஈ). தருமு சிவராம்

**2. 'அழகின் சிரிப்பு' கவிதைத் தொகுதியின் ஆசிரியர் யார்?.**

(அ). அப்துல் ரகுமான் (ஆ). தருமு சிவராம் (இ). பாரதியார் **(ஈ). பாரதிதாசன்**

**3. கவிஞர் சிற்பி அவர்களால், 'கேரளத்து ஞாயிறு' எனப் போற்றப்பெறுபவர் யார்?.**

(அ). ஆதிசங்கரர் (ஆ). பாரதிதாசன் **(இ). ஸ்ரீ நாராயண குரு** (ஈ). குமாரன் ஆசான்

**4. 'வாழ்வை நேசி' எனத் தத்துவம் பாடிய கவிஞர் யார்?.**

(அ). பாரதியார் (ஆ). பாரதிதாசன் (இ). அப்துல் ரகுமான் **(ஈ). தருமு சிவராம்**

**5. 'மழைக் குறிப்பு' என்னும் தலைப்பிலான கவிதையின் மையப்பொருள் யாது?.**

(அ). கல்வி (ஆ). இயற்கை (இ). பெண்ணியம் **(ஈ). மனிதநேயம்**

**6. 'ஆசாரம்' என்னும் சொல்லின் பொருள் யாது?.**

(அ). கல்வி (ஆ). பண்பு **(இ). ஒழுக்கம்** (ஈ). கடமை

**7. 'ஏவா மக்கள்' எனப்பெறுவோர் யார்?.**

(அ). அறிவில் சிறந்தோர் (ஆ). செல்வந்தர் (இ). வீரர் **(ஈ). பெற்றோரின் குறிப்பறிந்து நடப்போர்**

**8. நீதிநூலின் ஆசிரியர் யார்?.**

(அ). அவ்வையார் (ஆ). பெருவாயின் முள்ளியார் (இ). முன்றுறைஅரையனார் **(ஈ). வேதநாயகம்**

**9. 'எண்ணிய எண்ணியாங்கு எய்துபவர்' யார்?.**

(அ). கல்வியாளர் (ஆ). செல்வந்தர் **(இ). மன வலிமை உடையோர்** (ஈ). அறிவில் சிறந்தோர்

**10. 'கற்றலின் கேட்டலே நன்று' என வலியுறுத்துகின்ற இலக்கியம் எது?.**

(அ). ஆசாரக் கோவை (ஆ). கொன்றை வேந்தன் (இ). நீதி நூல் **(ஈ). பழமொழி நானூறு**

**11. 'அம்புலி ' என்பதன் பொருள் யாது?.**

(அ). பந்து (ஆ). கடல் **(இ). நிலவு** (ஈ). காற்று

**12. 'மூவருலா' என்னும் நூலின் ஆசிரியர் யார்?.**

(அ). குமரகுருபரர் **(ஆ). ஒட்டக்கூத்தர்** (இ). திரிகூடராசப்பர் (ஈ). என்னயினாப் புலவர்

**13. 'கிம்புரி' என்பதன் பொருள் யாது?.**

**(அ). யானை** (ஆ). ஆடு (இ). நிலவு (ஈ). குரங்கு

**14. பாடப்பகுதியில், நில வகைகளைச் சுட்டுகின்ற சிற்றிலக்கியம் எது?.**

(அ). கலிங்கத்துப்பரணி (ஆ). மூவருலா **(இ). முக்கூடற்பள்ளு** (ஈ). குற்றாலக் குறவஞ்சி

**15. 'பதும முகம் மலர்ந்தாரைப் பார்மின்! பார்மின்!' என்ற தொடர் அமைந்த இலக்கியம் எது?.**

(அ). மூவருலா (ஆ). குற்றாலக் குறவஞ்சி (இ). முக்கூடற்பள்ளு **(ஈ). கலிங்கத்துப்பரணி**

**16. 'உயர்தனிச் செம்மொழி' என்றமைந்த கட்டுரையின் ஆசிரியர் யார்?.**

**(அ). பரிதிமாற் கலைஞர்** (ஆ). இராசமாணிக்கனார் (இ). இளவழகனார் (ஈ). சுந்தரவடிவேலு

**17. 'பத்தினிக் கோயில்' எழுப்பப்பெற்ற காலம் யாது?.**

(அ).4–ஆம் நூற்றாண்டு **(ஆ).2–ஆம் நூற்றாண்டு** (இ).5 –ஆம் நூற்றாண்டு (ஈ).6 –ஆம் நூற்றாண்டு

**18. 'நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்' எனக் கூறுகின்ற இலக்கியம் எது?.**

(அ). குறுந்தொகை (ஆ). புறநானூறு (இ).மணிமேகலை **(ஈ). நற்றிணை**

**19. 'கற்றனைத்து ஊறும் அறிவு' என வலியுறுத்துகின்ற உரைநடைப் பகுதியின் தலைப்பு எது?.**

(அ). வாழ்க்கை (ஆ). உயர்தனிச் செம்மொழி **(இ). மணற்கேணி** (ஈ). ஆளுமைத்திறன் அறிவோம்

**20. வெற்றிக்கான, நேர்மறை மனப்பான்மைக்குத் துணையாவது ______________.**

(அ). கல்வி (ஆ). அறிவு (இ). செல்வம் **(ஈ). தலைமைப் பண்புகள்**

***பகுதி – ஆ***

***அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளி:*** ***(5X2=10)***

21. 'மனமே வாழ்வின் உயிர் நிலையாம்' – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக..

22. 'உருவுகண்டு எள்ளாமை வேண்டும்' என்பதற்குத் திருக்குறள் வழியாக விளக்கம் தருக.

23. ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களைப் பட்டியலிடுக.

24. பல்லவர் காலக் கட்டடக் கலைச் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுக.

25. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' – பழமொழிக்கான விளக்கம் தருக.

*பெருவினாக்கள்:* ***பகுதி – இ***

***அனைத்து வினாக்களுக்கும் விடையளி:*** ***(5X6=30)***

26.(அ). 'மண்படு கல்வி' எனப் பாரதியார் சாடுவதற்குரிய காரணங்களைப் பட்டியலிடுக.

**(அல்லது)**

(ஆ). பாடப்பகுதியில் அமைந்துள்ள பெண்ணியக் கவிதைச் சிந்தனைகளைக் குறிப்பிடுக.

27.(அ). மக்கள் பண்பின் இன்றியமையாமையைத் திருக்குறளின் வழி விளக்குக. **(அல்லது)**

(ஆ). கொன்றைவேந்தன் வலியுறுத்துகின்ற நன்னெறிகளை விவரி.

28.(அ). இராசராசனின் சிறப்புகளை, மூவருலா வழியே விவரி. **(அல்லது)**

(ஆ). போர்க்களக் காட்சிகளைக் கலிங்கத்துப்பரணி வழியே சுட்டுக.

29.(அ). வாழ்க்கை நன்னெறிகளை, பாடப்பகுதி கட்டுரை வழியே தொகுத்துரைக்க. **(அல்லது)**

(ஆ). 'வெற்றிக்கு அடிப்படை, ஆளுமைத் திறன்களே' என்பதை நிறுவுக.

30.(அ). நாளிதழ் விளம்பர அடிப்படையில், வேலை வேண்டி விண்ணப்பம் எழுதுக. **(அல்லது)**

(ஆ). கருத்தரங்கில் பங்கேற்க அனுமதிவேண்டி, துறைத்தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக.

# கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

## கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

## முதல் பருவத்தேர்வு: பகுதி-I, தமிழ்த்தாள்:I

### வினா வங்கி

### பகுதி: அ

சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. தம்மை, 'ஷெல்லிதாசன்' என்று அழைத்து மகிழ்ந்த கவிஞர் யார்?.

(அ). பாரதியார் (ஆ). பாரதிதாசன் (இ). அப்துல் ரகுமான் (ஈ). தருமு சிவராம்

2. 'அழகின் சிரிப்பு' கவிதைத் தொகுதியின் ஆசிரியர் யார்?.

(அ). அப்துல் ரகுமான் (ஆ). தருமு சிவராம் (இ). பாரதியார் (ஈ). பாரதிதாசன்

3. கவிஞர் சிற்பி அவர்களால், 'கேரளத்து ஞாயிறு' எனப் போற்றப்பெறுபவர் யார்?.

(அ). ஆதிசங்கரர் (ஆ). பாரதிதாசன் (இ). ஸ்ரீ நாராயண குரு (ஈ). குமாரன் ஆசான்

4. 'வாழ்வை நேசி' எனத் தத்துவம் பாடிய கவிஞர் யார்?.

(அ). பாரதியார் (ஆ). பாரதிதாசன் (இ). அப்துல் ரகுமான் (ஈ). தருமு சிவராம்

5. 'மழைக் குறிப்பு' என்னும் தலைப்பிலான கவிதையின் மையப்பொருள் யாது?.

(அ). கல்வி (ஆ). இயற்கை (இ). பெண்ணியம் (ஈ). மனிதநேயம்

6. 'ஆசாரம்' என்னும் சொல்லின் பொருள் யாது?.

(அ). கல்வி (ஆ). பண்பு (இ). ஒழுக்கம் (ஈ). கடமை

7. 'ஏவா மக்கள்' எனப்பெறுவோர் யார்?.

(அ). அறிவில் சிறந்தோர் (ஆ). செல்வந்தர் (இ). வீரர்

(ஈ). பெற்றோரின் குறிப்பறிந்து நடப்போர்

8. நீதிநூலின் ஆசிரியர் யார்?.

(அ). அவ்வையார் (ஆ). பெருவாயின் முள்ளியார் (இ). முன்றுறை அரையனார்

(ஈ). வேதநாயகம் பிள்ளை

9. 'எண்ணிய எண்ணியாங்கு எய்துபவர்' யார்?.

(அ). கல்வியாளர் (ஆ). செல்வந்தர் (இ). மன வலிமை உடையோர் (ஈ). அறிவில் சிறந்தோர்

10. 'கற்றலின் கேட்டலே நன்று' என வலியுறுத்துகின்ற இலக்கியம் எது?.

(அ). ஆசாரக் கோவை (ஆ). கொன்றை வேந்தன் (இ). நீதி நூல் (ஈ). பழமொழி நானூறு

11. 'அம்புலி ' என்பதன் பொருள் யாது?.

(அ). பந்து (ஆ). கடல் (இ). நிலவு (ஈ). காற்று

12. ‘மூவருலா’ என்னும் நூலின் ஆசிரியர் யார்?.

(அ). குமரகுருபரர் (ஆ). ஒட்டக்கூத்தர் (இ). திரிகூடராசப்பக் கவிராயர் (ஈ). என்னயினாப் புலவர்

13. ‘கிம்புரி’ என்பதன் பொருள் யாது?.

(அ). யானை (ஆ). ஆடு (இ). நிலவு (ஈ). குரங்கு

14. பாடப்பகுதியில், நில வகைகளைச் சுட்டுகின்ற சிற்றிலக்கியம் எது?.

(அ). கலிங்கத்துப்பரணி (ஆ). மூவருலா (இ). முக்கூடற்பள்ளு (ஈ). குற்றாலக் குறவஞ்சி

15. ‘பதும முகம் மலர்ந்தாரைப் பார்மின்! பார்மின்!’ என்ற தொடர் அமைந்த இலக்கியம் எது?.

(அ). மூவருலா (ஆ). குற்றாலக் குறவஞ்சி (இ). முக்கூடற்பள்ளு (ஈ). கலிங்கத்துப்பரணி

16. ‘உயர்தனிச் செம்மொழி’ என்றமைந்த கட்டுரையின் ஆசிரியர் யார்?.

(அ). பரிதிமாற் கலைஞர் (ஆ). இராசமாணிக்கனார் (இ). இளவழகனார் (ஈ). சுந்தரவடிவேலு

17. ‘பத்தினிக் கோயில்’ எழுப்பப்பெற்ற காலம் யாது?.

(அ).4–ஆம் நூற்றாண்டு (ஆ).2–ஆம் நூற்றாண்டு (இ).5 –ஆம் நூற்றாண்டு (ஈ).6 –ஆம் நூற்றாண்டு

18. ‘நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்’ எனக் கூறுகின்ற இலக்கியம் எது?.

(அ). குறுந்தொகை (ஆ). புறநானூறு (இ).மணிமேகலை (ஈ). நற்றிணை

19. ‘கற்றனைத்து ஊறும் அறிவு’ என வலியுறுத்துகின்ற உரைநடைப் பகுதியின் தலைப்பு எது?.

(அ). வாழ்க்கை (ஆ). உயர்தனிச் செம்மொழி (இ). மணற்கேணி (ஈ). ஆளுமைத்திறன் அறிவோம்

20. வெற்றிக்கான, நேர்மறை மனப்பான்மைக்குத் துணையாவது _____________.

(அ). கல்வி (ஆ). அறிவு (இ). செல்வம் (ஈ). தலைமைப் பண்புகள்

21. நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராது இருத்தல் என்ற கொள்கையுடன் வாழ்ந்தவன் யார்?

(அ). பாரதியார் (ஆ). பாரதிதாசன் (இ). அப்துல் ரகுமான் (ஈ). தருமு சிவராம்

22. ஷெல்லிதாசன் என்று தன்னை அழைத்துக் கொண்டவர் யார்?

(அ). தருமு சிவராம் (ஆ). அப்துல் ரகுமான் (இ). சுகந்தி சுப்ரமணியம் (ஈ). பாரதியார்

23. ‘மனமே வாழ்வின் உயிர்நிலையாம்’ என்று கூறிய கவிஞர் யார்?

(அ). அப்துல் ரகுமான் (ஆ). பாரதியார் (இ). சுகந்தி சுப்ரமணியம் (ஈ). கவிமணி

24. கிழக்குப்பெண் விட்டெறிந்த கிளிச்சிறைப் பந்து எது?

(அ). நிலவு (ஆ). சூரியன் (இ). பூமி (ஈ). விண்மீன்

25. ஆசிய ஜோதி என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ). அப்துல் ரகுமான் (ஆ). பாரதியார் (இ). சுகந்தி சுப்ரமணியம் (ஈ). கவிமணி

26. தாய்வீடு வரும் செல்லமகளுக்கு அடையா நெடுங்கதவாய் இருப்பது எது?

அ). பாலக்காட்டுக் கணவாய் (ஆ). பாரதப்புழை (இ). சிறுவாணி (ஈ). ஆழியாறு

27. சாதி இருட்டைப் போக்கிய கேரளத்து ஞாயிறு யார் ?

அ). அப்துல் ரகுமான் (ஆ). பாரதியார் (இ). ஸ்ரீநாராயணகுரு (ஈ). கவிமணி

28. ஆசாரம் என்பதன் பொருள் யாது?

அ). ஒழுக்கம் (ஆ). அன்பு (இ). அறிவு (ஈ). ஆக்கம்

29. தீராக் கோபம் எதில் முடியும் என்கிறார் ஔவையார்?

(அ). போரில் (ஆ). உறவில் (இ). பகையில் (ஈ). பொறையில்

30. பேதமை என்பது பெண்களுக்கு அணிகலன் என்று கூறியவர் யார்?

அ). திருவள்ளுவர் (ஆ). பாரதியார் (இ). ஔவையார் (ஈ). புத்தர்

31. ‘ மரம் போன்றவர்கள் ’ என வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?.

(அ).கல்வியில்லாதாரை(ஆ).செல்வமில்லாதாரை(இ).சுற்றமில்லாதாரை (ஈ). பண்பில்லாதாரை

32. முன்றுறைஅரையனார் எழுதிய நூல் எது?

(அ). ஆசாரக் கோவை (ஆ). கொன்றை வேந்தன் (இ). நீதி நூல் (ஈ). பழமொழி நானூறு

33. பெண்களுக்குக் கூறப்படும் பருவங்கள் எத்தனை?

(அ). 5 (ஆ). 7 (இ). 8 (ஈ). 10

34. கிம்புரி என்பதன் பொருள் யாது?

(அ). மான்(ஆ). யானை (இ). சிங்கம் (ஈ). புலி

35. பாடப்பகுதியில் , மலை வளத்தைக் கூறும் சிற்றிலக்கியம் எது?.

(அ). மூவருலா (ஆ). குற்றாலக் குறவஞ்சி (இ). முக்கூடற்பள்ளு (ஈ). கலிங்கத்துப்பரணி

36. ‘கலிங்கத்துப் பரணி’ என்னும் நூலின் ஆசிரியர் யார்?.

(அ). குமரகுருபரர் (ஆ). ஒட்டக்கூத்தர் (இ). செயங்கொண்டார் (ஈ). என்னயினாப் புலவர்

37. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியின் தமிழ்ப் பெயர் யாது?.

(அ). சந்திரன் (ஆ). தமிழன் (இ). பரிதிமாற்கலைஞர் (ஈ). இந்திரன்

38. கடவுளர்க்கு முதன் முதலில் கற்கோவிலைக்கட்டிய மன்னன் யார்?

(அ).மகேந்திரவர்மன் (ஆ).முதலாம் இராஜராஜ சோழன் (இ).சோழமன்னன் (ஈ). பாண்டியன்

39. கல்வித் தந்தை என்று அனைவராலும் அழைக்கப்படுபவர் யார்?

(அ). அப்துல் ரகுமான் (ஆ). நெ.து. சுந்தரவடிவேலு (இ). சுகந்தி சுப்ரமணியம் (ஈ). கவிமணி

40. அப்பாவு என்ற இயற்பெயரைக்கொண்டவர் யார்?

அ). அப்துல் ரகுமான் (ஆ). பாரதியார் (இ). இளவழகனார் (ஈ). கவிமணி

41..பாரதியாருக்கு பெற்றோர் இட்ட பெயரைக் கூறுக.

(அ) சுப்பையா (ஆ) சுப்பிரமணியம் (இ) பாரதி (ஈ) காளிதாசன்

42.‘‘எங்கெங்கு காணினும் சக்தியடா’’ –என்னும் பாடலால், பாரதியின் பாராட்டினைப் பெற்ற கவிஞர் யார்?

(அ) சிற்பி பாலசுப்பிரமணியம் (ஆ) கவிமணி.தேசிக விநாயகம்பிள்ளை

(இ) கவிக்கோ. அப்துல் ரகுமான் (ஈ) புரட்சிக்கவிஞர். பாரதிதாசன்

43.‘ஒற்றுமையே உயிர்நிலை’ – என்ற கவிதை எந்தக் கவிதைத்தொகுதியில் இடம்பெற்றதாகும்?

(அ) காந்தளூர்ச்சாலை (ஆ) ஆசிய ஜோதி (இ)மலரும் மாலையும் (ஈ) மருமக்கள் வழிமான்மியம்

44.‘கால வழு’- என்ற கவிதைக்குச் சொந்தக்காரர் யார்?

(அ) கவிஞர் தாமரை (ஆ) கவிஞர். எஸ். வைத்தீஸ்வரன் (இ) கவிக்கோ. அப்துல்ரகுமான் (ஈ)கவிஞர். எஸ். சுகந்திசுப்பிரமணியம்.

45.‘கதகளி’ –எந்த மாநிலத்தின் நடனம்?

(அ) தமிழ் நாடு (ஆ) கேரளா (இ) ஆந்திரா (ஈ) கன்னடம்

46.. ‘நாசி’ – என்பதின் பொருள் யாது?

(அ) முகம் (ஆ) மூக்கு (இ) வாய் (ஈ) காது

47. ‘விரல் மீட்டிய மழை’ -என்னும் கவிதை எதன் இயல்பைப் புலப்படுத்துகின்றது?

(அ) விடியல் நேரம் (ஆ) நள்ளிரவு (இ) மாலை நேரம் (ஈ) நண்பகல் நேரம்

48. கவிஞர் .எஸ்.வைத்தீஸ்வரன் ‘‘கோழியுடன்’’ ஒப்பிடும் பொருள் யாது?

(அ) தொலைக்காட்சி (ஆ) காலண்டர் (இ) கடிகாரம் (ஈ) மின்விசிறி

49. ‘மூத்தோர் சொல்வார்த்தை’ –என்பது எதைப்போன்றது?

(அ) பால் (ஆ) நஞ்சு (இ) தேன் (ஈ) அமிர்தம்

50. ‘நிகரில் ஞானச் சோதி நூல்’ –என்று மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை கீழ்க்காணும் எந்நூலைப் போற்றியுள்ளார்?

(அ) நீதி நூல் (ஆ) கொன்றைவேந்தன் (இ) திருக்குறள் (ஈ) பழமொழி நானூறு

51. திருக்குறளின் பெரும் பிரிவை - எவ்வாறு வழங்குகின்றோம்?

(அ) பால் (ஆ) இயல் (இ) அதிகாரம் (ஈ) குறட்பா

52. அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் -என்பதில்,‘மரம்’ என்பதன் பொருள் யாது?

(அ) விலங்கு (ஆ) மனிதர் (இ) மண் (ஈ) தேவர்

53. ‘சான்றோர்’ –என்பதன் பொருள் கூறுக.

(அ) கள்வர் (ஆ) அறிவுடையோர் (இ) ஞானி (ஈ) தவசி

54. ‘‘குழவி மருங்கினும் கிழவதாகும்’’ –எனும் தொல்காப்பிய நூற்பா எவ்விலக்கியத்திற்கு வித்தாக அமைந்துள்ளது?

(அ) பள்ளு (ஆ) பரணி (இ) பிள்ளைத்தமிழ் (ஈ) தூது

55. ‘கவிச்சக்கரவர்த்தி’ என்றழைக்கப்படும் புலவர் பெயரைக் கூறிடுக?

(அ)இளங்கோவடிகள் (ஆ) ஒட்டக்கூத்தர்(இ) வள்ளுவர் (ஈ)பெருவாயின்முள்ளியார்

56. ‘வானரங்கள்’ என்பதின் பொருள் யாது?

(அ) கருங்குரங்குகள் (ஆ)ஆண்குரங்குகள் (இ) பெண்குரங்குகள் (ஈ)மந்திகள்.

57. திருநெல்வேலி மாவட்டத்துப் பேச்சு வழக்கு -இடம்பெறும் சிற்றிலக்கியம் எது?

(அ) பழமொழி நானூறு (ஆ) முக்கூடற்பள்ளு (இ) மூவருலா (ஈ) கலிங்கத்துப்பரணி

58. ‘‘பொருதடக்கை வாளெங்கே? மணிமார் பெங்கே?’’ - இச்சொற்றொடர் அமைந்த சிற்றிலக்கியத்தின் பெயர் யாது?

(அ) குறவஞ்சி (ஆ) பள்ளு (இ) பிள்ளைத்தமிழ் (ஈ) கலிங்கத்துப்பரணி

59. ஒரே கல்லைக் கோவிலாக அமைத்த பெருமை -யாருக்குரியது?

(அ) பாண்டியர் (ஆ) சேரர் (இ) பல்லவர் (ஈ) சோழர்

60.கல்வித்தந்தை–என்றுஅனைவராலும்அன்புடன்அழைக்கப்படுபவர்யார்?

(அ)நெ.து.சுந்தரவடிவேலு(ஆ)பரிதிமாற்கலைஞர் (இ)இளவழகனார்(ஈ)இராசமாணிக்கனார்

61.தன்னை ‘ஷெல்லிதாசன்’ என்று அழைத்து மகிழ்ந்தவர் யார்?

அ)வாணிதாசன் ஆ)கண்ணதாசன் இ)பாரதிதாசன் ஈ) பாரதியார்

62.பாரதிதாசனின் படைப்பிலக்கியம் பின்வருவனவற்றுள் எது?

அ) பாண்டியன்பரிசு ஆ)பாஞ்சாலிசபதம் இ)ஆசியஜோதி ஈ)நகரச்சுவர்கள்

63.’ஒற்றுமையே உயிர்நிலை’ என்னும் கவிதையின் ஆசிரியர் யார்?

அ) பாரதியார் ஆ)சுரதா இ)பாரதிதாசன் ஈ)கவிமணி

64..விரல் மீட்டிய மழை …….. சார்ந்த கவிதைத் தொகுப்பாகும்.

அ)சூழலியல் ஆ) அழகியல் இ) நாட்டுப்புறவியல் ஈ) திறனாய்வியல்

65.பெண்ணியம் சார்ந்த கருத்தினை தன் கவிதைப் படைப்புகளில் வெளிப்படுத்துவர் யார்?

அ) சுகந்தி சுப்பிரமணியம் ஆ).தாமரை இ) கவிமணி ஈ) தாராபாரதி

66.முதன் முதலாய் அம்மாவுக்கு கவிதையின் ஆசிரியர் ……………

அ) பிரமிள் தருமு.சிவராம் ஆ) தாமரை இ) வைரமுத்து ஈ) கவிமணி

67.பிரமிள் தருமு சிவராமின் கவிதைப் படைப்பு பின்வருவனவற்றுள் எது?

அ) மலையாளக் காற்று ஆ) வாழ்க்கை இ) மழைக்குறிப்பு ஈ) கால வழு

68.ஆசாரம் என்பதன் பொருள் …………யாது?

அ) ஒழுக்கம் ஆ)வீரம் இ) வாழ்க்கை ஈ) போர்நிலை

69.ஔவையார் தாயையும் தந்தையையும்……… எனப் போற்றுகிறார்?

அ) நட்பு ஆ) தெய்வம் இ) உறவுகள் ஈ) குரு

70.திருக்குறள் ……. பிரிவுகளை உடையது.

அ) மூன்று ஆ) ஏழு இ) ஐந்து ஈ) ஆறு

71.பழமொழி நானூறின் ஆசியர் யார்?

அ) திருவள்ளுவர் ஆ) ஔவையார் இ) முன்றுறை அரையனார் ஈ) பெருவாயின் முள்ளியார்.

72.பாட்டுடைத் தலைவரை, குழந்தையாகப் பாவித்து பாடுகின்ற இலக்கியம் எது?

அ)பள்ளு ஆ) குறவஞ்சி இ). பிள்ளைத்தமிழ் ஈ). தூது

73. ‘ஓதிமம்’ என்பதன் பொருள் யாது?

அ) வாளைமீன் ஆ) முத்து இ)அன்னப்பறவை ஈ) நிலவு

74.குற்றாலக் குறவஞ்சி …………..வளம் பற்றிக் கூறுகின்றது.

அ) நகர் ஆ) மலை இ) செல்வம் ஈ) மழை

75.போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்றவன் மீதுப் பாடப்படுவது………

அ) பள்ளு ஆ) பரணி இ) தூது ஈ) உலா

76.வி.கோ.சூரியநாராயண சாத்திரியார் தன் பெயரைத் தமிழில் எவ்வாறு மாற்றிக்கொண்டார்?

அ) உ.வே.சா ஆ) கால்டுவெல் இ) பரிதிமாற்கலைஞர் ஈ) மறைமலையடிகள்

77.கல்வி ….. போன்றது.

அ)ஒற்றுமை ஆ) மணற்கேணி இ) வளமை ஈ) சிறப்பு

78.அப்பாவு என்ற இயற்பெயர் கொண்டவர் ……..யார்?

அ) இளவழகனார் ஆ) இளங்கோவடிகள் இ)மறைமலையடிகள் ஈ) சிற்பி

79.காலம் அனைவருக்கும் ……..

அ) நிலையானது ஆ) பொதுவானது இ) இயல்பானது ஈ) சுகமானது

80.தாவாரம் -இச்சொல்லின் திருந்திய வடிவத்தைக் குறிப்பிடுக.

அ) தால்வாரம் ஆ) தாழ்வாரம் இ) தாள்வாரம் ஈ) தாவாரம்

81. பன்மொழிப் புலமையாளன் யார்?

அ.பாரதியார் ஆ.பாரதிதாசன் இ.வாணிதாசன் ஈ.கண்ணதாசன்

82. 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்னும் பாடலைப் பாடியவர் யார்?

அ.பாரதிதாசன் ஆ.பாரதியார் இ.கவிமணி ஈ.கண்ணதாசன்

83. மலையாளக்காற்று – என்னும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் யார்?

அ.வைரமுத்து ஆ.கவிமணி இ.சிற்பி பாலசுப்பிரமணியன் ஈ.பாரதிதாசன்

84. பெண்ணியச் சிந்தனையாளர் யார்?

அ.கவிஞர் தாமரை ஆ.பாரதியார் இ.பாரதிதாசன் ஈ.கண்ணதாசன்

85. கவிஞர் வைரமுத்து எழுதிய கவிதையின் பெயர் என்ன?

அ.மலையாளக்காற்று ஆ.அம்மாவுக்கு இ.அப்பாவுக்கு ஈ.சுயசரிதை

86. ஆசாரக்கோவையின் ஆசிரியர் யார்?

அ.ஔவையார் ஆ.ஒட்டக்கூத்தர் இ.இளவழகனார் ஈ.பெருவாயின் முள்ளியார்

87."ஞானக்குறள்" - நூலை இயற்றியவர் யார்?

அ.ஔவையார் ஆ.திருவள்ளுவர் இ.ஒட்டக்கூத்தர் ஈ.பாரதியார்

88. திருக்குறள் - பொருட்பாலில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?

அ.25 ஆ.38 இ.70 ஈ.133

89. பழமொழி நானூற்றில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?

அ.5 ஆ.100 இ.200 ஈ.400

90.திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் யாரைப்பற்றிப் பாடியது?

அ.முருகன் ஆ.சிவன் இ.விநாயகர் ஈ.கண்ணன்

91.திரிகூடராசப்பக்கவிராயர் பிறந்த ஊர் எது?

அ.குற்றாலம் ஆ.கொல்லிமலை இ.இமயமலை ஈ.மேலகரம்

92.முக்கூடற் பள்ளு - நூலை இயற்றியவர் யார்?

அ.ஒட்டக்கூத்தர் ஆ.ஔவையார் இ.என்னயினாப் புலவர் ஈ.திருவள்ளுவர்

93.கலிங்கத்துப்பரணி நூலில் குறிப்பிடப்படும் களம் எது?

அ.ஏர்க்களம் ஆ.போர்க்களம் இ.நீர்க்களம் ஈ.மரக்களம்

94.குற்றாலக்குறவஞ்சியில் குறிகேட்கும் பெண்ணின் பெயர் என்ன?

அ.ஔவையார் ஆ.குறத்தி இ.வசந்தவல்லி ஈ.வள்ளி

95.பரிதிமாற்கலைஞரின் இயற்பெயர் என்ன?

அ.சாத்திரியார் ஆ.இராசமாணிக்கனார் இ.இளவழகனார் ஈ.சூரியநாராயண சாஸ்திரியார்

96."தமிழ்நாடு" நாளிதழில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர் யார்?

அ.இளவழகனார் ஆ.வைரமுத்து இ.வைத்தீஸ்வரன் ஈ.சுந்தரவடிவேலு

97."அப்பாவு" – என்ற இயற்பெயரைக் கொண்டவர் யார்?

அ.ஒட்டக்கூத்தார் ஆ.இளவழகனார் இ.வைத்தீஸ்வரன் ஈ.வைரமுத்து

98.கல்வித் தந்தை என்று அனைவராலும் அழைக்கப்படுபவர் யார்?

அ.இளவழகனார் ஆ.இராசமணிக்கனார் இ.சுந்தரவடிவேலு ஈ.பரிதிமாற்கலைஞர்

99.வருமுன் காப்பவன் ------ யார்?

அ.புத்திசாலி ஆ.முட்டாள் இ.அறிவாளி ஈ.கோமாளி

100.ஆஸ்தி – என்பதன் தமிழாக்கம் என்ன?

அ.அழகு ஆ.அலுவலர் இ.சொத்து ஈ.நீக்கம்

## பகுதி – ஆ

**அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளி:**

1. ‘மனமே வாழ்வின் உயிர் நிலையாம்’ – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக..
2. ‘உருவுகண்டு எள்ளாமை வேண்டும்’ என்பதற்குத் திருக்குறள் வழியாக விளக்கம் தருக.
3. ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களைப் பட்டியலிடுக.
4. பல்லவர் காலக் கட்டடக் கலைச் சிறப்புப் பற்றிக் குறிப்பிடுக.
5. ‘அகத்தின் அழகு முகத்தில் தெரியும்’ – பழமொழிக்கான விளக்கம் தருக.
6. பாரதிதாசன் பற்றி சிறுகுறிப்பு தருக?
7. திருக்குறளின் சிறப்பை எடுத்து இயம்புக?
8. ஆசாரக்கோவை குறிப்பிடும் ஐங்குரவர் யாவர்?
9. கலிங்கத்துப்பரணி பற்றி விளக்கம் தருக?
10. மா.இராசமாணிக்கனார் பற்றி சிறுகுறிப்பு தருக?
11. மழைக்குறிப்புக் கவிதையின் வழி கவிஞர் தாமரையின் உள்ளக்குறிப்பைச் சுட்டுக?
12. மனமே வாழ்வின் உயிர் நிலையாம் – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக?
13. தாய்தந்தையரை வணங்கல் பற்றி வேதநாயகம் பிள்ளை கூறும் கருத்துக்களைஉரைக்க?
14. பிள்ளைத் தமிழ் பெயர் விளக்கம் தருக?
15. ”சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்”- வாக்கியத்தில் அமைக்க
16. பாரதியார் தமது கவிதை வாயிலாகப் பட்டியலிடும் இந்தியச் சான்றோர்களின் பெயர்களை எழுதுக?
17. ‘‘வானக் குருசில் வள்ளலாய’’ - இடம் சுட்டிப் பொருள்விளக்கம் தருக.
18. வினைத்திட்பத்தின் இன்றியமையாமை குறித்து எழுதுக?
19. கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ள இசைஇலக்கணம் கூறிடும் நூல்களைக் குறிப்பிடுக?
20. எவ்வழி நல்லவராடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே’’ –என்னும் புறப்பாடலின் பொருள் கூறுக?
21. பாரதிதாசன் இயற்றிய நூல்கள் யாவை?
22. பரணி – பெயர்க்காரணம் கூறுக.
23. ‘‘மரம் போல்வர்’’-என்று வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?
24. நாடகத்தமிழின் சிறப்புகளைச் சுட்டுக.
25. ஆளுமைத்திறன் என்றால் என்ன?

## பகுதி – இ

**பெருவினாக்கள்:**

1. ‘மண்படு கல்வி’ எனப் பாரதியார் சாடுவதற்குரிய காரணங்களைப் பட்டியலிடுக.
2. பாடப்பகுதியில் அமைந்துள்ள பெண்ணியக் கவிதைச் சிந்தனைகளைக் குறிப்பிடுக.
3. மக்கள் பண்பின் இன்றியமையாமையைத் திருக்குறளின் வழி விளக்குக.

4. கொன்றைவேந்தன் வலியுறுத்துகின்ற நன்னெறிகளை விவரி.

5. இராசராசனின் சிறப்புகளை, மூவருலா வழியே விவரி

6. போர்க்களக் காட்சிகளைக் கலிங்கத்துப்பரணி வழியே சுட்டுக.

7. வாழ்க்கை நன்னெறிகளை, பாடப்பகுதி கட்டுரை வழியே தொகுத்துரைக்க.

8. ‘வெற்றிக்கு அடிப்படை, ஆளுமைத் திறன்களே’ என்பதை நிறுவுக.

9. நாளிதழ் விளம்பர அடிப்படையில், வேலை வேண்டி விண்ணப்பம் எழுதுக.

10. கருத்தரங்கில் பங்கேற்க அனுமதிவேண்டி, துறைத்தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக.

11.ஆங்கிலக் கல்வியின் தாக்கத்தை எச்சரிக்கை செய்த பாரதியின் உள்ளக்கருத்தைப் புலப்படுத்துக.

12. மலையாளக் காற்று என்னும் கவிதைவழி கேரளத்துச் செய்திளை சிற்பி உரைக்கும் பாங்கை விவரி?

13. ஆசாரக் கோவை உணர்த்தும் வாழ்வியல் நெறிமுறைகளைப் பட்டியலிடுக.

14.ஔவையார் உணர்த்தும் நீதிக்கருத்துக்களைத் தொகுத்துரைக்க

15. குறத்தி கூறும் குற்றால மலையின் சிறப்புக்களைக் கட்டுரைவடிவில் எழுதுக

16.கலிங்கத்துப் பரணியின் வழி போர்க்களக் காட்சியை விவரி?

17. உயர்தனிச் செம்மொழியின் தனிச்சிறப்புக்களை எடுத்தியம்புக?

18.பழந்தமிழ் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

19. தமிழ் மன்ற நிகழ்வை நாளிதழில் கட்டடக்கலைபற்றி இராசமாணிக்கனார் வெளியிடவேண்டி பதிப்பாசிரியருக்கு விண்ணப்பம் தயார் செய்க.

20.வேலைவேண்டி தன்விவரக் குறிப்பு ஒன்றைத் தயார் செய்க.

21. ஆங்கிலக் கல்வி பயிலும் மாணாக்கர் இயல்புகுறித்து பாரதி கூறிடும் கருத்துக்களைப் புலப்படுத்திடுக?

22. ‘ஒற்றுமையே உயிர்நிலை’ – என்னும் கவிதையின் வாயிலாக வெளிப்படும் ஒற்றுமைச்சிந்தனையை விளக்குக?

23. ‘பண்புடைமையின்’ முக்கியத்துவம் குறித்து சான்றுடன் நிறுவுக?

24. ‘நீதி நூல்’ தரும் அறக் கருத்துக்களை விளக்குக?

25. ‘‘குற்றாலக் குறவஞ்சியின்’’ வாயிலாக குறமக்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக்காட்டிடுக?

26. கலிங்கத்துப்பரணி காட்சிப்படுத்திடும் போர்க்கள நிகழ்வுகளைக் கூறுக?

27. ’ வாழ்கை’–என்னும் கட்டுரை விளம்பிடும் ‘வாழ்வியல் கூறுகளை’ வகைப்படுத்துக?

28. ஆளுமைத் திறனை மேம்படுத்தும் காரணிகளை விளக்குக?

29. பேச்சுப்போட்டியில் மாநிலத்தில் முதலிடம் பெற்ற நண்பனுக்கு பாராட்டு மடல் வரைந்திடுக.

30. நாளிதழின் விளம்பர அடிப்படையில், வேலை வேண்டி விண்ணப்பம் எழுதுக.

31. ஆங்கிலவழிக் கல்வி குறித்து பாரதியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக?

32. கவிமணி ‘‘ஒற்றுமையே உயிர்நிலை’’ எனும் கவிதைத் தொகுப்பின் வாயிலாக உணர்த்தும் செய்திகளை விளக்குக.

33. கொன்றைவேந்தன் வழி ஔவையார் கூறும் அறக்கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

34 .பண்புடைமையின் சிறப்புகளாக வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

35. திருக்குற்றால மலையின் சிறப்பினையும், இயற்கை வளத்தினையும் பற்றி விளக்கு.

36. பரணி இலக்கியத்தில் அமைந்த போர்க்கள நிலைகளை எடுத்துரைக்க.

37. தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி – என்பதைச் சான்றுடன் விளக்குக.

38. வாழ்கையின் நிலையினையும் அவற்றின் சிறப்புகளையும் இளவழகனார் வழி விளக்குக.

39. கல்லூரி விழா நிகழ்வினை வெளியிட வேண்டி,நாளிதழின் பதிப்பாசிரியருக்குக் கடிதம் வரைக.

40. நாளிதழ் விளம்பர அடிப்படையில்,வேலை வேண்டி விண்ணப்பம் வரைக.

41. மகாகவி பாரதியாரின் ஆங்கிலக்கல்வி முறையினை விரிவாக விவரி?

42. கவிஞர் வைரமுத்துவின் அம்மாவுக்கு கவிதையைப் பற்றி விவரி?

43. கொன்றைவேந்தன் வலியுறுத்தும் நீதிக்கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக?

44. பழமொழி நானூறு எடுத்துரைக்கும் செய்திகளை விவரி?

45..குற்றாலக்குறவஞ்சியில் குறத்தி கூறும் மலைவளங்களைத் தொகுத்துக் கூறு?

46. கலிங்கத்துப்பரணியின் போர்க்களச் செய்திகளை விவரி?

47. தமிழ் உயர்தனிச் செம்மொழி என்பது பற்றி விவரி?

48. ஆளுமைத்திறன் மேம்பாடு பற்றி விரிவாக விவரி?

49. நண்பனுடைய தேர்வு வெற்றியைப் பாரட்டிக் கடிதம் வரைக?

50. வேலை வேண்டி விண்ணப்பம் எழுதுக?